பேசும் படம்

டிஸம்பர் 1958 — 75 காசு

மொராக் ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ்

பாண்டித்தேவன்

சிந்தனைச் சுடரின் ஒளி விளக்கு

டைரக்ஷன்

K. சுப்பிரமண்யம், B.A.B.L.

நடிகர்கள் : டி. கே. பாலசந்திரன், பி. எஸ். சரோஜா, ராஜசுலோசனா, ராகினி, சந்திரபாபு, எஸ். வி. சகஸ்ரநாமம், எம். ஜி. சக்கரபாணி, டி. கே. பகவதி, என் எஸ். கே. மதுரம். பி. எஸ். ஞானம், டி. பி. முத்துலக்ஷ்மி, அசோகன், மாஸ்டர் குமார் மற்றும் பலர்.

வசனம் : முகவை - இராசமாணிக்கம்

சங்கீதம் : C. N. பாண்டுரங்கன்

பூரண உரிமையாளர்கள்

ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் – 15, முதல் மெயின் ரோட்

காந்தி நகர் - சென்னை 20.

866
4-58
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 DEC 1958
MADRAS

இசையும் காதலும்
இரண்டறக்கலந்த
இன்பக் காவியம்

தியாகராஜ் புரொடக்ஷன்ஸ்

அமரதேவி

காமிரா வின்ஸெண்ட்
ஆர்ட் சங்கரன் குட்டி
கதை வசனம் K.S. கோபாலகிருஷ்ணன்
இசையமைப்பு S. ராஜேஸ்வரராவ்
ஸ்டுடியோ வாஹினி
தயாரிப்பு S. ராமகிருஷ்ணன்
டைரக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா

A.K. GOPAL & CO.

Rights Controlled by N. சுந்தரம் அய்யர், சென்னை-17.

பி.வி. சாம்பார் பொடி

உண்மையான மணத்திற்கும் ருசிக்கும்.

பி. வெங்கிடாசலம் காண்டிமெண்ட்ஸ்.,
நெ. 1. பிராட்வே-மதராஸ்.1.

89691

(டிலக்ஸ்) தானாகவே 50 முறை சுடும் பிஸ்டல்

லைசென்ஸ் தேவையில்லை. தானாகவே இயங்கி, 50 முறைகள் சுடக்கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல். இது வெடிக்கும்போது வரும் பயங்கர ஒலியும், தீப்பொறிகளும், திருடர்களையும் வன விலங்குகளையும் பயப்படச் செய்யும். சினிமா, நாடக நடிகர்களுக்கு முற்றிலும் பயன்படக்கூடியது. விரோதிகளிடமிருந்து தப்பவும் மற்றும் இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கும் உங்களுக்கு சிறந்த துணை இது. விலை ரூ. 10/50. வி. பி. பி. சார்ஜ் ரூ. 2/50. 25 ரவைகள் இலவசம். அதிகப்படி ரவை டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 1. பிஸ்டல் கேஸ் விலை ரூ. 3. பிஸ்டலை சுத்தம் செய்யும் எண்ணெய் ஒரு சீசா ரூ. 1. (திருப்திக்கு உத்தரவாதம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.)

எலக்ட்ரிக் & ரேடியோ கைட்: சிறந்த மெக்கானிக்காக மாற உதவும் புத்தகம். 117 படங்கள் கொண்டது. ரூ. 15 செலவில் வீட்டிலேயே ரேடியோ தயாரிக்கவும், மற்றும் ரேடியோ ரிப்பேர் செய்வது, வயரிங், எலெக்ட்ரிகெல் மெகானிஸம் மற்றும் மின்சார சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள உதவும் புத்தகம். வேறு தொழில்கள் பற்றியும் கற்கலாம். புதுப்பிக்கப்பட்ட பதிப்பு ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1. தையற்கலையும், துணிகள் கத்தரிப்பதும் ரூ. [illegible] சோப்புகள் தயாரிப்பது ரூ. 3. புகைப்படக்கலை ரூ. 3. வாசனை திரவியம் செய்யும் முறை ரூ. 1-50. ஒரே மாதத்தில் ஹிந்தியைக் கற்க உதவும் புத்தகம் ரூ. 4. திருமண வாழ்க்கையின் நுணுக்கங்கள் 88 படங்களுடன் ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1-25 ஒன்று முதல் மூன்று புத்தகங்களுக்கு.

TARUN TRADERS. (P.P.) P. B. 19 ALIGARH (INDIA)

படம் 17

காட்சி 4

பேசும்படம்

★ டிசம்பர் 1958 ★

பொருளடக்கம் — பக்கம்

1. செய்திச் சுருள் ... 4
2. சூரியன் உதிக்கும் நாட்டில் சுற்றினேன் ஒரு மாதம் ... 8
3. 'இல்லறிகம்' படத்தில் ஜமுனு (வர்ணப் போட்டோ) ... 18
4. வி. எஸ். பி. யின் தயாரிப்பில் ராகினி (வர்ணப் போட்டோ) ... 19
5. 'ரிஷ்ய சிருங்க'ரில் ராஜ சுலோசனு (வர்ணப் போட்டோ) ... 20
6. நியூ ஏஞ்சல் - ஆர். ஏ. பிக்சர்ஸ் தயாரிப்பில் பத்மினி பிரியதர்சினி (வர்ணப் போட்டோ) ... 21
7. நான் ரசித்த காட்சி ... 26
8. கதாநாயகன் நிலை ... 31
9. ஸ்டுடியோ விஜயம் ... 41
10. மதுரையில் 'மதுரை வீரன்' ... 48
11. கொண்டை வகைகள் ... 52
12. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் (படக்காட்சிகள்) ... 57
13. வெட்டுங்கள் வெட்டுங்கள் ... 65
14. புதிய வெளியீடுகள் ... 70
15. நான் வளர்த்த தங்கை (திரைக் கதை - வசனம் ... 73
16. தெய்வ பலம் (படக்காட்சிகள்) ... 81
17. உலகம் சிரிக்கிறது (படக்காட்சிகள்) ... 85
18. கேள்வி - பதில் ... 90
19. தபால் பெட்டி ... 98
20. திரைமறைவில் கலைநிபுணர் ... 103

★ SEVENTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, 17, General Patters Road, Madras-2. (Phone 86001) Proprietors: Ramanath Publications. Managing Editor: T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:
17, General Patters Road, Madras-2.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon

அம்மா எல்லாம் சௌக்கியமா?

சங் : சௌக்கியங்க. (கணக்க பிள்ளையை பார்த்து) கணக்கப் பிள்ளையா...? சௌக்கியமா?

கண : இருக்கேங்க. நல்ல சமயத்திலே நீங்களும் வந்துட்டீங்க.

ராம : (வந்து) கும்பிடுறேங்க.

சங் : என்ன ராமா, சுகமா?

ராம : உங்க தயவிலே ஒரு குறைச்சலும் இல்லீங்க.

ஷண் : கணக்கப்பிள்ளை, சொல்லுங்கய்யா.

கண : நம்ம சின்னம்மா கலியாண விஷயத்தைப் பத்தித் தான் பேசிக்கிட்டிருக்கோம்.

சங் : அப்படியா! மாப்பிள்ளை யாரு?

ஷண் : நம்ம கோவிந்தம் பிள்ளையோட மருமகப்பிள்ளை தான்.

சங் : ஓகோ, அவனா? சுந்தரம் எனக்கு நல்லாத் தெரியுமே. நம்ம பத்மாவுக்கு பொருத்தமான பையன் தான். ஆமா, பத்மா என்ன சொல்லுது?

கண : அவங்களுக்கு பூரண சம்மதங்க. அதை தெரிஞ்சிக்கிட்டு பெரியம்மா தான் இந்த யோசனையைச் சொன்னாங்க.

சங் : வெரி குட். எப்ப முகூர்த்தம்?



ஷண் : உங்களைக் கலக்காமலா? முதல்லே நீங்க குளிச்சுட்டு சாப்பிடுங்க.

சங்கர் முரளியை வேலைக்காரனிடம் கொடுத்துவிட்டு செல்கிறான்.

சங் : பார்வதி! என்மேலே ரொம்ப கோபமா இருப்பே, இல்லே.

பார் : ஏங்க கோபம்?

சங் : பார்வதி...!

பார் : காபி ஆறிப்போகும், வாங்க சாப்பிடலாம.

சங் : ...ன் தங்கச்சி கலியாணம் ரெ... தடபுடலா நடக்கும் இல்லே!

பார் : நடக்கும். என்னத் தான், நீங்க தானே இருந்து நடத்தி வைக்கவேண்டியது?

சங் : ஆமாமா....நான் தான் முன்னாலே இருந்து நடத்த வேண்டியவன். ஏன்னா வீட்டுக்கு பெரிய மருமவன் பாரு!

இப்படிக் கூறும்போது சங்கரின் முகத்திலே வஞ்சகம் பிரதிபலிக்கிறது. ஆனால், கள்ளங்கபடற்ற அப்பாவியான பார்வதி அவனைப் பற்றி சிறிதும் சந்தேகப்படவேயில்லை. அவன் தன்னைத் தேடி வந்துவிட்டதில் அவளுக்கு அலாதி திருப்தி. அந்த மகிழ்ச்சியில் அவள் அவனைப் பற்றிய பழைய விஷயங்களையும்கூட மறந்து விடுகிறாள். அவன்தான் அந்த வீட்டிற்கு மூத்த மருமகபிள்ளை. ஆகவே அவன் தான் எல்லாவற்றையும் முன் நின்று நடத்த வேண்டியவன். திருமணம் நிச்சயமான அன்றே அவன் வராதது பற்றி வேறு அவள் வருத்தத்தோடு கூறிவிட்டு, வீட்டாரின் ஆவலையும் பிரதிபலிக்கிறாள்.

பார் : கல்யாண நிச்சயித்துக்கே நீங்க இல்லேன்னு அப்பாவுக்கு ஒண்ணுமே ஓடலே. பத்மாகூட 'அத்தான் எங்கே, எங்கே'ன்னு பாடா படுத்திட்டா.

சங் : படுத்தி இருப்பா...படுத்தியிருப்பா. நல்ல வேளையா கடவுள்தான் இந்த சமயத்திலே இங்கே புடிச்சி தள்ளி இருக்காரு. ம்...அது சரி, இந்த மாப்பிள்ளையை எப்படிக் கண்டு புடிச்சிங்க?

பார்: அது ஒரு பெரிய கதை.

சங்: கதையா ... அதென்ன கதை?

சங்கருக்கு பார்வதியிடம் கதை கேட்பதில் விருப்பமிருக்க வில்லை. ஆனல் அவன் இப்போது ஏதோ ஒரு குறிக்கோளுடன் அங்கே வந்திருக்கிருன்! தன் காரியம் ஆவதற்காக அந்தக் கொடியவன், அங்கே வேஷம் போடுகிருன். தன்னை நம்பியிருக்கும் தன் உத்தம மனைவிக்குத் துரோகம் செய்து விட்டோமே என்று வருந்துவதற்குப் பதில், தன் கொடிய செயலுக்கு அவளிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு வந்திருக்கிருன் அவன், சங்கர் இப்போது நொடிந்து போயிருக்கிருன். அவனுக்குத் தேவையானதெல்லாம் பணம்தான் அதற்காக அவன் எதுவும் செய்யத் தயாராகி விட்டிருக்கிருன். தான் பிறந்தவீடு, தான் பெண்கொண்ட இடம் இரண்டிலுமுள்ள யாரிடமும் அவனுக்குப் பற்ருே பாசமோ கிடையாது, சூழ்நிலை அவனை அப்படிச் செய்து விட்டது. எப்போதாவது அவன் ஒருகணம் தன்னைப்பற்றி நினைக்கும் எண்ணத்தைக்கூட மாற்றி விட்டது. அவனது தகாத சகவாசம். இப்போதும் மனைவியை வஞ்சிக்கிருேமே என்ற எண்ணமின்றி, தனது வெளிவேஷ அன்பில் அவள் ஏமாறத் தயாராகிவிட்டதில் பெருமை பட்டுக் கொண்டு அவளிடம், பத்மாவின் திருமணம் நிச்சயமான கதையைக் கேட்க ஆவலுடன் இருப்பதைப்போல் நடிக்கிருன்.

ஷண்முகம் பிள்ளை, கோவிந்தம் பிள்ளையுடன் பேசிக் கொண்டிருக்க கணக்கப் பிள்ளையும் இருக்கிருர். ஷண்முகம் பிள்ளைக்கு இப்போது ஆனந்தம் தாங்க முடியவில்லை. பார்வதியும் பத்மாவும் அவரது இரு கண்கள். பார்வதிக்கு மணமாகி குழந்தையும் இருக்கிறது, ஊதாரியாகத் திரிந்த மாப்பிள்ளை சங்கரும் வந்து விட்டான். இப்போது பத்மாவுக்கும் திருமணம் நடக்கப் போகிறது. அவர் தன் மக்களுக்காக வாழ்ந்த குறிக்கோள் பூர்த்தியாகிவிடப் போகிறது. இனிமேல் அவர் நிம்மதியாக இருக்கலாம், இந்த மகிழ்ச்சியை அவர் வெளிப்படுத்துகிருர். அவரைவிட இதில் மகிழ்ச்சி கொள்பவர் கணக்கப் பிள்ளைதான். ஷண்முகம் பிள்ளையின் உப்பைத் தின்று, குழந்தைகளைத் தோளில் போட்டு வளர்த்தவர் அவர்தானே!

ஷண்: இன்னிக்கு எனக்கு பொன்னுன நாள். பத்மாவுக்குக் கல்யாணமும் முடிவாச்சு. என் மாப்பிள்ளையும் வந்திட்டாரு.

கோவி: உங்க மனசுக்கு எல்லாம் மங்களமாய் நடக்குமுங்க. ஒரு விஷயம்....முகூர்த்தம் எப்ப வச்சிக்கிடலாம்னு உத்தேசங்க...? ஏன்ணு நானும் காசு பணம் கொஞ்சம் சேக்கணும் பாருங்க.

ஷண்: காசு பணத்தைப்பத்தி நீங்க கவலைப்பட வேண்டாங்க. நான் பாத்துக்கறேன்.

கோவி: சரிங்க ... அப்ப நான் வரட்டுங்களா?

விடை பெறுகிருர்.

(105-ம் பக்கம் பார்க்க)

செய்திச் சுருள்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

நரசு ஸ்டூடியோ அடுத்து வெளியிடப்போகும் தமிழ்ப்படம் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'. 'எல்லோரும் ஓர் குலம் - எல்லோரும் ஓர் இனம்' என்ற உண்மையை விளக்கிடும் சித்திரம் இது. எஸ். எஸ். ராஜேந்திரன், பிரேம் நசீர், எஸ். வி. சுப்பய்யா, வி. கே. ராமசாமி, டி. பாலசுப்ரமணியம், பி. சரோஜாதேவி, கிரிஜா மற்றும் பலர் நடித்து வரும் இதை டி. எஸ். ராஜகோபால் டைரக்ட் செய்து வருகிறார். 'புது டெல்லி' என்ற ஹிந்திப்படத்தின் கதையைத் தழுவி இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

தனம் - சுசீலா சகோதரிகளில் மூத்தவரான நடிகை தனத்திற்கும் உதவி டைரக்டர் பி. சத்யநாராயணாவுக்கும் சென்ற மாதம் 19-ம் தேதியன்று திருப்பதியில் திருமணம் நடந்தது. இதையொட்டி மறுநாள் வாணி மகாலில் ஒரு வரவேற்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தம்பதிகளுக்கு நமது ஆசிகள்!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

அமரகவி பாரதியின் அறைகூவலை படத்திற்குத் தலைப்பாக வைத்து, அதை விளக்கும் வகையில் ஒரு சுவையான கதையையும் தேர்ந்தெடுத்து, பாரமவுண்டில் ஒரு படத்தை லலித கலா பிலிம்ஸார் தயாரித்து வருகிறார்கள். நடிகர் ஹொன்னப்ப பாகவதரின் சொந்தப் படக்கம்பெனி இது. எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்துவரும் இப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. பிரேம்நசீர், வி. ஆர். ராஜகோபால், ஓ. ஏ. கே. தேவர், ஏ. கருணாநிதி, எம். என். ராஜம், இ. வி. சரோஜா, கண்ணாம்பா முதலியோர் இப்படத்தின் நடிகர் பட்டியலில் காணப்படுகிறார்கள். கவர்ச்சி மிக்க நடனங்களும், பாமர ரஞ்சகமான அமைப்பும் கொண்டது இப்படம்.

பாரகனின் 'குலப்பெருமை'

'அன்னையின் ஆணை'யை வெளியிட்டுள்ள பாரகன் பிக்சர்ஸார் தங்களது மூன்றாவது தயாரிப்பாக 'குலப் பெருமை' என்ற படத்திற்கு சென்ற மாதம் பூஜை போட்டிருக்கிறார்கள். கலைப்பித்தன் கதை, வசனம் எழுதியிருக்கும் இப்படத்தை டைரக்டர் பிரஸாத்தின் உதவியாளராகப் பணியாற்றிய ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்யப் போகிறார். படத்திற்கான நடிகர் தேர்வு நடைபெற்று வருகிறது.

பரணியின் புது தயாரிப்பு

பரணி ஸ்டுடியோ ஸ்தாபனத்தார், பிரபல வங்க நாவலாசிரியரான சரத்சந்திரரின் கதையொன்றை தமிழ், தெலுங்கு இருபாஷைகளிலும் தயாரித்து வருகின்றனர். பானுமதி, ஏ. நாகேஸ்வரராவ் பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்

தை தயாரிப்பாளரான பி. ராமகிருஷ்ணு டைரக்ட் செய்து வருகிருர். மற்றும் சூர்யகாந்தம், ஜாவர் சீதாராமன் ஆகியோரும் இதில் நடிக்கிருர்கள். படத்தின் வசனங்களை வலம்புரி சோமனுதனும், சங்கீதத்தை மாஸ்டர் வேணுவும் அமைத்திருக்கிருர்கள்.

காமெடியன் வி. ஆர். ராஜகோபால் சென்னை ராஜா அண்ணுமலை புரத்திலுள்ள தனது புதிய வீட்டிற்கு அக்டோபர் மாதம் கிரகப்பிரவேசம் செய்தார்.

மூன்று நாள்

பிரேம் நசீரும் ஒரு சில மலையாளப் படங்களில் நடித்திருக்கும் அவரது சகோதரர் பிரேம் நவாசும் ஒன்று சேர்ந்து முதன் முதலாக நடிக்கும் படமொன்று சியாமளா ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. சங்கர் புரொடக்ஷன்ஸாரின் இப்படத்திற்கு 'மூன்று நாள்' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. தயாரிப்பு, டைரக்ஷன் இரண்டையும் ஏற்றுள்ள சங்கரே இதன் கதையை எழுதியிருக்கிருர். வசனங்களை ஏ. எஸ். ராஜூ அமைத்திருக்கிருர். எம். என், ராஜம், மைனுவதி, வி. கே. ஆர்., எம். என். நம்பியார் முதலியோரும் இதில் நடித்து வருகிருர்கள்.

பிறந்த நாள்

படத்திற்குத் தேவையான எட்டு பாடல்களும், ஐயாயிரம் அடிகள் வரை சுடப்பட்டுமிருக்கும் 'பிறந்த நாள்' என்ற படத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. ஏ. கே. வேலனுக்குப் பதிலாக தற்போது இதை ஜே. பி. ராஜூ - கே. நாராயணன் இருவரும் டைரக்ட் செய்து வருகிருர்கள். வசனங்களை உசலை சோமநாதன் எழுதுகிருர். விஜய் ஆர்ட் புரொடக்ஷன்ஸின் தயாரிப்பான இதில் பிரேம் நசீர், டி. கே. ராமச்சந்திரன், டி. ஆர். நடராஜன், வி. கே. ஆர்., எம். என். ராஜம், குசலகுமாரி முதலியோர் நடித்து வருகின்றனர். படம் பாரமவுண்டில் வளர்ந்து வருகிறது.

கைதியின் காதலி

'லட்சிய நடிகர்' எஸ். எஸ். ராஜேந்திரனை பிரதம பாகத்தில் நடிக்க வைத்து 'கைதியின் காதலி' என்ற படத்தை அருணுசலம் பிக்சர்ஸார் தயாரித்து வருகிருர்கள். ஏ. கே. வேலன் இதை டைரக்ட் செய்து வருகிருர். அருணுசலம்

ஸ்டுடியோவில் இப்படம் தயாரா கிறது.

மெர்ரிலாண்ட் படங்கள்

திருவனந்தபுரம் மெர்ரிலாண்ட் ஸ்டுடியோவில் இரண்டு தமிழ்ப் படங்கள் துரிதமாகத் தயாரிக்கப் பட்டு வருகின்றன.

ஸ்ரீராம், எம். என். நம்பியார், குமாரி நடிக்கும் வனப்படம் ஒன்று. இதன் கதையை நீலாவும், வசனங்களை 'மனிதன்' சோமசுந்தரமும் எழுதியிருக்கிறார்கள்.

இரண்டாவது படத்தில் மைனாவதி, குமாரி, மனோகர், நம்பியார், சஹஸ்ரநாமம், சாரங்கபாணி, முதலியோர் நடித்து வருகிறார்கள். இதன் கதை-வசனங்களை 'மனிதன்' சோமசுந்தரம் எழுதியிருக்கிறார்.

இவ்விரு படங்களையும் தயாரிப்பாளரான பி. சுப்ரமணியமே டைரக்ட் செய்து வருகிறார்.

மாடர்னின் தயாரிப்புகள்

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் இரண்டு தமிழ்ப் படங்கள் தயாராகி வருகின்றன. பி, எஸ். சரோஜா, மைனாவதி, மனோகர், பிரேம் நஸீர் முதலியோர் நடிக்கும் 'வண்ணக்கிளி' என்ற படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இதை டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்கிறார்.

மற்றொன்று 'பாண்ட் மேன்' என்ற ஆங்கிலப் படத்தை தழுவிய 'தலை கொடுத்தான் தம்பி' என்பது. டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்யும் இதில் மாலினி, எஸ். எஸ். ராஜேந்திரன் இருவரும் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்கள். இது முழுநீள வர்ணப்படமாகும்.

இவ்விரண்டும் மாடர்ன் தியேட்டர்ஸின் மின்னல் தயாரிப்புகளாகும்.

பொங்கல் வாழ்த்து

கன்னித் தமிழ் கொஞ்ச, வண்ண ஓவியங்கள் மிளிரும் பொங்கல் வாழ்த்துக்கள், ஓவிய மன்னர் கே.மாதவன் அவர்கள், ஓவிய விற்பன்னர் வி.மாதவம் பிள்ளை அவர்கள், உலகப் புகழ் வாய்ந்த புகைப்பட நிபுணர்கள் ஆகியவர்களின் கை வண்ணம், கற்பனைத் திறன் எல்லாம் ஒருங்கே பிரதிபலிக்கும் வண்ணம், எங்களிடம் விற்பனைக்குத் தயாரில் இருக்கின்றன.

காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமைந்திருக்கின்றன.

அணுகாந்தி பாண்டிய பதிப்பகம்

P1-16, கீழவாசல் : : தஞ்சாவூர்

Phone : 222 Tel : ANNUGANDHI

எச்சரிக்கை!

உங்கள் குழந்தையின் **ஜலதோஷம்** அபாயகரமாகக் கூடும்!

வியாதி ஆரம்பிக்கு முன்னரே,
அவன் சளித்தொந்திரவுகளை இந்த நல்ல,
சக்திவாய்ந்த ஆயின்மென்டால் ஒழியுங்கள் !

2 விதங்களில் ஜலதோஷத்திலிருந்து
நிம்மதி தருகிறது.

1

மூக்கின்
வழியாக
வேலை
செய்கிறது.

உங்கள் குழந்தை விக்ஸ் வேபோரப்பின் சக்தி வாய்ந்த ஔஷத ஆவிகளை சுவாசிப்பதால், அவன் மூக்கிலும், தொண்டையிலும் உள்ள சளி உபாதை அகல்கிறது.

2

சருமத்தின்
வழியாக
வேலை
செய்கிறது.

வேபோரப்பின் சுகம் தரும் உஷ்ணம் சருமத்தினூடே சென்று உங்கள் குழந்தையின் மார்கபத்தை உடைத்தெறிகிறது.

விக்ஸ் வேபோரப்

மார்பிலும், முதுகிலும்,
தொண்டையிலும் தேய்த்தாலே போதும்!

328-A



எழுதுபவர் :
ஏவி. மெய்யப்பன்



சூரியன் உதி
சுற்றினேன்

முன்னுரை

அணுயுகத்தில் ஜப்பான் நாட்டைப்பற்றி, கேள்விப் படாதவர்கள் இருக்கவே முடியாது. அணுகுண்டு எப்படிப் பட்டது, எவ்வளவு சக்தி வாய்ந்தது என்ற ஆராய்ச்சிக்கு இலக்கானது முதன் முதலில் ஜப்பான் தான்! அங்குள்ள ஹிரோஷிமா, நாகசாகி இரண்டும்தான் அணுகுண்டின் ஓசையை உலகி

ஏவி. எம். அதிபரான திரு. ஏவி. மெய்யப்பன் அவர்கள் சமீபத்தில் ஜப்பான் சென்று திரும்பியுள்ளார். தனது பிரயாண அனுபவங்களை இக்கட்டுரையில் சுவைபட விளக்குகிறார் அவர்.

—ஆசிரியர்.

க்கும் நாட்டில் ஒரு மாதம்

லேயே முதன் முதலில் கேட்கும் வாய்ப்பு பெற்ற நகரங்கள்!

தவிர, சென்னை துறைமுகத்தின் மீது இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது குண்டு போட முயற்சித்ததன் மூலம் இந்தியா பூராவும் பரபரப்பை உண்டு பண்ணிய நாடு ஜப்பான்தான்!

சின்னஞ் சிறு கவர்ச்சிகரமான தகர பொம்மைகளையும், பறக்கும் விமானங்களையும் ஓடும் ரயில்களையும் பார்க்கும் அனைவருக்கும் ஜப்பானின் ஞாபகம்தான் நிச்சயம் வரும்.

உலகின் கீழ்க்கோடியிலே அமைந்திருக்கும் இந்த நாட்டை 'சூரியன் உதிக்கும் நாடு' என்று ஆங்கிலத்தில் அழைப்பதுண்டு. சூரியன் தலைகாட்டும் முதல் நாடு இது என்பது அவர்களுடைய கருத்து. சரித்திரப் புத்தகத்திலும் பூகோளப் புத்தகங்களிலும் ஜப்பான் எரிமலைகள் நிறைந்த நாடு என்று வர்ணிக்கப்படுகிறது. அங்குள்ள வீடுகள் பெரும்பாலும் மூங்கில் தட்டியினாலும், காகிதங்களினாலும் அமைக்கப்பட்டிருக்கும்

என்று சில புத்தகங்களில் படித்திருக்கிறேன் இந்த ஜப்பான் நாட்டிற்கு சுமார் ஆறு வருஷங்களுக்கு முன்பு நான் என் குடும்பத்தாரோடு சென்றிருந்தேன்.

அப்போது நான் அங்கு அதிக நாட்கள் தங்கவில்லை.

சென்ற அக்டோபர் மாதம் தான் ஜப்பான் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சுமார் ஒரு மாத காலம் நான் ஜப்பானில் தங்கி, பல இடங்களைச் சுற்றிப் பார்த்தேன்.

ஜப்பானில் நான் பார்த்த இடங்கள் எல்லாம் ஒரு புதுப் பாடத்தை எனக்குச் சொல்லித் தந்தன. திரும்பிய இடங்கள் எல்லாம் எனக்கு திகைப்பை ஊட்டின,

ஆம், ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நான் கண்ட ஜப்பான வேறு; இம்முறை பார்த்த ஜப்பான் வேறு. இரண்டுக்குமிடையேதான் எவ்வளவு மாறுதல்கள்! எவ்வளவு முன்னேற்றங்கள்!! என் பிரயாணத்தில் நான் கண்டவை, கேட்டவை எல்லாவற்றையும்தான் இக்கட்டுரை வடிவில் எழுதத் தொடங்கி யிருக்கிறேன்.

திரும்பிய இடமெல்லாம் திகைத்தேன்!

ஆறு வருடங்களுக்கு முன்பு என் குடும்பத்தாருடனும் மற்றும் இலங்கையிலிருந்த ஒரு படத் தொழில் நண்பருடன் ஜப்பானுக்குச் சென்றிருந்தேன்.

ஜப்பானில் சில நாட்கள் மட்டுமேதான் நாங்கள் தங்க முடிந்தது. அந்த நாட்டை விட்டுக் கிளம்புவதற்குமுன் என் குடும்பத்தாரிடையேயும், மற்றுமுள்ள ஜப்பானிய நண்பர்களிடமும் நான் டோக்கியோ விமான நிலையத்தில் பேசிக் கொண்டிருந்தேன்.

''அடுத்த முறை எங்கேனும் வெளிநாட்டுக்குப் போவதென்ருல் எங்கே, எந்த நாட்டிற்குக் கிளப்புவீர்கள்?'' என்று என்னிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

நான் அவர்களிடம் ''என் பதில் உங்களுக்கு ஆச்சரியத்தையே தரும்' என்றேன்.

இதற்குள்ளாக சிலர் உலகிலுள்ள இதர முக்கிய நாடுகளின் பெயரை யெல்லாம் வரிசையாகச் சொல்லி வந்து, ''இது இருக்குமோ?'' என்று கேட்டு வந்தார்கள். நானும் வரிசையாக ''இல்லை'' என்று சிரித்துக் கொண்டே சொல்லி வந்தேன்.

கடைசியில் விடையை என்னிடமே எல்லோரும் எதிர்பார்க்கவே ''ஜப்பான்தான் அந்த நாடு!'' என்று சொன்னேன்.

''இப்போதுதான் வந்து விட்டோமே! மீண்டும் எதற்கு?'' என்று கேட்டார்கள்.

ஜப்பானியர்கள் விருந்தோம்பலில் தமிழ் நாட்டுக்கு அடுத்தபடி நிற்பவர்கள். அதனுல் அல்ல.

ஜப்பானின் கண்ணைக் கவரும் இயற்கைக் காட்சிகளும் 'எரிமலை' நாட்டில் வாழும் அவர்களது 'குளிர்ந்த' மனமும் கூட அல்ல!

ஜப்பானியரிடம் உள்ள தொழில் முன்னேற்றம்; அதில் வெற்றி மேல் வெற்றி பெற்று வீர நடை போட விரும்பும் அவர்களது ஆவல்தான் இதற்குக் காரணம்.

''ஏடுகளிலே இல்லை படிப்பு. உலகை ஏறெடுத்துப் பார்ப்பதில் தான் இருக்கிறது உண்மையான படிப்பு'' என்ற சாக்ரடீஸின் வாசகம்தான் எனக்கு நினைவுக்கு வந்தது.

'பாபி' படத்தின் பிரத்யேக காட்சி ஜப்பானில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூக்கில் விரல் வைத்தபடி நிற்பவர் ஷிரோ கிடோ. மற்றொருவர் இந்திய ஸ்தானீகராலயத்தின் கலா சாரப் பிரிவின் தலைவரான புஷ்பராஜ்.

இதை யெல்லாம் என்னிடம் கேள்வி கேட்டவர்களுக்குப் பதிலாகத்தான் சொன்னேனே தவிர, ஆறு வருடங்களுக்குள் மீண்டும் ஜப்பான் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் என்று துளிக்கூட நான் எதிர்பார்க்கவில்லை!

இந்தச் சந்தர்ப்பத்தைச் சிருஷ்டித்துக் கொண்டது நானாகவே இருக்கலாம். ஆனால் அதற்கான 'நேரம்' எனக்குக் கிடைப்பது என்னுடன் ஒத்துழைப்பவர்கள் எல்லோரையும் சேர்ந்ததல்லவா?

சென்ற அக்டோபர் மாதம் 4-ம் தேதி யன்று சென்னையிலிருந்து புறப்பட்டு, 5-ம் தேதி காலை கல்கத்தாவுக்கு விமானத்தில் பறந்து சென்றேன்.

கல்கத்தாவிலிருந்து எனது நெருங்கிய நண்பரும் பட விநியோகஸ்தருமான திரு வி. ஏ. பி. அய்யர் அவர்கள் என்னுடன் ஜப்பானுக்கு வரவிருந்தார். எனது நீண்ட பிரயாணத்திற்கு துணையாக அவர் வருகிறேன் என்று சொன்னபோது உண்மையிலேயே நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

திரு. அய்யர் அவர்களும் ஜப்பான் நாட்டிற்குபோவது இதுவே முதல் தடவை. தவிர, சென்ற முறை நான் ஜப்பான் சென்று வந்தபோது, அந்த நாட்டைப் பற்றி நான் சொன்ன விஷயங்களைக் கேட்ட அவர், "ஆகா இப்படிப்பட்ட நாடா அது!" என்று



வெற்றிலைப் பெட்டி அளவே உள்ள டேப் ரிகார்டர். பத்திரிகை நிருபர்கள்கூட்டத்திற்கு இது உபயோகப்படுகிறதாம் அங்கு.ஏவி.எம். மின் கையிலிருப்பது அதன் மைக். ஒரு ரூபாய் நாணய அளவே இருக்கிறது இது.

அடுத்து நான் கடிதம் எழுதி யிருந்தது, திரு. கிளென் அயர்ட்டன் என்பவருக்கு. இவர் ஒரு சக்தி வாய்ந்த சினிமாப் பத்திரிகையின் ஆசிரியர். "அயல் நாடுகளிலிருந்து படத்துறை சம்பந்தப்பட்டவர் யார் வந்தாலும் திரு. அயர்ட்டன் அவர்கள் தனி சிரத்தை எடுத்துக் கொண்டு கவனிப்பார்." என்று பம்பாயிலிருந்த எனது நண்பர் திரு. அகர்வால் என்னிடம் கூறியிருந்தார்.

இந்த இருவருக்கும் கடிதம் எழுதியிருந்ததைத் தவிர, மற்றபடி நான் யாதொரு முன்னேற்பாட்டையும் செய்யவில்லை.

வியந்தவர். எனவே, என்னைக் காட்டிலும் அவர் ஆர்வம் மிக்கவராகக் காணப்பட்டார்.

ஜப்பானுக்கு நான் கிளம்புவதற்கு முன்னால் அங்குள்ள எனது முக்கிய நண்பரான திரு. ஷிரோ கிடோ அவர்களுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தேன். ஜப்பானுக்கு வரலாம் என்ற ஆவல் எனக்கு இருப்பதாகவும், வந்து சேர்ந்தவுடன் அவருக்குந் தெரிவிப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

திரு. ஷிரோ கிடோ ஜப்பானின் முக்கிய படத்தயாரிப்பாளர்களில் ஒருவர். சமீபத்தில் அவர் இந்தியாவுக்கு வந்தபோது எனது ஸ்டுடியோவிற்குக்கூட வந்திருந்தார்.

மற்றொரு முக்கியமான விஷயத்தையும் இங்கு நான் சொல்லி விடுகிறேன்.

இம்முறை நான் ஜப்பான் பிரயாணத்தை வரையறை செய்தது வெறும் பொழுது போக்குக்காகத் தான். ஆனால் கூடவே, "ஏன் ஏதேனும் படங்கள் பரிவர்த்தனை செய்யவோ, அல்லது ஜப்பானின் கூட்டுறவில் படங்களைத் தயாரிக்கவோ நாம் முயற்சிக்கக் கூடாது?" என்ற கேள்வியும் என் மனதில் எழுந்தது.

'எதற்கும் பார்க்கலாம்' என்ற எண்ணத்தில் என்னுடன், நான் தயாரித்த 'பாபி' (குலதெய்வம்) ஹிந்திப் படத்தின் சுருக்கப்பட்ட பிரதி ஒன்றை எடுத்துக் கொண்டேன்.

இம்மாதிரி படத்தை ஒருவர் எடுத்துச் செல்வது அனுமதிக்கப் படமாட்டாது என்பது தெரியவே, அதற்கும் முன்னேற்பாடான வழி ஒன்றைச் செய்திருந்தேன். ஜப்பானிலுள்ள இந்திய ஸ்தானீகராலயத்திற்கு அன்பளிப்பாக அதைக் கொடுத்துவிடத் தீர்மானித்தேன். நான். இதனுல் அந்தச் சிக்கல் தீர்ந்துவிடும் என்பது தெரிந்தது.

5-ம் தேதி திங்கட்கிழமை. அன்றிரவு ஒன்பது மணிக்கு ஜப்பான் விமானம் கல்கத்தாவிலிருந்து கிளம்பியது. 'பான் அமெரிக்கன் விமான சர்வீஸ்' கம்பெனியின் அந்தப் பிரம்மாண்டமான விமானம் மேலே எழும்ப எழும்ப கல்கத்தா மறைந்து கொண்டே இருந்தது.

என் மனமும் கட்டுக்கடங்காமல் எதை யெதையோ எண்ணிக் கொண்டிருந்தது.

வழியில் எங்கள் விமானம் ஸயாம் நாட்டின் தலைநகரமான பாங்காக்கிலும், பிரபல துறைமுகமான ஹாங்காங்கிலும் சிறிது நேரம் நின்றுவிட்டு, பிரயாணிகளை இறக்கி, ஏற்றிக்கொண்டு கிளம்பியது.

மறுநாள் மாலை ஏழு மணிக்கு - அதாவது கதிரவன் தன் கிரணங்களைச் சுருக்கிக்கொண்டு அஸ்தமனமாகிய ஒரு மணி நேரம் கழிந்த பிறகு, எங்கள் விமானம் 'சூரியன் உதிக்கும் நாட்'டின் தலைநகரமான டோக்கியோவின் தரையைத் தொட்டது.

விமானத்திலிருந்து இறங்கிய படியே சுற்று முற்றும் பார்த்த எனக்கு, ''நாம் வந்திருப்பது டோக்கியோதானு, அல்லது வேறு ஏதாவது பட்டணமோ?'' என்ற சந்தேகம் வந்துவிட்டது. திரும்பிய இடமெல்லாம் எனக்கு திகைப்புதான் ஏற்பட்டது!

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்தபோது டோக்கியோ விமான நிலையம் பழைய பப்பாய் நிலையத்தைப்போல் இருந்தது. ஆனுல் இன்று அது உருவிலும் அளவிலும் பெரிதும் மாறிவிட்டது. சாதாரணமாக விமான நிலையத்தை யாரும் மறக்க முடியாது. ஏனெனில் அங்கு அதிக மாற்றங்கள் எதுவும் செய்ய முடியாது. ஆனுல் டோக்கியோ விமான நிலையம் இதற்கு முற்றிலும் மாருக இருந்தது. ஆறு வருஷத்திற்குள்ளாக ஒரு பழைய விமான நிலையத்தையே மறந்து விடும்படியாக ஜப்பானியர்கள் அதை உருமாற்றியிருந்தார்கள். வியந்தபடியே என் நண்பரிடமும் இவற்றைச் சொல்லியபடி, சுங்கஇலாக்காவை நோக்கி நடந்தேன்.

சுங்க இலாக்காவில் பரிசோதனைகள் முடிய சிறிது நேரம் பிடித்தது.

விமான நிலையத்திற்கு எங்கள் வருகை தெரிந்து யாரும் வரவில்லை. இதற்கு முக்கிய காரணம், நாங்கள் இந்தத் தேதியில்தான் வரப்போகிறோம் என்பதை நிச்சயமாக அங்குள்ள எங்கள் நண்பர்கள் யாருக்கும் தெரிவிக்காததே. எனவே சுங்க இலாக்காவில் சோதனைகள் முடிந்ததும், நாங்கள் ஒரு காரில் ஏறிக்கொண்டு, இம்பீரியல் என்ற ஓட்டலுக்கு வண்டியை விடச் சொன்னேம்.

காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் ஜப்பான் விளங்கும் அழகு ஒரு விதம். இரவு நேரத்தில் அது தோற்றமளிக்கும் அழகு வேறு விதம்! எங்கு திரும்பினுலும் ஒரே ஜகஜ்ஜோதியாக ஜப்பான் காட்சி தந்தது. ''சூரியன் உதிக்கும் நாடு நான்; சூரியன் மறைந்தாலும் என் ஒளி மறையாது!'' என்று கூறுவது போல் டோக்கியோ நகரமே ஒளி வெள்ளத்தில் மூழ்கி ஒரு கனவு உலகம் போல் காட்சியளித்தது.

என் கைக்கடிகாரம் மணி இரவு எட்டரை என்பதைக் காட்டவும், நாங்கள் ஏறியிருந்த வண்டி இப்பீரியல் ஓட்டலின் பிரதான வாயிலில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது!

இம்பீரியல் என்ற இந்த ஓட்டல் ஜப்பானிலேயே மிகப் பெரிய ஓட்டல்களில் ஒன்று. மிகச் சிறந்த நிர்வாகத்திறனுக்கும், அன்பு மிக்க உபசரணைக்கும் இங்குள்ள ஓட்டல்கள் பெயர் பெற்றவை. இங்குள்ள சிப்பந்திகள் பெரும்பாலோர் பெண்மணிகள் தான்.

காபி கொண்டு வருவது-கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்பது- குளிக்க வசதிகள் செய்து தருவது - உணவு கொண்டு வருவது - அறையைச் சுத்தப்படுத்திப் பாதுகாப்பது மற்றும் எல்லா வேலைகளையும் பெண்கள்தான் கவனிக்கிறார்கள். பத்து அல்லது பதினைந்து பெண்களுக்கு ஒரு ஆண் அதிகாரி இருக்கிறார்.

ஜப்பானியப் பெண்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் கவர்ச்சி மிக்கவர்கள் மட்டும் அல்ல, கனிவு நிரம்பப் பெற்றவர்கள். அவர்கள் பேசுவதே பாடுவதுபோல் இனிமையாக இருக்கிறது. அவ்வளவு இனிமையான - சன்னமான குரல் படைத்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

நாங்கள் வெளியே புறப்படும் போதெல்லாம் எங்கள் அறைக் கதவைப் பூட்டுவதே கிடையாது! வைத்த துரும்பு வைத்த இடத்திலேயே இருக்கும்! அவ்வளவு பாதுகாப்புடன - நமது பொருள்களை அவர்களுடைய பொருளை விட மேலெனக் கருதிப் பாதுகாக்கிறார்கள்.

இம்பீரியல் ஓட்டலுக்கு நான் வந்தவுடனேயே எனது நண்பர் திரு. ஷிரோ கிடோ அவர்களுக்கு நான் வந்திருப்பதாகப் போன் செய்தேன்.

எனது திடீர் விஜயம் கேட்டு அவர் திடுக்கிட்டு விட்டது மல்ல; சந்தோஷத்தின் எல்லைக்கே போய் விட்டார்.

"காரை அனுப்புகிறேன். உடனே புறப்பட்டு வாருங்கள். உங்களைப் பார்க்கவேண்டும் என்று ஆவலாக இருக்கிறது!" என்றார் திரு கிடோ.

மறுநாள் காலை வருவதாக அவரிடம் தெரிவித்தேன்.

மறுநாள் - சூரியன் உதிக்கும் நாட்டில் கதிரவன் தோன்றினான்.

முன் இரவு போனில் சொன்னபடி திரு. ஷிரோ கிடோ தனது காரை எங்கள் ஓட்டலுக்கு அனுப்பியிருந்தார்.

நானும், அய்யரும் கிடோவின் காரில் ஏறி அமர்ந்து கொண்டோம். அவரது வீட்டை நோக்கி எங்கள் காரின் சக்கரமும் ஜப்பானின் அகன்ற வீதிகளில் உருண்டோடிக் கொண்டிருந்தது.

வந்த காரணம்

திரு ஷிரோ கிடோ ஜப்பானின் பிரபல படத்தயாரிப்பாளர் ஆவார். அவருக்கு டோக்கியோவில் பல பெரிய தியேட்டர்களும், ஒரு படப்பிடிப்பு ஸ்டுடியோவும் இருக்கின்றன. சில சாதாரண தியேட்டர்களும் அவருக்குச் சொந்தமாக உள்ளன. இது தவிர, கியோடோ என்ற நகரத்தில் ஒரு ஸ்டுடியோவும் இருக்கிறது.

டோக்கியோவில் அவர் ஒரு

செல்வாக்கு மிக்க மனிதர். தவிர, ஜப்பான் படத்தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவரும் அவர்தான்.

எங்களைக் கண்டதும் எப்போதும் சிரித்தபடி காட்சி யளிக்கும் அவருடைய முகம் மேலும் மலர்ந்தது. புன்னகை உதட்டிலிருந்து தவழ, ''வாருங்கள் வாருங்கள்!'' என்று, தன் இரு கைகளையும் நீட்டி ஓடோடியும் வந்து வரவேற்றார் திரு. கிடோ.

கிடோவிடம் சிறிது நேரம் பொதுப்படையான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அவருக்கு நான் எழுதி யிருந்த கடிதத்திலேயே, ''ஜப்பானுக்கு நான் வரும்போது, ஏதேனும் தொழில் துறையில் பலன் காணவும் முயற்சிக்கிறேன்'' என்பதையும் எழுதியிருந்தேன்.

கிடோ என் விஜயத்தைப்பற்றிக் கேட்டபோது, ''இங்கு நான் வந்திருப்பது ஓய்வுக்காகத்தான். இதுவே முதல் காரணம். அடுத்தபடியாக நம் நாடுகளிடையே படத்தொழிலில் ஏதேனும் ஏற்றுமதி காணமுடியுமா என்பதையும், படங்களை மாற்றிக் கொள்ள முடியுமா என்பதை ஆராயவும் விரும்புகிறேன்'' என்றேன்.

நம் நாட்டில் அந்நியச் செலவாணிக்காக எப்படி அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதோ, அதே போல் ஜப்பானிலும் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கிடோ இதைப் பற்றி விரிவாக என்னிடம் சொன்னார். உடனடியாக இந்தியாவிலிருந்து எந்தப் படத்தையும் ஜப்பானில் இறக்குமதி செய்ய முடியாது. அதே சமயம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் படங்களுக்குச் சமமாக ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு படங்களை ஏற்றுமதி செய்து பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றியும் உடனடியாக எதையும் செய்ய முடியாது என்று கூறினார்.

இதற்காக ஒரு சிறு சம்பவத்தையும் அவர் சொன்னார்.

திரு. கிடோ சமீபத்தில் இந்தியாவுக்கு வந்தபோது நமது பெருமதிப்பிற்குரிய பிரதமர் நேருஜி அவர்களைச் சந்தித்தார்.

திரு. கிடோவிடம் 'கலங்கரை விளக்கம்' என்ற குழந்தைகள் படத்தின் பிரதி ஒன்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

ஆனால் அது இன்னும் ஷிரோவின் கைக்கு கிடைக்கவில்லையாம்! சுங்க இலாக்கா கெடுபிடிகளும் இறக்குமதிச் சட்டங்களும்தான் இவற்றுக்குக் காரணமாம். எப்படி இருக்கிறது?

இவ்வளவு தூரம் கெடுபிடிகள் இருக்கும்போது, படங்கள் பரிவர்த்தனை என்பது எளிதில் நடக்கக்கூடிய காரியமா?

இது தெரிந்துதான் 'பாபி' படத்தின் சுருக்கமான பதிப்பை இந்திய ஸ்தானீகராலயத்தின் சொத்தாகவே நான் கொடுத்துவிட்டதாகச் சொன்னேன்.

திரு. கிடோ என் செயலைப் பாராட்டும் வகையில் சிரித்தார்.

ஜப்பானின் படத்தொழிலைப் பற்றி நாம் கவனிக்க முற்படுவதற்கு முன் அங்குள்ள படத்தொழில் எந்த வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படி ஆராயப்புகுந்தால் பல அதிசயமான விஷயங்கள் நமக்குப் புலப்படும். சிலவற்றை நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள்!

அவற்றை எல்லாம் அடுத்த இதழில் கூறுகிறேன்.

தன்னை இதயத்தில் வைத்திருப்பவரை, தன் இதயத்தில் வைத்துக் கும்பிடுகிருளோ இந்த அழகி! விஜயா புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் "கடன் வாங்கி கல்யாணம்" தமிழ்ப் படத்தில் ஜெமினி கணேசன், சாவித்திரி.

பி. ஆர். பிலிம்ஸ் "ஸாதனா" படத்தில்
தோன்றும் வசீகர நடசத்திரம்
வைஜயந்திமாலா
வைஜயந்திமாலா
உபயோகிப்பது
தூய,
வெண்மையான
லக்ஸ்
டாய்லெட்
சோப்
அழகான புதிய
மேலுறையுடன் இப்பொழுது
கிடைக்கிறது
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப
ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.
LTS. 583-543 TM

★★ கிரிஜா

"ஸ்வஸ்திக் ஸ்ரீ" தமிழ் - தெலுங்கு தயாரிப்பான "ரேசுக்கா பகடி சுக்கா"வில் முக்கிய பாத்திரமொன்றில் நடிக்கிருர்.

★★ எஸ். எஸ். ராஜேந்திரன்

கிருஷ்ணா பிக்சர்ஸ் ஏராளமான பொருட்செலவில் தயாரித்து வரும் "ராஜாதேசிங்கு" படத்தில் மகபத்கான் வேஷத்தில் நடித்து வருகிறார்.



★★ பாலாஜி

இளம் நடிகர் பாலாஜி தற்போது பல படங்களில் நடித்து வருகிறார். இவர் நடித்து அடுத்து வெளி வரவிருக்கும் படம் ஜூபிலியின் 'அன்பு எங்கே?'

ராஜேஸ்வரி

எம். ஏ. வி. பிக்சர்ஸார் துரிதமாகத் தயாரித்து வரும் 'மாதவி' தமிழ்ப் படத்தில் தற்போது நடித்து வருகிறார்

நான் ரசித்த காட்சி

நான் வளர்த்த தங்கை

தங்கை பத்மாவின் சுடுசொற்களைத் தாங்க முடியாமல் வீட்டை விட்டு வெளியேறி, தன் மாமனார் வீட்டிற்குச் சென்று விடுகிறாள் பார்வதி. சுந்தரம் - குழந்தையைப் பார்க்க வருவதால் அவனையும்-பார்வதியையும் பற்றி தவறாக கற்பித்து விடுகிறார்கள். எனவே பார்வதி ''நான் மானத்துடன் இந்த வீட்டில் இருக்க வேண்டுமானால் தயவு செய்து இனி இங்கே வராதீர்கள்!'' என்று சொல்லி விடுகிறாள். இதயம் சுக்கு நூறாகி வெளியேறுகிறான் சுந்தரம். இதயத்தை உருக்கிவிடும் நல்ல காட்சி.

பிரேமா,
சென்னை.

தன் மாப்பிள்ளை இறந்துபோன செய்தியில் அதிர்ச்சி கண்டு உயிரை விட்டு விடுகிறார் பார்வதியின் தந்தை. அவர் வீட்டு கணக்கப்பிள்ளை இச்சந்தர்ப்பத்தில் - அவர் எப்போதும் அமர்ந்திருக்கும் சாய்வு நாற்காலியிலும், பாதணிகளிலும் பூவைப் போட்டு வணங்குகிறான். உண்மை ஊழியனின் தூய உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது இக்காட்சி.

சேகர்,
காஞ்சீபுரம்.

மாமனாருக்குக் கொடுத்த வாக்குறுதியை எண்ணி பார்வதியின் குழந்தை முரளியைத் தேடி அலைகிறான் சுந்தரம். முரளியே அவனைக் கண்டு, அவன் யாரென்று தெரியாமலேயே தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். அவனையே முரளி ''சித்தப்பா! சித்தப்பா!!...'' என்று கூப்பிடும்போது சுந்தரத்துக்கு மட்டுமல்ல; நம் மனதிலும் ஏதோ செய்கிறது.

எஸ். லலிதா,
வேலூர்.

பத்மாவிடமும் சுந்தரத்திடமும் விடைபெற்று பார்வதி கணக்கப்பிள்ளையிடம் வருகிறாள். ''பத்மா சிறிசு! ஏறத்தாழ நடந்தாலும் நீங்கதான் அவளைக் கவனிச்சுக்கணும்'' என்று சொல்லிவிட்டுச் செல்லுகிறாள். தங்கையின் மேல் ஒரு அக்காவுக்குள்ள உண்மைப் பாசத்தை விளக்குகிறது இக்காட்சி.

வேலாயுத-மணி,
திருச்சி.

''இரண்டு பெண்டாட்டிக்காரன் எவன்தானோ கெட்டிக்காரன்?'' என்பதுபோல் பாலாஜி விழிப்பதைப் பார்க்க வேண்டுமானால் ராஜேஸ்வரியின் ''சுமங்கலி'' படத்தைப் பார்க்க வேண்டும்.



சுந்தரம் உணவருந்த உட்காருகிறான். வழக்கமாக முரளிக்கு உணவு கொடுப்பவன் அவன். முரளி வெளியேறியவுடன் - சாப்பிட அமரும் அவனுக்கு - முரளியின் நினைவு வருகிறது. உடனே எழுந்து சென்று விடுகிறான். சுந்தரத்தின் உள்ளக்கிடக்கை இக் காட்சியில் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீநிவாஸன்,
சென்னை.

சுந்தரம், பார்வதியைத் தேடி அவளுடைய மாமனார் வீட்டிற்கு வருகிறான். 'வாருங்க, வாருங்க' என்று முகம் மலர எதிர்கொண்டழைக்கும் பார்வதி, ''பத்மா வரவில்லையா?'' என்று ஆவலுடன் கேட்கிறாள். பத்மாவின் மீது கொண்டுள்ள உண்மையான அன்பை பார்வதி இந்த ஒரே கேள்வியில் வெளியிட்டு விடுகிறாள்.

ஆ. ராமலிங்கம்,
காஞ்சீபுரம்.

கணவனையும். பெற்ற தகப்பனையும் இழந்தது போதாதென்று தன் தங்கையின் அன்பையும் இழந்து விட்ட பார்வதி, வீட்டை விட்டு வெளியேறுகிறாள். அவள் குழந்தையையும், விதி அங்கே பிரித்து விடுகிறது, இந்த ஏக்கத்தினால் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. அக்காவை மரணம் அணைக்கும் நிலையில், அவள் தங்கை பத்மா கண்டு அவள் பிழைக்க வேண்டுமென்று ஆண்டவனை வேண்டுகிறாள். என்னதான் கோபதாபங்களிருந்தாலும் ரத்த பாசம் அவைகளுக்கு அப்பாற்பட்டதாக நின்று அவர்களைச் சேர்த்து வைக்கும் என்பதை விளக்கும் ரசமான இந்தக் காட்சியை நான் மிகவும் விரும்பினேன்.

எஸ். கே. நடராஜன்,
சென்னை.

பார்வதி தன் மகனைக் காணுமல் பைத்தியம் பிடித்து அலைகிறாள். குழந்தைகள் அவள் பின்னால் 'பைத்தியம்' என்று கூவியபடி ஓடிக் கேலி செய்கிறார்கள். பண்டரிபாய் பைத்தியமாகச் சிறப்பாக நடித்திருக்கும் இந்தக் காட்சியை நான் நன்கு ரசித்தேன்! 'பைத்தியத்தின் பின்னால் பத்துப்பேர்' என்பார்களே, அது எவ்வளவு உண்மை!

சீதாபதி,
காஞ்சீபுரம்.

''அத்தான்! இப்போ எனக்கு எப்படியிருக்கு தெரியுமா?''- கஜலக்ஷ்மி பிக்சர்ஸ் ''புதுமைப் பெண்''ணில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனும் எம். என். ராஜமும்.

காத்தவராயன்

சாதாரணமாகப் படங்களிலெல்லாம் கதாநாயகன் தண்டிக்கப்படும் காட்சி ஏறக்குறைய ஒரே மாதிரி இருக்கும். சங்கிலியால் அவனை இரண்டு அல்லது இருபது வீரர்கள் பிணைத்து இழுத்துச் செல்வார்கள்...தவறு; அவன் அவர்களை இழுத்தபடி கோபமாகப் பேசுவான்! ஆனால் காத்தவராயனில் இந்தக் காட்சியில் புதுமை பளிச்சிடுகிறது. 'யானை காலில் இடறச் செய்தல்' என்பது பழைய காலத்து தண்டனை முறை. அது படங்களில் அதிகம் பயன்படுத்தப்பட்ட

உலகப்பிரசித்தி
பெற்ற தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்கு
க்குணமளிக்கும்

பெப்ஸ்

வில்லைகள்
உட்கொண்டு
பிராங்கைடிஸ்
விரைவில் அகன்றது.

தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் முதலியவை பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும் வில்லைகளை உட்கொண்ட உடனேயே அகலுகின்றன. பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும், வலியைக் குறைக்கவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள்.



பெப்ஸ்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளு
க்குக் குணம்
அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM

சோல் ஏஜெண்டுகள்:

தாதா & கோ.,

86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

தில்லை. வனசுந்தரியில் மட்டும் யானை வில்லனை மிதிப்பதுபோல் காட்டினார்கள். காத்தவராயனில் கதாநாயகனை சங்கிலியால் பிணைத்து யானை இழுத்து வருவது போல் காட்டியிருக்கிறார்கள். சிவாஜி கணேசனும் இந்தக் காட்சியில் சிறப்பாக நடித்திருக்கிறார். இந்தக் காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

சி. கூ. மழலையரசன்,
சிந்தகம்பள்ளி.

சபாஷ் மீனா

'மோகன்' என்று குரல் கேட்கிறது கீழே இருந்து. மாடியிலிருக்கும் சேகர் இந்தக் குரலைக் கேட்டுத் திடுக்கிடுகிறான். மோகனின் தந்தை வந்திருக்கிறார்! ஆமாம், ஒரே ஒரு கணம்தான். சேகர் ஒரே தாவாகத் தாவி, சோபாவைத் தாண்டி பிரோவுக்குள் புகுந்து மூடிக் கொள்கிறான். கற்பனைக் கெட்டாத வேகம் தான் அது! சந்திரபாபு வில்லாக வளைந்து, ரப்பராகத் துள்ளி பிரமாதமாக நடித்திருக்கும் இக்காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

வி. பாலசுப்ரமணியம்,
அம்பத்தூர்.

ரிக்ஷாக்கார மூக்கனை மோகன் என்று நினைத்து அப்பாதுரையின் ஆட்கள், அவர் வீட்டுக்கு இழுத்துப் போகிறார்கள். தன்னைப்போல் நடிக்கும்படி சேகரை அங்கு அனுப்பிவைத்த மோகன், அவனைச் சந்திக்க வருகிறான். அப்போது ஏற்படும் சிறு தகராறில் இருவருக்கும் அடிதடி ஏற்பட்டு விடுகிறது. மூக்கன் மோகனை முகத்தில்

நாம்

ஒன்றுகூடி

நமது சங்கத்தில்

எந்த நாடகத்தைப்

போடுவது என்பது

பற்றி விவாதிப்போம்

...தேநீர்

பரிமாற மறந்து

விடாதீர்கள்

நான்தான் டீ

2737 கி. மு. முதல் பிரசித்திபெற்றது

TEA BOARD INDIA

PST 208

அடித்து விடுகிறான். ஆட்க்ள் வந்து, அவனுக்குப் பைத்தியம் என்று கூறி மோகனை வெளியே அனுப்புகிறார்கள். மோகனுக்குப் பைத்தியம் என்று தீர்மானித்த மூக்கன், ''பிரதர் தெரியாமெ அடிச்சுட்டேன், மன்னிச்சுடு பிரதர்'' என்று மன்னிப்பு கோறுகிறான். தவறு செய்வது இயற்கை. ஆனாலும் அதற்கு மன்னிப்பு கேட்பது பெருந்தன்மை. இந்தத் தமிழ்ப் பண்பை விளக்கும் இக்காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

எம்மொய்யார்,
சென்னை.

தொழிலாளரிடையே வேலை நிறுத்த மனப்பான்மையைத் தூண்டிவிடுகிறான் சங்கர். தொழிலாளர்கள் கலாட்டா செய்கிறார்கள், வேலைக்குப் போகாமல். இதை ராஜா மூலம் அறிந்த மோகன் அவர்களிடம் போகிறான். வேலை நிறுத்தம் தவறு என்பதை நன்கு விளக்குகிறான். வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்களின் இதய ஒலி அல்ல. முதலாளிக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள சில சுயநலவாதிகளால் வரும் தொல்லையே இது. இந்த உண்மையை விளக்கும் இந்தக் காட்சியில் சிவாஜி கணேசன் 'கடாபுடா'வசனமின்றி தொழிலாளர்களுக்குப் புரியும் வகையில் எளிய முறையில் அழகாகப் பேசியிருக்கிறார். அருமையான - அவசியமான போதனைக் காட்சி இது.

ஏ. டி. ஸ்ரீநிவாசன்,
மேலமையூர்.

சேகரை மூக்கன் என்று நினைக்கும் மக்கள் அவன் போதையிலிருப்பதாக எண்ணி ஜலம் கொட்டுகிறார்கள். அவன் அருகிலுள்ள பிள்ளைகளையெல்லாம் அணைக்கிறான். இந்தக் காட்சியில் சந்திரபாபு அற்புதமாக நடித்திருக்கிறார்.

ஸம்பத்,
சென்னை.

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (P. P. M.)
Jullundur City.

கற்பனைச் சிதறல்

கதாநாயகன் நிலை

தயாரிப்பு ● 'பேசும் படம்'
ஸ்டுடியோ ● கான்பெர்ரா
ஓவியம் ● வரன்
புகைப்படங்கள் ● சந்தாமியான்
நடிப்பு ● பாலாஜி
அமைப்பு ● ஸாரதி

இரவு மணி ஒன்பது. ஆசியாவின் மிகப் பெரிய ஸ்டுடியோவான வாஹினியிலிருந்து பிரபல நடிகர் ஒருவருடன் காரில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். காரின் பின் ஸீட்டில் அமர்ந்திருந்த நடிகர் இப்படியும் அப்படியும் ஆடி தூங்கி விழுந்தபடி வந்து கொண்டிருந்தார். "ஏன், இப்படித் தூங்கி விழுகிறீர்கள்?" என்று கேட்டேன். "தூங்கி விழுகிறேனா? தூக்கத்தை அல்லவா வராமல் தடுத்துக் கொண்டிருக்கிறேன்!" என்று 'தூங்கி விழுந்தபடியே' பதில் சொன்னார். "இதைக் கூட தூங்கி விழுந்தபடிதானே சொல்கிறீர்கள்?" என்றேன். அவர் தூங்கி விழுந்தபடியே பேசினார். அவர் தூங்கி மூன்று நாட்களாயிற்றாம்; முடியப் போகும் படம் என்பதால் மூன்று 'கால்ஷீட்' வேலை செய்கிறாராம். அதாவது காலை ஏழு முதல் மறுநாள் காலை ஐந்து வரை வேலை செய்கிறாராம். பிற்பகல் உணவுக்குக் கூட வீட்டுக்குப் போவதில்லையாம். உணவு ஸ்டுடியோவுக்கே வந்து விடுகிறதாம். மனைவியைப் பார்த்து மூன்று நாட்களாகிறதாம். இந்த விவரங்களையெல்லாம் சொல்லி முடிப்பதற்குள் நான் அவரை பல முறை எழுப்ப வேண்டியிருந்தது!

"தூங்கக்கூட நேரமில்லாமல் எதற்காக இவ்வளவு படங்களில் நடிக்க ஒப்புக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டேன். "தயாரிப்பாளர்கள் விட்டால் தானே?" என்று-காரணங்களுடன் விளக்கினார். இத்தனையும் சொல்லி முடிப்பதற்கும், அவருடைய வீடு வருவதற்கும் சரியாக இருந்தது.

"ஹூம்....நீங்கள் போய் உணவருந்தி விட்டு நிம்மதியாகத் தூங்கப் போகிறீர்கள். உங்களை வீட்டில் இறக்கி விட்டு கார் வந்ததும் நான் இரவு படப் பிடிப்புக்குப் போயாக வேண்டும். காரில் போனாலும் பங்களாவிலே வசித்தாலும் ஒரு நடிகரின் கஷ்டங்களைப் பார்த்தீர்களா? தூங்க நேரம் இல்லை ஸார்!" என்று வருத்தத்துடன் சொன்னார். கார் என் வீட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது! வழியெல்லாம் என் இரு செவிகளில் "ஹூம்....நீங்கள் போய் உணவருந்தி விட்டு நிம்மதியாகத் தூங்கப் போகிறீர்கள்...." என்ற சொற்கள் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. என் சிந்தனை சுழன்றது. இதே போல் கதாநாயகி, வில்லன், கதாசிரியர், வசனகர்த்தா, தயாரிப்பாளர், டைரக்டர் இப்படி ஒவ்வொருவருக்கும் உள்ள தனித் தனிக் கஷ்டங்களை எடுத்துச் சீர்தூக்கிப் பார்த்தேன். அந்த எண்ணத்தில் சிதறிய



சொற்களின் சேர்க்கையைத்தான் 'கதாநாயகன் நிலை' என்பதில் தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். இதில் அந்தக் 'கற்பனைச் சிதறலை' கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதற்காக திரு பாலாஜியை அதில் நடிக்கும்படிச் சொன்னேன். இது அவருடைய சொந்த அனுபவமோ, அபிப்பிராயமோ அல்ல. நான் வடித்துக் கொடுத்த சொற்களுக்கு தமது நடிப்பின் மூலம் உயிர் ஊட்டி, உங்கள் முன் நடமாட விட்டிருக்கிறார் இளம் நடிகர் பாலாஜி.

முடிவாக ஒரு விஷயம்.

இது கவிதை அல்ல. காலம் சென்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் தற்கால கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது "வசனத்தை ஒடித்தல்ல இப்போது கவிதையாகக் கொடுத்து விடுகிறார்கள்" என்று கூறியிருக்கிறார்கள். அந்த வகையைச் சேர்ந்த கவிதைகூட அல்ல இது!

இதில் தாளத்திற்கேற்ப சொற்களைப் பொருத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர, வேறு ஒன்றும் நான் சொல்ல விரும்பவில்லை.

கட்டியம் முடிந்தது.

இனிமேலே தொடரலாம்.

1

பள்ளி எழுச்சி

கதிரவன் முளைப்பதற்கு முன்னால்
கதவைத் தட்டினான் என் பையன்
'கால்ஷீட் கொடுத்திருக்கிறீர்
காலை ஆறுக்கு
கவனக்குறைவோ?
கண் ஏன் திறக்கவில்லை?
காத்திருக்கிறதே கார்
காபியுமே தயார்' என்றான்.

௨

இது விஷயம்

முன்தினம் வீடு திரும்பவே - மணி
மூன்றான இரவினிலே
முடியவில்லை எழுந்திருக்க - மனமில்லை
'முடியாது வர' என,
முடியப்போகும் படம்
முக்கிய கட்டம்
முணு முணுக்க நேரமோ இது?

3

பயணம்

பறந்தது 'பியட்' கார்தான்
படப்பிடிப்பு நிலையத்திற்கு - 'மணி
பத்துக்குப் போய் விடலாம்
பதட்டம் ஏனோ?' என்றார்
படாதிபதி, புன் முறுவலுடன்.
பகல் மணி பனிரெண்டு
போனும் வந்த தெனக்கு

4

செய்தி வந்தது!

'உணவு கொண்டு வரட்டுமா?
உளதே ஆங்கு மற்றொன்று
உணவருந்த - வீடு திரும்ப
உண்டோ நேரம்?' என்றான் பையன்
ஊமையானேன் நான்
உன்மத்தனானேன்
உண்டேன் உணவு அங்கேயே

5

கேள்வி

'இரண்டுக்குப் படப் பிடிப்பு
இருங்கள் இங்கேயே
இரண்டே ஷாட்டுகள் - அவ்வளவே
இறுதிக்கு வந்து விட்டோம்
இருபதாம் தேதி ரிலீஸ்
இருவர்ண விளம்பரம்
இன்னும் நீங்கள் பார்க்கவில்லையோ?
இன்முகம் காட்டினார் தயாரிப்பாளர்

6

யார் குற்றம்?

'விநியோகஸ்தர் விரும்புகிறார்
விடவேண்டாம் என்கிறார் -பைனான்ஷியர்
விசேடப் பாத்திர மிது
வேறு யார் செய்வது?
விரும்புவேனோ உங்களைவிட - செய்வேனோ
விஷப் பரீட்சை' என்றார் தயாரிப்பாளர்
விலக்கிட முடியுமோ நானும் அவரை?




4.
6.
5.



7

கனவு கலைந்தது

காரில் செல்லும் நேரம்
கண் மூடலா மென்று
கண்டேன் ஓர் இன்பக் கனவு !
கனவும் தகர்ந்ததே
கண்ணீரும் வந்ததே
'கதிநமதும் இதுவோ?' என
கலங்கினேன் நான்
கடன்பட்டவன் போல்

8

போதும் போதும்

துக்கம் அடைத்தது நெஞ்சை
தூக்கம் வர்.தது சுழன்று
துயரைச் சொல்வேன் யாரிடம் ?
'துரிதமாக முடியுங்கள்
துரத்தி விடுங்கள் வீட்டுக் கென்னை
துணை இது செய்தால் போதும் - சிறு
துரும்பும் வேண்டாம் வேறு' என்றேன்.



9

பூசையில் கரடி

இடைவெளி கிடைக்கும்போது
இமைகளை மூடியபடி
இரண்டே நிமிடம்தான்
இருந்திடும் வேளையிலே
'இங்கேயா இருக்கிறீர்கள்?' என
இருந்து விடுவர் நண்பர் சிலர்
இளித்தபடி, என் பக்கத்தில்.

10

வேதனைக் குரல்

வீட்டில் உறங்க முடிவதில்லை
விரட்டுகிறான் பையன் ஆங்கே
வினையெல்லாம் எனதேதானோ?
வேலை செய்பவன் - கூடாதா
வேளைக்கு உறங்கக்கூட ?
விதி இதற்கு விலக்கு நடிகன்தானோ?
வேதனையும் இதுதானே - எனது



11

ஒளிகிறேன், எதற்கு?

"ஒரு மணி நேரம் உங்களுக்கு
ஓய்"வென்றார் டைரக்டர் ஸார்; - அப்போது
"ஓடி வருகிறார் உனைத்தேடி-'கால்ஷீட்' கேட்க
ஓர் தயாரிப்பாளர்' என்றார் என் நண்பர்
ஓடுகிறேன் இதைக் கேட்டு
ஒளிகிறேன் இடம்தேடி - அந்த
ஒருமணியாவது உறங்கத்தான்.

ஸ்டூடியோ விஜயம்

'ராஜாதேசிங்கு' ஸெட்டில் எடுத்த படம். 'இலட்சிய நடிக'ருக்கும் 'புரட்சி நடிக'ருக்கும் இடையில் இருப்பவர் சாமிரா ரெஹ்மான். வலது கோடியிலிருப்பவர் படத்தை டைரக்ட் செய்து வரும் யோகானந்.

அக்டோபர் நடுவில் பெய்த அடை மழையைக் காட்டிலும் நவப்பரில் பெய்த (இடியுடன் கூடிய) மழை சென்னையைப் பாடாய்ப்படுத்திவிட்டது. நாள் கணக்காக சூரியனைக் கண்ணால் பார்க்க முடியவில்லை. 'ஜோ' என்று ஒரே சீராக, ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் விட்டு விட்டு, மழை பெய்து கொண்டேயிருந்தது.

ஆனால் இவையெல்லாம் லக்ஷியம் செய்யாமல் எனது 'ஹெலிகாப்டர்' விமானம் பறந்து சென்று, ஒரு கர்ஜனைக்குப் பிறகு ஒரு பெருமூச்சுவிட்டு, தடார் என்று நின்றது. 'சரி தொலைந்தது' என்று நான் தீர்மானித்து திகைத்து நிற்கும்போது, அந்த இடம் பரணி ஸ்டுடியோவாக இருக்கவே உள்ளே நுழைந்தேன்.



'சகுந்தலை' வர்ணப்பட ஆரம்ப விழாவன்று தயாரிப்பாளர் குப்தா விருந்தினர் அனைவரையும் வரவேற்கிறார்.

கொட்டும்மழையில் சொட்டச் சொட்ட நனைந்துபோன சரோஜாதேவி குளிரிலும் நடுக்கத்திலும் ''வாருங்கள்'' என்று என்னை வரவேற்றார். ''அட பாவமே! உங்களுக்குமா இந்தக் கதி?'' என்று

1. ரங்கா பிக்சர்ஸ் 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' ஸெட்டில் மாலினி - டைரக்டர் ராமண்ணா. 2. 'நல்ல தீர்ப்பு' டைரக்டர் டி. பிரகாஷ் ராவும், அதன் நடிகர்களும். 3. ''திருடாதே'' யில் எம். ஜி. ஆர். 4. 'தங்கப்பதுமை'க்காக சிவாஜிக்கு 'மேக்-அப்' செய்கிறார் ஹரிபாபுவின் குமாரர்.

நான் அனுதாபப்பட்டாலும் அவர் கலகலவெனச் சிரித்தார். குளிரினுல் நடுங்கும் குரல் தில்லானு பாடியது.

"இயற்கை மழை எங்களை நனைக்கவில்லை; செயற்கை மழை செய்த சதி இது" என்று கனி ரென்று பதில் கிளம்பிற்று அருகே யிருந்து.

மழைக்கோட்டுடன் முறுவல் செய்து நின்ருர் எம். ஜி. ராமச்சந்திரன். "உங்களுக்குமட்டும் குளிர வில்லையோ?" என்றேன்.

"எனக்கு 'குளிர் விட்டுப் போயிற்று'!...நீண்ட நாளைய அனுபவத்தால்!" என்ருர் எம். ஜி. ஆர். நான் சிரித்தேன்.

"உங்களுடைய சிரிப்பு எங்களைச் சிரமழிக்கிறது!!" என்ருர் சரோஜாதேவி விளையாட்டாக.

தமிழில் நன்ருக மட்டுமல்ல; சுத்தமாகவும்-ஏன், அடுக்குமொழியில்கூடப் பேச ஆரம்பித்து விட்டார் சரோஜாதேவி!

"உங்களை யெல்லாம் மழையில் நனைத்தது போதாது. மறுபடியும் உள்ளே கூப்பிடுகிருர் டைரக்டர்" என்று எம்.ஜி.ஆரையும் சரோஜா தேவியையும் செட்டுக்குள் அழைத்தார் சின்ன அண்ணாமலை. அதற்குள் நான் எனது வேலையை முடித்துக் கொண்டு விட்டேன்.

ஏஎல்எஸ் தயாரிக்கும் 'திருடாதே' என்ற படத்துக்காக அன்று பரணி ஸ்டுடியோவில் மழைக் காட்சி படமாக்கப்பட்டது. ப. நீலகண்டன் டைரக்ட் செய்யும் இப்படத்தில், கொட்டும் மழையில் சில வாலிபர்களும் யுவதிகளும் ஆடிப் பாடி மகிழும் காட்சியும் அப்போது எம்.ஜி.ஆர். அங்கு வந்து அவர்களைக் கடத்திப் போகும் காட்சியும் வருகின்றன.

* * *

எதிரிலிருந்த பாரமவுண்ட் ஸ்டுடியோவைச் சேர்ந்த சில நண்பர்கள் எனது ஹெலிகாப்டரை நான் வருவதற்குள் சரிபார்த்துக் கிளப்பி அதையும் ஸ்டுடியோவுக்குள் கொண்டு சென்று விடவே நானும் பாரமவுண்டில் நுழைந்தேன்.

நியூ ஏஞ்சல் புரொடக்ஷன்ஸ் இரட்டையர்களான குழிபிறை முத்தய்யாவும் கண்டனூர் சௌரி ராஜனும் ஆர். ஏ. பிக்சர்ஸ் ராகவனுடன் எனது ஹெலிகாப்டர் அருகே நின்றிருந்தனர். என்னைப் பார்த்ததும் "உங்கள் விமானத்தை நடுரோட்டிலே கண்டெடுந்தோம்" என்று கேலி செய்தனர்.

இவர்கள் தயாரித்து வரும் படத்துக்கு 'பண்ணையார் மகன்' என்று இப்போது பெயர் வைத்திருக்கிருர்கள். டி. ஆர். மகாலிங்கம், டி. கே. ராமச்சந்திரன், வி. ஆர். ராஜகோபால், ராகினி, சுந்தரிபாய், பத்மினி பிரியதர்சினி, பேபி மாலதி முதலியோர் நடிக்கும் இப்படத்தை ஜம்பனு டைரக்ட் செய்கிருர். ஏ. எல். நாராயணன் இதற்கான கதை-வசனத்தை எழுதியிருக்கிருர்.

'ஒரே வழி'யில் எம். என். ராஜம், பிரேம் நஸீர்.

இப்படத்தில் தர்மலிங்கம்பண்ணையாராக வி. எஸ். ராகவனும் பண்ணையார் மகன் மாணிக்கமாக டி. ஆர். மகாலிங்கமும் நடிக்கின்றனர். பண்ணையாரின் தமக்கை பரிபூரணமாக சுந்தரிபாய் அமர்க்களப்படுத்துகிறார். பரிபூரணத்தின் மகன் வில்லன் வரதனாக நடிப்பவர் டி. கே. ராமச்சந்திரன்.

காணமற்போன மாணிக்கத்துக்குப் பதில் குபீர் குப்புசாமி என்ற நாடக நடிகனைக் காட்டி பண்ணையாரை ஏமாற்றப் பார்க்கிறான் வரதன். வி. ஆர். ராஜகோபால் குபீர் குப்புசாமியாக வருகிறார். நாடகத்தில் அவருடன் நடிக்கும் சக நடிகையாக ராகினியும், பண்ணையார் மகள் நிர்மலாவாக மாலினியும் இதில் தோன்றுகின்றனர். அன்றைய காட்சியில் குபீர் குப்புசாமியைப் பற்றியும் வரதனைப் பற்றியும் அளந்து கொண்டிருந்தான் ஐவ்வாது—அதாவது பண்ணையாரின் வேலைக்காரன்—அதாவது வி. எஸ். பாண்டியன்.

* * *

மாலினியைப்பற்றி இங்கே இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மாலினி வேறொரு செட்டில் 'ச்சோ' ...'ச்சோ' என்று தும்மிக்கொண்டிருந்தார். "இந்த மழைக்காற்று அவருக்கு ஒத்துக்கொள்ள வில்லை போலிருக்கிறது என்று நான் நினைத்தபோது, "பெண்கள் தும்மும்போது வரும் ஒரிஜினல் சத்தம் வரல்லையே!" என்று காமிராமேன் ராஜாபாதர் குறைப் பட்டதைக் கேட்டேன். "இதோ நான் தும்மிக்காட்டுகிறேன்" என்று டைரக்டர் ராமண்ணா மாலினிக்குத் தும்மக் கற்றுத் தந்தார்.

ரங்கா பிக்சர்ஸ் தயாரிக்கும் 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்ற படத்துக்காக இந்த ரகளையெல்லாம். ஒரு சின்னஞ்சிறிய தும்மலைப் பிரமாதப் படுத்துகிறார் மாலினியின் தகப்பனார். ஏனென்றால் அவர் ஒரு பெரிய பணக்காரர்.

குதிரைச் சவாரி செய்யும்போது குதிரை மிரளவே, அந்த ஆபத்திலிருந்து ஒரு வாலிபன் எஜமானியம்மாளைக் (மாலினி) காப்பாற்றுகிறான். அவன் செய்த உதவிக்கு வந்தனம் தெரிவித்தாள் அவள். ஆனால் அந்த வாலிபன் அதை லக்ஷியம் செய்யவில்லை. ஆக்ரோஷம் வந்து விட்டது அம்மணிக்கு. உடனே அப்பாவிடம் 'ரிபோர்ட்' செய்தாள்.

"அடடா!" என்று அங்கலாய்த்தார் அவர். அவளிடமிருந்து நன்றியைப் பெறும் தகுதி அவனுக்குக் கிடையாது என்றார் அவர். இக்கட்டத்தில் பணம் படைத்தவராக எம். ஆர். ராதா நடிக்கிறார். பிரேம் நஸீர், முத்துராமன், பீர் முகம்மது, இ வி. சரோஜா முதலியவர்கள் நடிக்கும் இப்படத்தின் கதையை துறையூர் மூர்த்தி எழுதியிருக்கிறார்.

* * *

கடற்கரை மணலிலே படுத்துப் புரண்டபடி கனகுஷியாகப் பாடிக் கொண்டிருந்தார் ராஜசுலோசனா; இல்லையில்லை ரஞ்சனி.

"எல்லோருமே காணக் கல்யாண
மே-செய்து
உல்லாசமாய் இருப்போமே"

ரஞ்சனியுடன் கூட மாணிக்கமும் இருந்தான். சந்தோஷத்துக்குக் கேட்பானேன்?...இளம் காதல் ஜோடி - காலேஜ் நட்பு!...

கஜலக்ஷ்மி பிக்சர்ஸ் தயாரிக்கும் 'புதுமைப் பெண்'ணில் மாணிக்கமாக நடிக்கிறார் மனோகர். அவரும் ராஜசுலோசனாவும்வாயசைத்த இந்தப் பாட்டை ஜிக்கி - ராஜா ஜோடி பின்னணியில் பாடியிருந்தனர். மருதகாசியின் இப்பாடலுக்கு லிங்கப்பா மெட்டமைத்தார். பி. ஏ. குமார் கதை-வசனம் எழுதும் புதுமைப் பெண்ணை திருவேங்கடம் டைரக்ட் செய்து வருகிறார்.

எஸ். எஸ். ராஜேந்திரன், டி. எஸ் பாலய்யா, வி. கே. ராமசாமி, எஸ். வி. சுப்பய்யா, எம். என். ராஜம் முதலியோரும் இதில் நடித்து வருகின்றனர்.

இங்கே காதலியுடன் இன்று பாடிக் கொண்டிருக்கும் மனோகர் நேற்று பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் எஸ். வி. சஹஸ்ரநாமத்திடம் ''எனக்குக் கொஞ்சம் விஷம் கொடுத்து விடுங்கள் டாக்டர். நான் செத்துப் போகிறேன். அதுதான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உபகாரம்!'' அப்படி இப்படி என்று தாடியும் மீசையுமாகக் கெஞ்சிக் கொண்டிருந்தார். விஷயம் வேறொன்றுமில்லை. ஆர். எஸ். ஆர். மூவிடோன் 'தர்மபத்தினி'யில் அப்படியொரு காட்சி வருகிறது. வேதா கலைமணி என்பவர் கதை - வசனம் எழுதியுள்ள இப்படத்தை கிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்.

தன்னிடம் விஷம் கேட்ட நண்பருக்கு அந்த டாக்டர் ஆறுதல் கூறி அவருடைய கதையைச் சொல்லும்படிக் கேட்கிறார். பிறந்து கதை!

*　　　　*　　　　*

அன்று நெப்டியூனுக்குள் நான் நுழையும்போது புதுத் தென்புடன் காட்சியளித்தது அந்த ஸ்டுடியோ. அங்கே பல புதுமைகள்.

அந்தக் கிராமத்தின் தலைவர்களான செல்லதுரையும் (பகவதி) தம்பிதுரையும் (ஜெமினி கணேசன்) அசந்திருக்கும்போது அழித்துவிட முயலுகிறான் வில்லன் (நாகேந்திரராவ்) அதற்காக ஒற்றர்களான திருமேனி (நம்பியார்), மாரப்பன்

ராஜா ஸ்னோ

ராஜா
டால்கம்பவுடர்

உங்களுடைய முகத்தை வசீகரமாக்க ராஜா டால்கம் பவுடர் ஏற்ற சாதனம்.

ராஜா ஸ்னோ உங்களுடைய சருமத்திற்கு கவர்ச்சியை அளிக்கிறது. இவைகள் கைவசம் இருக்கட்டும்.

use
Raja Kusturi Soap for luxury Bath
Raja Bar Soap for easy washing

MFRS : MANYAM & CO., BANGALORE-3.

G.P.

(எஸ். ஜி. ஈஸ்வர்) இருவரையும் தகவலறிய அனுப்பி வைக்கிறுன். சென்ற இடத்தில் திருமேனி தங்கி, அவ்வப்போது செய்தியனுப்ப சம்ம திக்கிறுன். மாரப்பன் திரும்பி விடு கிறுன். ஆனல் தம்பிதுரையும் செல்லதுரையும் நேர்மையானவர் கள் என்பதையறிகிறுன் திருமேனி. அங்கே பூங்கோதை (எம். என். ராஜம்) என்ற பெண்ணையும் காத லிக்கிறுன். திருமணம் நிச்சயமாகி, கிராம வழக்கப்படி திருமேனி கையில் கங்கணம்கட்டப்படுகிறது. அப்போது மீண்டும் வருகிறுன் மாரப்பன். பகையாளி குடியை திருமேனி உறவாடி கெடுப்பதாக நினைக்கிறுன் மாரப்பன். ஆனல் உண்மையிலேயே, தான் பூங்கோ தையை மணக்கப் போவதாயும் செல்லதுரையும் தம்பிதுரையும் நல்லவர்களென்றும் கூறுகிறுன் திருமேனி. அவன் எஜமான துரோ கம் செய்துவிட்டதை யறிந்த மாரப்பன், திருமண நாளை அறிந்து, அன்று வந்து யாவரையும் அழித்து விடத் தீர்மானித்துப் போகிறுன். இக்காட்சிகள் ஜுபிடர் பிக்சர் ஸார் தயாரித்து வரும் "எல்லோ ரும் இந்நாட்டு மன்னர்" தமிழ்ப் படத்தில் வருகின்றன.

* * *

இந்த ஸ்டுடியோக்களை "சுற்றி" விட்டு சாவகாசமாக வாஹினி ஸ்டுடியோவிற்குள் நுழைந்தேன். அசோகா பிக்சர்ஸ் பெண்குலத்தின் பொன் விளக்கு, தேவர் பிலிம்ஸ் வாழவைத்த தெய்வம், ஸ்ரீபுரொ டக்ஷன்ஸ் நல்ல தீர்ப்பு, கிருஷ்ணு பிக்சர்ஸ் ராஜா தேசிங்கு சங்கர் பிலிம்ஸ் மங்கையர் உலகம், பத்ம ஸ்ரீயின் தெலுங்குப்படம், விஜயா பிலிம்ஸ் தமிழ்ப்படம் ஆக ஏகப் பட்ட கலகலப்பாக இருந்தன வாஹினி—விஜயா ஸ்டுயோக்கள். இவைகள் எல்லாவற்றிலேயும் ஒவ் வொரு படம் பிடித்துக்கொண்டேன் முதலில்.

'வாழவைத்த தெய்வம்' படத்திற் காக விவசாயி வேஷத்தில் இருந்த எஸ். வி. சுப்பய்யா ஏகமாகச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அவரும் அவருடைய குடும்பத்தின ரும் ஒரு இரட்டை மாட்டு வண்டியி லேறி அந்தக் கிராமத்தை விட்டே வெளியேறிவிடத் திட்டமிட்டிருந் தனர். அப்போது அவரைத் "தம்பி" என்றழைக்கும் உரிமை கொண்ட ஒருவர் தனது மனைவி யுடன் அவரிடம் வந்து, "வீரப்பா! என்னை மன்னித்து விடு. நான் நியாயத்துக்காகத்தான் அப்படித் தீர்ப்பளித்தேன்" என்று மன்ரு டினர்.

"எது நியாயம்? எலிவளை வழி யாக வீணுகும் உனது முறைத் தண்ணீரைத் தடுத்து உன் வயலுக் குத் தண்ணீர் பாய்ச்சிய எனது மகனின் செயலா அநியாயம்?" என்று கர்ஜித்தான் வீரப்பன் (சுப்பய்யா). அப்போது வீரப்ப னின் கால்களைப்பற்றிய அண்ணனை உதறினுன் அவன். வீரப்பன்மகனும் மனைவியும் பெரியவரைச் சமா தானப்படுத்தினர். இக்காட்சியில் கண்ணும்பா, மாலதி ஆகியவர்க ளுடன் வீரப்பன் மகனுக ஜெமினி கணேசன் நடித்தார்.

Career Making TECHNICAL Books

BARGAIN BY V P. POST

14 LANGUAGES MASTER-Learn without tutor German, French, Burmeese, Chineese, Roman, Russian etc.(14 languages). Enlarged new edition Price Rs 5 How to get and use money Rs 4 Music and Dancing Rs 4 Manhood in the making Rs 4. Secrets of Hand Reading Rs 4.Modern Family Planning Rs 4. A book for Brides Rs 3 Get more out of life Rs 3. Winning personality Rs 4. Marriage Technique Rs 3. Health Secrets Rs 3. Your future strength Rs 3. Fairies of Filmistan Rs. 4. Art of Living Rs 3. Motor Mechanic Teacher Rs 4 Watch Repairing Guide Rs 4. Beauties of France (Illustrated) Rs 4. Mental worries causes and cure Rs 4. How to get rich quickly Rs 3. Success through character Rs 4 How to influence people Rs 4. How to speak in public Rs 4 Success through will power Rs 4. How to become film star Rs 4. Embroidery design book Rs 3 Harmonium Guide Rs 3. Flute Guide Rs 3. Tabla (Tambourine) Guide Rs 3. Sitar Guide 3. V. P. P. Charges 87 N. P. extra on each order Correspondence strictly in English.

SULEKHA BOOK DEPOT
P.O. 13- ALIGARH (India)





1. 'பெண்குலத்தின் பொன் விளக்கு' 2. 'வாழவைத்த தெய்வம்' 3. அருணா பிலிம்ஸ் 8-வது வருஷ விழா 4. 'சீதா ராமகல்யாணம்' ஆரம்பவிழா. 5. சரவணா பிலிம்ஸ் விழா 6. 'தெய்வமே துணை' 7. 'புதுமைப்பெண்' சுலோசனா. 8. பாரமவுண்ட் ரெட்டியார்.

மதுரையில் 'மதுரை வீரன்'

தமிழகத் தலை நகரில் தங்க வீரவாள் பரிசு

'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்' என்றார் வள்ளுவர். அந்த பாக்கியம் இரண்டு பேருக்குக் கிடைத்திருக்கிறது. ஒருவர் கேரள மாதா. மற்றொருவர் எம். ஜி. ஆர். அவர்களின் தாயார் சத்யபாமா. இதற்குள் உங்களுக்கு விஷயம் புரிந்து போயிருக்கும்.

அக்டோபர் 26-ம் தேதியன்று மதுரையிலே மாபெரும் விழா நடைபெற்றது. புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அன்று (காங்கிரஸ் தவிர) சர்வ கட்சிகளின் பிரதிநிதிகளால் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. விழாவன்று காலையில் சர்வகட்சி பிரதிநிதிகள், விழாத் தலை

வர்கள் ஆகியோருக்கு ரயில் நிலையத்தில் வரவேற்பு நடைபெற்றது.

சரியாக 4-30 மணிக்கு மங்கம்மா சத்திரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. திறந்த சாரட்டில் புரட்சி நடிகர் பவனி வந்தது, பாண்டிய மன்னரின் வெற்றி உலாவை நினைவூட்டியது. வீதிகளில் ஊர்வலம் வரும்போது, மாடிகளிலிருந்து அன்பர்கள் பூமாரி பொழிந்தனர். கூப்பிய கரத்துடன் நன்றி ததும்ப அமர்ந்திருந்தார் எம். ஜி. ஆர். சிம்மக்கல் வழியாக வைகைப் பாலத்தைக் கடந்து தமுக்கம் மைதானத்தை யடைந்தது ஊர்வலம்.

பிரம்மாண்டமான கூட்டத்திலே அமைப்பாளர்களில் ஒருவரான எஸ். முத்து வரவேற்புரை நிகழ்த்தியபின், விழாவைத் துவக்கி வைத்தார் சட்டசபை தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணராவ். பிறகு பி. டி. ராசன் தலைமை உரை நிகழ்த்தியதும் தி. மு. க. பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன், தங்க வீரவாளை புரட்சி நடிகருக்குப் பரிசளித்தார். அப்போது ஏற்பட்ட கரகோஷம் ஒரு மைலுக்குமேல் எதிரொலித்தது. வி. கே. ராமசாமி முதலியார், விஜயலக்ஷ்மி, எம். கே. சண்முகம், ஏ. எஸ். ஏ. சாமி, டி. கே. பகவதி, டி. எஸ். துரைராஜ், எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, டாக்டர் ராசமாணிக்கனார், கே. ஆர். ரரமசாமி, கண்ணதாசன், என். எஸ். நாராயண பிள்ளை முதலியோர் புரட்சி நடிகரைப் பாராட்டிப் பேசினர்.

விழாவில் கிருஷ்ணா பிக்சர்ஸ் லேனா செட்டியார் புரட்சி நடிகருக்கு வைரமோதிரம் பரிசளித்தார். ப. நீலகண்டன், நடேசன் இருவர் சார்பில் ராஜேந்திரனும், பாரத் புரொடக்ஷன்ஸ் சார்பில் நமசிவாயமும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். தமிழகத்தின் பாராட்டுக்கு நன்றி தெரிவிக்க எம். ஜி. ஆர். எழுந்திருந்த போது மக்களோடு, நகரின் உள்ளமும் குளிர்ந்தது. நல்ல மனதுடையோரின் விஜயத்தால் மழைபெய்தது!



கூந்தலை பலவித மாதிரிகளில் - அழகுபடுத்திக் கொள்வது ஒரு பெரும் கலை. இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒருசிலர்தான் இருக்கிறார்கள். இவர்கள், எல்லோருக்கும் நேரில் வந்து கொண்டை போடுவதோ, அல்லது போட்டுக் கொள்வதைப் பற்றி விளக்குவதோ முடியாது.

திரையில் நமது நக்ஷத்திரங்கள் செய்து கொள்ளும் நூதன கொண்டை அலங்காரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு 'இவற்றை எப்படி போட்டுக் கொள்வது?' என்பதைப்பற்றி விளக்கமாக எழுதும்படி எங்களைக் கேட்டுக் கொண்ட வாசக சகோதரிகள் பலர் உண்டு.

அவர்களது 'கேள்வி'க்கான 'பதி'லாகத்தான்— சென்ற மாதம் நாம் இப்புதுப் பகுதியை ஆரம்பித்தோம்.

'பேசும் படம்' வாசக சகோதரிகளுக்கென நாம் ஆரம்பித்திருந்த 'கொண்டை வகைகள்' பற்றிய தொடரில் இரண்டாவதாக, 'ஆட்டீன் கொண்டை'யைப் பற்றி நடிகை சந்தியா விளக்கம் தந்து, பேர்ட்டுக் கொண்டும் காட்டியிருக்கிறார்.

சந்தியாவின் சகோதரியான ஸ்ரீமதி கண்ணம்மா இந்தக் கொண்டையை சந்தியாவுக்கு அறிமுகப் படுத்தியதுடன், நமது வாசக சகோதரிகளுக்காக அவரே சந்தியாவுக்குப் போட்டுக் காண்பிக்கவும் செய்திருக்கிறார்.

இந்தக் கொண்டையை அவர் பம்பாயில் ஒருவர் அணிந்து கொண்டிருப்பதைப் பார்த்து, அது எப்படி அமைக்கப்பட்டிருக்கும் என்பதை அனுமானம் செய்து சந்தியாவுக்குப் போட்டுக் காட்டி யிருக்கிறார்.

மிகவும் எளிய முறையில் அமைந்துள்ள இக்கொண்டை கவர்ச்சி மிக்கது.

"ஆட்டீன்"

கொண்டை
வகைகளில்
இரண்டாவதாக
இம்மாதம்
ஆட்டீன்
கொண்டை
யைப் போட்
டுக் காட்டி
யிருக்கிறர்
நடிகை
சந்தியா.

கொண்டை





கூந்தலை நன்றாகச் சீவி விடவேண்டும் முதலில். கூந்தல் நன்றாக சீவி விடப்பட்டதும் நேர் வகிடு எடுக்கப்பட்டு, இரண்டு சம பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன, பிறகு. .

தனித்தனியே பிரிக்கப்பட்ட கூந்தல் இரண்டும், அடி பாகத்தில், மெல்லிய கருப்பு நூல் கொண்டு கட்டப்படுகின்றன. இது தெரியாமலிருக்கவே கருப்பு நூலை உபயோகிக்கிறோம்

கருப்புநூல்எடுத்து முடிச்சுபோடப்பட்டபின் கூந்தலின் பின்புறத் தோற்றம் இப்படி இருக்கும். அதாவது கூந்தல்கள் தனி கூந்தலைப்போல் காட்சி அளிக்கும்.

இடதுபுறம் உள்ள கூந்தல் வலது புறமும், வலது புறமுள்ள கூந்தல் இடது புறமும் கொண்டு வரப்படுகின்றன. கூந்தலில் முடிச்சின் மீது இதை வைக்கவும்.





உங்கள் பார்வைக்கு வலது புறமுள்ள கூந்தல் இடது புறம் கொண்டு வரப்பட்டு, இடது புறமுள்ள கூந்தலின் மேல் ஹேர் பின் கொண்டு பிணைக்கப்படுகிறது.

ஹேர் பின்னும் கொண்டை ஊசியும் ஒரு பகுதிக்கு ஒவ்வொன்றாகக் குத்தப்பட வேண்டிய முறை இங்கு விளக்கமாகக் காட்டப்படுகிறது. கூந்தலில் இவை நன்கு மறைய வேண்டும்.

கூந்தலின் இரு பகுதிகளும், மேல் புறம் மடித்துக் கொண்டு வரப்பட்ட பின் கொண்டையின்தோற்றம். ஆட்டின் உருவத்தை இதில் இப்போதே காணலாம்

மெல்லிய கருப்பு வலை கொண்டு கொண்டை மூடப்படுகிறது. வலையை கொண்டையின் அடிப்புறமிருந்து கொண்டுவரவேண்டும். இதுதான் முறையானது.







ரிப்பன் மடிக்கப்பட்டு கொண்டையின் மத்தியில் பொருத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கொண்டையைச்சுற்றி பூ வைக்கப்பட்டு, மத்தியில் சேர்க்கப்பட்டுள்ளது.

இக் கொண்டைக்கு இரண்டு கொண்டை ஊசிகள், இரண்டு ஹேர் பின்கள் (ஸ்லைடுகள்), அரை முழ நீளமுள்ள இரு கருப்பு நூல்கள், ஒரு வலை இருந்தால் போதும்.

முன்னுள்ள பக்கங்களில் இக் கொண்டையைப் போட்டுக் கொள்ளும் முறைபற்றி விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

இக்கொண்டையில் ரிப்பனை மேலே உள்ள படத்தில் காட்டியிருப்பது போல் மடித்து, நடுவில் வைத்துச் செருகிக் கொள்ளலாம். அல்லது கொண்டையைச் சுற்றி கீழ்ப்பக்கத்திலிருந்து பூ வைத்து, கொண்டையின் மேல் பக்கமாக, ஒரு ஸ்லைடினால் செருகிவிடலாம். பூ வைப்பதன் மூலம் கொண்டையின் எழில் நன்றாகப் புலப்படும்.

பூவையும் வைத்துக் கொண்டு கொண்டையின் நடுவில் ரிப்பனையும் வைத்துக் கொள்ளலாமா என்று சிலர் கேட்கலாம். கொண்டையின் அழகு இதனால் நிச்சயம் கெட்டுவிடும் என்பதைத் தவிர, நான் வேறு என்ன சொல்ல முடியும்?

அடுத்து முன்னால் நான் வைத்துக்கொண்டிருக்கும் கர்லிங் பின்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமலிருப்பதைச் சிலர் நினைவுபடுத்திக் கேட்கலாம்.

தேவையான சாமான்கள் இவ்வளவே!

இயற்கையிலேயே வளைவான கூந்தல் உள்ளவர்களுக்கு இவை தேவை இல்லை. முன்புறம் கூந்தலில் வளைவு வேண்டும் என்று விரும்புபவர்கள் இவற்றை வைத்துக் கொள்ளலாம்.

இது இல்லாமலும் இக்கொண்டையை போட முடியும். ★



லலிதகலா பிலிம்ஸ்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

காட்சிகள்



அமரகவி பாரதியார் பாடலின் ஒரு அடியான "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்பதையே தங்கள் படத்திற்குப் பெயராக வைத்திருக்கிறார்கள் லலிதகலா பிலிம்சார்.

ஹொன்னப்ப பாக
வதர் தயாரித்து
வரும் இப்படத்தை
தருமுகம டைரக்ட்
செய்து வருகிறார்.
விரைவில் திரைக்கு
வரவிருக்கும் படங்
களில் இதுவும் ஒன்
ருகும். நடிகர், தயா
ரிப்பாளராகிஆனால்
டைரக்ட் செய்யாத
படம் இது.



எம். என். ராஜம், பிரேம் நசீர் ஜோடி பிரேம பாசத்தில் நடிக்கும் இதில் இ. வி. சரோஜா கண்ணாம்பா வி. ஆர். ராஜகோபால் முரளிபோரும் நடிக்கிறார்கள். பாட்டு. நடனம் எல்லாம் இதில் நன்றாக இருக்குமாம்

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!

நான் வளர்த்த தங்கை

வில்லியும் ஆகா என்கிற காடு வெட்டியும் இருக்கும்போது, சாமியா பிள்ளை வருகிறார். அவர்களுக்குத் தேவையான பணம் விஷயமாகப் பேச்சு நடக்கிறது. பிறகு அவர் அவர்களிருவரையும் பார்த்து, ''புத்திரபாக்கியம் உண்டாகட்டும்'' என்கிறார். அவரிடம் தங்களுக்குத் திருமணமே ஆகவில்லை என்று கூறுகிறான் காடு வெட்டி. அந்த வீட்டிலே உண்ணாமலையிடம் அதிக செல்வாக்கு பெற்றவர் சாமியா பிள்ளை. அவருக்கு அந்த வீட்டிலுள்ளவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி நன்றாகத் தெரியும். அப்படியிருக்கையில், 'புத்திர பாக்கியம் உண்டாகட்டும்' என்று எப்படிக்கூற முடியும்? இந்த அபத்தக் காட்சியை வெட்டிவிடவேண்டும்.

வெற்றிமதி சந்திரன்,
கோவை.

மாய மனிதன்

சலவைச்சாலையின் முதலாளியான கார்மேகம், மின்னல்கொடி என்ற ஒரு வேலைக்காரியைக் காதலிக்கிறான். அவள் தன்னைக் காதலிக்கிறாளா இல்லையா என்பதை



இந்த இருவரில் இந்த ஆம்பிளையின் (பக்கிரிசாமி) முகபாவத்தைப் பார்த்தாலே, அவர் அந்தக் குறும்புக்காரியிடம் (டி. பி. முத்துலக்ஷ்மி) எதற்கோ குழைகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? — எம். ஏ. வி. பிக்சர்ஸ் தயாரிப்பான 'மாதவி' தமிழ்ப் படத்தில்.

1959 உங்கள் எதிரில்



ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும் உங்கள் பெயர்விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ரூ. 1.25க்கு தனித் தபால் செலவுடன், உங்களுக்கு வரும் 12 மாதங்களில் ஏற்படும் பலன்களையும் வியாபாரத்தில் லாப நஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம், குழந்தைப் பேறு, சந்துஷ்டி மற்றும் தேக அசௌகரியங்களையும் அவைகளினின்றும் பாதுகாக்கும் குறிப்புகளையும் அனுப்புகிறோம்.

SHREE SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(P.P.M.) Jullundur City. (Pb.)

அறிய முயற்சித்து ஒன்றும் முடியாமல் தோல்வியுறுகிறான். கடைசியாக தன் வேலைக்காரனிடம், தான் இறந்து விட்டதாகச் செய்தி சொல்லும்படிக் கூறி அனுப்புகிறான். இதைக் கேட்ட மின்னல் கொடி உண்மையாகவே அவன் இறந்துவிட்டதாகக் கருதி, அவன் வீட்டிற்கு ஓடிப் போய் அவன்மீது விழுந்து புரண்டு, கட்டி அணைத்துப் புலம்புகிறாள். இந்தக் கட்டம் மிகவும் பாடாவதியாக இருப்பதுடன் படத்தின் விறுவிறுப்பையும் குறைத்து விடுகிறது. இதை தாராளமாகக் கத்தரிக்கோல் பிரயோகம் செய்து விடலாம்.

எம். எஸ். மணி,
திருச்சி.

சபாஷ் மீனா

கதாசிரியரின் கற்பனைப்படி மீனா கொஞ்சம் படித்தவள், விஷயமறிந்தவள். குப்பத்திலுள்ளோருக்கு கல்வியறிவு புகட்டி, சுகாதாரமாக இருக்கச் செய்யும் அவள், மோகனிடமும் வேலை செய்து நேர்மையோடு பிழைக்கும்படிக் கூறுகிறாள். அப்படிப்பட்ட மீனா கொட்டும் மழையில் மோகனோடு கட்டிப் புரண்டு சேற்றில் விழுவாளா? இந்தக் காட்சி வெட்டப்பட வேண்டும்.

வீராசாமி,
காஞ்சீபுரம்.

நான் வளர்த்த தங்கை

வில்லி புரொபசர் ஆகாவிடம் காரியதரிசி வேலைக்காக வருகிறாள். அவன் அவளைப்பற்றி யெல்லாம் விசாரிக்கிறான். கண்டதும் காதல் கொள்ளுகிறான். பன்னிப் பன்னிப் பல கேள்விகள் கேட்கிறான். இதைப்பற்றியெல்லாம் நமக்குக் கவலையில்லை. அவள் மார்பளவு தெரிந்துகொள்ள 'டேப்' எடுக்கிறான். பிறகு அவளையே அளந்து கொள்ளச் சொல்லுகிறான். இந்த ஆபாசக் காட்சியை வெட்டிவிட வேண்டும்.

அண்ணா சாரங்கபாணி,
கோயம்புத்தூர்.

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50 - க்கு, 96" × 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல் பணம்வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.

"GOKUL"
SANTOL
TOILET POWDER
T.S.R's
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்

இப்படிப்பட்ட தோற்றத்தோடு ஒருத்தி நடனமாடினுல் உலக மெட்டுக்கள்-பாஷை கொண்ட பாட்டு உண்டு என்று அர்த்தம்!-ஜுபிலியின் 'அன்பு எங்கே?'யில் உடலழகி சூர்யகலா.

இப்படியொரு கட்டழகி பக்கத்து வாட்டில் பார்த்தால் ஒரு ஆண் சரணடைந்து விட்டான் என்று அர்த்தம்! சதர்ன்மூவீஸ் தயாரித்துவரும் 'பாக்தாத் திருட'னில் விழியழகி வைஜயந்திமாலா.

புதிய வெளியீடுகள்

நான் வளர்த்த தங்கை

தயாரிப்பு: சரவணபவா - யூனிடி
டைரக்ஷன் : சியெச். நாராயண மூர்த்தி
நீளம் : 17,070 அடி
வெளியிட்ட தேதி : 10-11-58.
வசனம் : ரா. வே.
நடிகர்கள் : பிரேம் நசீர், டி. கே. ராமச்சந்திரன், நாகய்யா, பண்டரிபாய், மைனாவதி, சுந்தரி பாய், ராஜகோபால்.

பார்வதியும் பத்மாவும் ஷண்முகம் பிள்ளையின் அருமைப் புத்திரிகள். பார்வதியை மணந்த சங்கர், தான் உயிரோடிருந்து பார்வதியைப் படுத்தியது போதாதென்று, அவளுடைய மஞ்சள் குங்குமத்திலும் கைவைத்து விட்டான்.

தாயற்ற பத்மாவைப் பாசத்தோடு வளர்த்தவள் பார்வதி. அதனால் பத்மாவிடம் தன் விதவை மகள் நிம்மதியாக இருப்பாள் என்று நினைத்துக் கண்ணை மூடினார் ஷண்முகம்பிள்ளை. ஆனால் பிள்ளையின் தூரத்து உறவு முறைக்காரியான உண்ணாமலை இந்தக் குடும்பத்திலே புகுந்து புயலைக்கிளப்பினாள். உடன் பிறந்தவர்களைப் பிரித்து, பார்வதியைப் புக்ககம் அனுப்பினாள்.

'மாங்கல்ய பாக்கியம்'

பார்வதி அங்கும் நிம்மதியாக வாழ முடியவில்லை. அவள் மகன் முரளியைப் பார்க்க, பத்மாவின் கணவன் சுந்தரம் அங்கு அடிக்கடி வந்து போவதை ஊரார் தவறுதலாகத் திரித்தனர். இந்தத் திரியிலே பற்றிய நெருப்பு பத்மாவின் இதயத்தையும் சுட்டது. பார்வதியும் முரளியும் தெருவை யடைந்தனர்.

அனாதைகளாகிவிட்ட தாயையும் சேயையும் வேருக்கியது விதி. இவர்களிடம் வைத்திருந்த அக்கறை காரணமாக இவர்களைத் தேடிப் புறப்பட்டான் சுந்தரம். மகனைப் பிரிந்த பார்வதி பயித்தியம் பிடித்து அலைந்தாள்.

பாம்பாட்டி ஒருவனை அண்டி வளர்ந்து வந்த முரளியிடமே அடைக்கலமாகப் போய்ச் சேர்ந்தான் சுந்தரம்.

இதற்கிடையில் பத்மாவுக்கு உண்ணாமலையின் சூழ்ச்சிகள் தெரியலாயின. அவள் கண்கள் திறக்கவே தமக்கையையும் கணவனையும் தேட முயற்சித்தாள்.

கடைசியில் தற்செயலாகக் குடும்பத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

விமர்சனம்

ஆமை வேகத்தில் நகரும் கதையின் ஆரம்பம் பாதிவரை வந்ததும் சூடுபிடித்துச் சுறுசுறுப்பாய் ஓடுகிறது. படத்தின் பிற்பகுதியில் உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிமயமான கட்டங்கள் படம் பார்ப்பவர்களைப் பெரிதும் தம் வசமாக்கிக் கொள்கின்றன. கதையம்சத்தைப் போலவே, வசனமும் பாடல்களும் சுமாராகத்தான் இருக்கின்றன. சில இடங்களில் இலக்கணத் தமிழும் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறது. மைனாவதியின் நடனங்கள் இசை நயத்திற்கேற்ற அசைவுகளின்றி சலிப்பூட்டுகின்றன.

மாங்கல்ய பாக்கியம்

தயாரிப்பு : கிருஷ்ணு பிக்சர்ஸ்
டைரக்ஷன் : டி. ஆர். ரகுநாத்
நீளம் : 16,649 அடி
வெளியிட்ட தேதி : 10-11-58
கதை, வசனம் : அய்யாப்பிள்ளை
நடிகர்கள் : பாலாஜி, தங்கவேலு, பாலய்யா, ராகினி, குசலகுமாரி, எம். என். ராஜம்.

பாட்டாளிப்பட்டி வாரிசியான கௌரி என்ற பெண்ணைத் தூக்கிச் செல்ல முயலும் ஒரு மந்திரவாதியிடமிருந்து அவளைக் காப்பாற்றி அவளுடைய காதலைப் பெறுகிறான் சந்திரன். அவன் தங்கை சுமதியை ஒருதலைப்பட்சமாகக் காதலித்த பரமானந்தம் அவளைத் தூக்கிச் சென்று விடுகிறான். ஆனால் மந்திரவாதி சுமதியை பரமானந்தத்திடமிருந்து கடத்தி விடுகிறான்.

இதற்கிடையில் சந்திரனுக்கும் கௌரிக்கும் திருமணம் நடைபெறுகிறது. அன்றியும் சந்திர கிரஹணத்தன்று அவனுக்கு ஒரு கண்டம் இருப்பதாகத் தெரிந்தும் அவன் அதே தினம் சுமதியை மீட்க மந்திரவாதியின் குகைக்கு ஓடுகிறான்.

கணவனைக் காப்பாற்ற வேண்டி கௌரியும் பின்தொடருகிறாள். அவள் தனது மாங்கல்யபலத்தால் மந்திரவாதியின் எல்லாக் கட்டுக்களையும் மீறி குகைக்குள் சென்று கணவனை அடைகிறாள். அதே சமயம், மந்திரவாதிக்கு விரோதமாகத் திரும்பிவிட்ட அவன் சிஷ்யன் மந்திரக்கோலை முறித்து விடுகிறான். உடனே போலீஸாரும் அங்கு பிரவேசித்து மந்திரவாதியைக் கைது செய்கிறார்கள்.

விமர்சனம்

இந்தக் கதை ஒரு புராணப் படமா, மந்திர தந்திரங்கள் நிறைந்த மாயாஜாலப் படமா, சமூகப்படமா என்று யாரும் கூற முடியாது. மொத்தத்தில் இது ஒரு 'கலப்படம்'.

காத்தவராயன்

தயாரிப்பு : ஆர். ஆர். பிக்சர்ஸ்
டைரக்ஷன் : ராமண்ணு
நீளம் : 17,469 அடி
வெளியிட்ட தேதி : 7-11-58
கதை, வசனம் : துறையூர் மூர்த்தி
நடிகர்கள் : சிவாஜி கணேசன், டி. எஸ். பாலய்யா, தங்கவேலு, சந்திரபாபு, சாவித்திரி, கண்ணும்பா. இ.வி. சரோஜா.

ஆட்டத்தின்போது அகங்காரம் கொண்ட சக்தியை பூலோகத்தில் மானிடப்பிறவி யெடுக்கும்படிச் சபிக்கிறார் சிவபெருமான். உதவிக்கு வரும் வீரபாகுவுக்கும் அதே தண்டனை கிடைக்கிறது. வீரபாகுவைக் குழந்தையாக்கி வளர்த்து வரும் பார்வதியிடமிருந்து அதை வாங்கி வளர்த்து வருகின்றனர் வேடர்குல மங்கையர். அவனும் காத்தவராயன் என்ற பெயரில் வாலிபனுகிறான்.

ரூ. 1000 சவால்

மாயக் கைக்குட்டை

அதிசயமான இக்கைக்குட்டை மாய சக்தியைக் கொண்டு, 16 வருஷங்களாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் எல்லா விஷயங்களிலும் அது எவ்வளவு கடினமாக இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும், வெற்றி பெறுவீர்கள். ஒரு முறை சோதனை செய்து பாருங்கள். முதல் இரவிலேயே இதன் மாய சக்தியை அறிவீர்கள். விலை ரூ. 2. ஸ்பெஷல் ரூ. 3/75. தபால் செலவு தனி. அயல் நாடு 10 ஷில்லிங் பி.பி.ஓ. மூன்று கேள்விகளுக்கு பதில் இலவசம். கடிதப்போக்கு வரத்தும், உங்கள் விலாசமும் ஆங்கிலத்தில்.

PROF. B. S VERMAN
Mesmerist & Hypnotist,
8/1, JULLUNDUR (Pb)

ஆரியப்பூர் அரண்மனையில் ராஜ குருவின் மகளான ஆரியமாலா அரசகுமாரியாக வளர்ந்து வருகிறாள். அவள் பிறக்கும்போதே கழுமரம் ஒன்று தோன்றியதால் அவளைக் காக்கும் பொருட்டு மன்னர் அவளை வளர்த்து வருகிறார்.

ஆரியப்பூர் அரசனுக்கு வேறு குழந்தைகளே இல்லாததால். இளவரசியாக வளர்த்து வரும் ராஜ குருவின் மகளான ஆரியமாலாவை மணந்தால் தான் மன்னனாக வரலாமே என்று நப்பாசைப்பட்டான் நாட்டின் சேனாதிபதி. அதனால் அவன் அவளைச் சுற்றி வட்டமிட்டான். ஆனால் அவனை ஆரியமாலா சிறு துரும்பென விலக்கினாள். இருந்தாலும் மண்ணும் பெண்ணும் கிடைக்குமென்று அவன் நம்பினான்.

காட்டில் வேட்டையாடும்போது ஆர்யமாலா காத்தவராயனைப் பார்க்கிறாள். இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. மன்னர் இக்காதலுக்குக் குறுக்கே நிற்பதால் ஆர்யமாலாவை, திருமணத்தன்று சிறையெடுக்க முயற்சிக்கிறான் காத்தவராயன். ஆனால் மாட்டிக்கொள்கிறான். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

கழுமரத்தில் மகன் ஏற்றப்பட இருக்கும்போது அன்னை பார்வதி அங்கு வந்து எல்லோரிடமும் தன் மகன் விடுதலைக்காக வாதாடுகிறாள். யாரும் அவள் வார்த்தையைக் கேட்பதில்லை. வெகுண்ட சக்தி, காத்தவராயனுக்கு நிகரற்ற புஜ பலத்தை அளிக்கிறாள்.

-அவ்வளவுதான். அரண்மனையும் ஆரியப்பூரும் தவிடு பொடியாகின்றது. ஆரியமாலா, காத்தவராயன் உட்பட அனைவருமே மண்ணில் புதைகின்றனர்.

பார்வதிக்குச் சுயநினைவு உண்டாக்கியதும் ஈசன் அவளைத் தன்னுடன் அழைத்துக் கொள்கிறார்.

இன்னல்கள் பல அனுபவித்தாலும் கடைசியில் யாவரும் சுகம் பெறவே செய்கின்றனர்.

விமர்சனம்

ஏற்கனவே பி. யு. சின்னப்பா நடித்து ஆர்யமாலா என்ற பெயரில் இக்கதை வெளி வந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. இப்போது கதையை ஓரளவு மாற்றியிருக்கின்றனர்,

பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடன், காத்தவராயனில் பாமர ரஞ்சகமான அம்சங்கள் ஏராளமாக இருக்கின்றன. கவர்ச்சிகரமான பல நடனங்கள் படத்திற்கு அழகு தருகின்றன. கண்ணகி, மனோஹரா ஆகிய படங்களை நினைவுபடுத்தும் கட்டங்களும் இல்லாமலில்லை.

வீட்டில் சினிமா புரொஜக்டர்



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி. அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினால் இயக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், விதவித வர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனாம். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் விலை ரூ. 14. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 4. தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரூ. 3.

ANAND INDUSTRIES
GOPALPURI, ALIGARH

சரவணபவா — யூனிடி

நான் வளர்த்த தங்கை

காட்சி 1

அறிமுகம்

ஷண்முகம் பிள்ளை ஒரு செல்வந்தர். அவரது இரு கண்களாக விளங்குபவர்கள் அவர் பெண்களான பார்வதியும் பத்மாவும். பார்வதியை சங்கர் என்பவனுக்கு மணமுடிக்கிறார் ஷண்முகம் பிள்ளை. பார்வதிக்கு முரளி என்ற பையனுமிருக்கிறான். மாப்பிள்ளை சங்கர், அவ்வளவு நல்ல சகவாசம் உள்ளவன் அல்லவாதலால் பெற்றோருக்கும் மாமனார் வீட்டாருக்கும் வேதனையாக இருக்கிறது. ஷண்முகம் பிள்ளையின் வீட்டு கணக்கப்பிள்ளை எஜமான விசுவாசமுள்ள உத்தம ஊழியன்.

சங்கர், அடபாவி!

சங்கர் கலா என்பவளுடன் சுற்றியலைந்துவிட்டு தன் தகப்பனார் சுப்பையா பிள்ளையிடம் வருகிறான். வீட்டில் அவன் தாய் வள்ளியும் இருக்கிறாள்.

சுப்பையா பிள்ளை: ஏண்டா சங்கரா, இப்பத்தான் உனக்கு அப்பா அம்மாங்கற ஞாபகம் வந்திச்சாக்கும்?

சங்: இல்லேப்பா...!

சுப்: என்னடா இல்லே? ஏண்டா இப்படி உன் தலையிலே எழுதியிருக்கு? கட்டின பெண்டாட்டியை அங்கே தவிக்க விட்டுட்டு, மாணிக்கம் போல மகன் பிறந்தப்புறமும் மனித பாசமே இல்லாமே இப்படி நாடோடியா அலைஞ்சு திரியறயே!

திரைக் கதை — வசனம்

வள் : சங்கரா, வந்துட்டியாடா மகனே! என் ராஜா நீ எங்கே இருக்கியோ, என்ன செய்யறியோன்னு நாங்க பட்ட பாடு...

சுப் : நாம் என்ன பாடு பட்டாத்தான் இவனுக்கு என்ன?

சொல்லிவிட்டு நகருகிறார்.

வள் : சரிதான், பேசாம இருங்க. என் பிள்ளை வந்ததும் வராததுமா இப்படி எறிஞ்சு விழுகிறீங்களே. நீ வாடா ஐயா, குளிச்சிட்டு முதல்லே சாப்பிடு.

சுப் : ஆமாடி! இப்படி நீ செல்லங்கொடுத்து செல்லங் கொடுத்துத்தான், இவனைக் கெடுத்துப் பிட்டே! இங்கேயிருந்த சொத்து பத்துக்களை தொலைச்சது போதாதுன்னு, மாமனார் வீட்டையும் காலி பண்ணப் பாத்துட்டான்.

சங் : நான் என்னப்பா செய்வேன்? பிஸினஸ் செஞ்சேன்; லாஸ் ஆயிடிச்சு.

சுப் : ஆமாடா, நீ செஞ்ச பிஸினஸ் எங்களுக்கு தெரியாது. கிடைக்கக்கூடாத சம்பந்தி ஷண்முகம் பிள்ளை கிடைச்சும், அவர் முகத்திலே முழிக்க விடாதபடி செஞ்சுட்டியேடா பாவி.

பாத்திரங்கள்	
ஷண்முகம் பிள்ளை	நாகய்யா
கணக்கப் பிள்ளை	எஸ். வி. சுப்பய்யா
சுந்தரம்	பிரேம் நசீர்
சங்கர்	டி. கே. ராமச்சந்திரன்
ஆகா	வி. ஆர். ராஜகோபால்
பார்வதி	பண்டரிபாய்
பத்மா	மைனாவதி
லில்லி	சூர்யகலா
டெய்சி இரானி -	
ஹனி இரானி	முரளி

வசனம் :
ரா. வே.

டைரக்ஷன் :
ஸியெச். நாராயணமூர்த்தி

காட்சி 2

உண்ணாமலையின் சபதம்

சாமியா பிள்ளை ஒரு கல்யாண தரகர். ஷண்முகம் பிள்ளையின் தூரத்து உறவினளான உண்ணாமலையின் தம்பி காடுவெட்டிக்கு பத்மாவை மணம் பேசவந்து, உண்ணாமலை வீட்டுக்குப் போகிறார். காடுவெட்டி தன் பெயரை 'ஆகா' என்று வைத்துக் கொண்டிருக்கிறான். அவன் ஒரு மந்திர தந்திர வாதியாக முயற்சிக்கிறான்.

சாமி : உண்ணாமலை உண்ணாமலை...

உண் : வாங்க மாமா, வாங்க. எங்கே ஆளைக் காணோமேன்னு இப்பத்தான் நினைச்சேன். உக்காருங்க......போன காரியம் பழம் தானே?

சாமி : பின்னே, காயா? இந்த சாமியா பிள்ளை தோட்டத்திலே காய்க்கிறது உண்டா? பழத்திலேயும் பழம் கனிஞ்ச பழம்.

உண் : அதானே கேட்டேன். ஆமா ஷண்முகம் பிள்ளை மாமா என்ன சொன்னாரு?

சாமி : என்னத்தைச் சொல்லுவாருன்னேன்...

ஆகாவுடைய குரல் "வொண்டர்புல், ஒன்ஸ் எகைன்" என்று உள்ளே ஒலிக்கிறது.

சாமி : என்ன சொல்றான் உன் தம்பி?

உண் : யாருக்குத் தெரியும்? அவன் ஒரு பாஷையா பேசறான்? உலகம் பூராவும் சுத்தினவன் ஆச்சே. ஒன்பது பாஷையும் சேர்த்து ஒண்ணப் பேசறான். அடே தம்பி, வாடா. மாமா வந்திருக்காரு.

ஆகா தன் அறையில் கத்தியில் சீட்டைக்குத்தி விளையாடிக் கொண்டிருக்கிறான்.

ஆகா : ஒன்...டு...த்ரீ...போர்... ஆ...ஸக்ஸஸ்...டாடா... டட்ட்ட்... டாடடா...டட் டட்.

கத்தியில் சீட்டைக் குத்திக் கொண்டு இருவரும் இருக்கும் இடத்திற்கு வருகிறான் ஆகா.



ஆகா : பாத்தியா அக்கா!

சாமி : என்னப்பா இது? வெண்ணெ வெட்டி சிப்பாயாட்டம் காயிதத்தைக் குத்திக்கிட்டு.

ஆகா : நான்சென்ஸ்...கலை உணர்ச்சி இல்லாத களி மண்ணுங்க. கத்தியாய்யா இது? கலைக் கருவி.

உண் : டேய் தம்பி, ஏண்டா இப்படி மட்டு மரியாதை இல்லாமெ பெரியவங்க கிட்ட நடந்துக்கறே? உனக்கு உபகாரம் செய்யணும்னு எவ்வளவோ பாடு படறாரு.

ஆகா : வாட்! உபகாரமா? அதென்ன உப்புக் காரம்?

உண் : நம்ம ஷண்முகம் பிள்ளை மகள் பத்மா இல்லே, அதாண்டா சின்னப்பொண்ணு; அவளை உனக்கு கட்டி வச்சிடணும்னு இவரு அலையா அலைஞ்சு பேயா திரியறாருடா.

ஆகா : ஆ... எப்படி....எப்படி எப்படி? எனக்குக் கல்யாணம் செஞ்சு வைக்க இவரு பேயா அலையறாரா? கஷ்டமே...அதுவும் அந்தப் பொண்ணை நோ...நோ... கிங்கினி பசை பசை...முடியவே முடியாது.

உண் : முடியாதா? ஏண்டா தம்பி, அழகான பொண்ணு, தங்கமான குணம், பணக்காரக் குடும்பம், சொத்திலே பாதி கிடைக்குமேடா.

ஆகா : உம்... கிடைக்கும் கிடைக்கும்...அதுக்குத்தான் இந்த ஆட்டம் போடறியா நீ? அதுக்கு இந்த புரொபஸர் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்.

உண் : அட ஏண்டா இப்படிச் சொல்றே?

ஆகா : எப்படிச் சொல்றேன்? (திரும்பி) ஏய்யா புரோக்கரே, உம் மூளை என்ன பிரேக்காயிப் போச்சா? நான் தான் ஊரறிஞ்ச நாடோடி ஆச்சே எனக்கு அந்தப் பொண்ணை கொடுப்பாங்கன்னு சொல்றியே. உன் ப்ராடு வேலையை நம்மகிட்டயே காட்டிறியா?

சாமி : இந்தாப்பா காடு வெட்டி, என்னையா ப்ராடுன்னு சொல்றே?

ஆகா : ஷட் அப். மிஸ்டர் புரோக்கர்! என்னை காடு வெட்டின்னு கூப்பிடாதேன்னு எத்தனையோ தரம் சொல்லியிருக்கேன். எங்கப்பா பேரு ஆதிமூலம் பிள்ளை. என் பேரு காடுவெட்டி. எங்க அப்பா தலையெழுத்து ஆ வென்னுவையும் என் தலையெழுத்து கா வென்னுவையும் சேர்த்து ஆகான்னு வைச்சிருக்கேன். இப்ப என்பேரு புரபொசர் ஆகா. தெரியுமா? தெரியுமா?

அவர் தலையில் தீக் குச்சியைக் கிழித்து நெருப்புப் பற்ற வைக்கிறான் சிகரெட்டுக்கு.

சாமி : ஐயையோ உயிரோட கொளுத்திப்பிட்டானே. உண்ணுமலை ஒருகுடம் தண்ணியைக் கொண்டு வந்து ஊத்தேன்.

ஆகா: ஸ்டாப் மேன். உன் தலைக்கு தண்ணியை ஊத்தக் கூடாது. ஆஸிட்டைத்தான் ஊத்தணும். இரு வர்ரேன்.

சாமி: அட பாவி, பாத்தியா உண்ணுமலை, உன் தம்பி சேஞ்ச வேலையை? இந்தப் பைத்தியத் திற்கு எப்படி ஷண்முகம் பிள்ளை பொண்ணைக் கொடுப்பாருன்னேன்?

உண்: ஏன் கொடுக்கமாட்டாருன்னேன்? உங்களாட்டம் வெத்து ஜம்பம் டோனு கொடுக்கத்தான் மாட்டாரு. உண்ணுமலை நெனைச்சா அவரு இல்லே, அவரு தாத்தாகூட தலை அசைக்கணும்.

சாமி: தாத்தா அசைக்கிறது இருக்கட்டும். முதல்லெ உன் தம்பியை தலையை அசைக்கச் சொல்லு.

உண்: அவன் தலையை அசைக்கவும் வேண்டாம். நீங்க உடம்பை அசைக்கவும் வேண்டாம். ஷண்முகம் பிள்ளை மாமாவை எனக்குத் தெரியும். நான் போயி இந்தக் காரியத்தை முடிக்கல்லே, என் பேரு உண்ணுமலை இல்லே. என் பேச்சை மீறி என் தம்பி எந்த வீட்டிலே போயி தண்ணி குடிப்பான்னு பாக்கறேன்.

காட்சி 3

பிள்ளையின் பொன்நாள்!

ஷண்முகம்பிள்ளை தன் மாந்தோப்பைப் பார்வையிட்டுத் திரும்புகிறார். அவர் காரை பத்மாதான் ஓட்டி வருகிறாள். அப்போது காரில் அகப்படவிருந்த குழந்தையைக் காப்பாற்ற முயலும் சுந்தரம் என்ற இளைஞன் விபத்துக்குள்ளாகிறான். காரிலேயே அவனை வீட்டுக்கு அழைத்து வந்து வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்கிறார் ஷண்முகம் பிள்ளை. அப்போது அவர் நண்பர் கோவிந்தம் பிள்ளை வருகிறார். அவரது சகோதரி மகன்தான் சுந்தரம். அவனுக்கு பத்மா பணிவிடை செய்கிறாள். கடைசியில் அது கல்யாணப் பேச்சில் வந்து முடிகிறது! கோவிந்தம் பிள்ளை, பார்வதி, கணக்க பிள்ளை, சாமியா பிள்ளை யாவரும் ஷண்முகம் பிள்ளையிடம் கூடியிருக்கிறார்கள்.

கோவி: பத்மாவை சுந்தரத்துக்குக் கொடுக்கிறதுன்னு யாரைக் கேட்கணும்? கரும்பு தின்னக் கூலியா? எனக்கு நூத்துக்கு நூத்தி இருபது பங்கு சம்மதம். பார்வதி! உனக்கு திருப்தி தானேம்மா?

ஷண்: பார்வதி தானே முதல்லே இந்த யோசனையைச் சொன்னது!

கோவி: அப்படிங்களா?

பார்: நீங்க பெரியவங்க. உங்களுக்கு திருப்தின்னு எனக்கு என்னுங்க?

சாமி: திருப்திங்கறதெல்லாம் அவ்வளவு சீக்கிரம் ஏற்பட்டுடுமா? பையனோட சொத்து சுகம், நிலம் புலம் அத்தனையும் அலசிப் பாக்கவேண்டாமா?

பார்: கணவரோட அன்பும் அறிவும் தானே பெண்களுக்குச் சொத்து சுகமெல்லாம். அவர் மட்டும் யோக்யரா இருந்து பெண்ணைக் கண் கலங்காம வச்சு வாழ்ந்தா அது போதுமுங்க.

ஷண்: உங்க கிட்டே ஒரு வேண்டுகோள். மாப்பிள்ளை நம்ம வீட்டோட இருக்கணும்னுதான் என் ஆசை.

முரளி மாடிப்படியில் நின்று பார்க்கிறான். சங்கர் வருகிறான்.

முர: அப்பா...அப்பா...அப்பா.

சங்கர் முரளியைத் தூக்கிக் கொண்டு வருகிறான். பார்வதி உள்ளே செல்கிறாள்.

ஷண்: வாங்க மாப்பிள்ளை! ஊர்லேஅப்பா



பார்: அது ஒரு பெரிய கதை.

சங்: கதையா ... அதென்ன கதை?

சங்கருக்கு பார்வதியிடம் கதை கேட்பதில் விருப்பமிருக்க வில்லை. ஆனால் அவன் இப்போது ஏதோ ஒரு குறிக்கோளுடன் அங்கே வந்திருக்கிறான்! தன் காரியம் ஆவதற்காக அந்தக் கொடியவன், அங்கே வேஷம் போடுகிறான். தன்னை நம்பியிருக்கும் தன் உத்தம மனைவிக்குத் துரோகம் செய்து விட்டோமே என்று வருந்துவதற்குப் பதில், தன் கொடிய செயலுக்கு அவளிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு வந்திருக்கிறான் அவன், சங்கர் இப்போது நொடிந்து போயிருக்கிறான். அவனுக்குத் தேவையானதெல்லாம் பணம்தான் அதற்காக அவன் எதுவும் செய்யத் தயாராகி விட்டிருக்கிறான். தான் பிறந்தவீடு, தான் பெண்கொண்ட இடம் இரண்டிலுமுள்ள யாரிடமும் அவனுக்குப் பற்றோ பாசமோ கிடையாது, சூழ்நிலை அவனை அப்படிச் செய்து விட்டது. எப்போதாவது அவன் ஒருகணம் தன்னைப்பற்றி நினைக்கும் எண்ணத்தைக்கூட மாற்றி விட்டது. அவனது தகாத சகவாசம். இப்போதும் மனைவியை வஞ்சிக்கிறோமே என்ற எண்ணமின்றி, தனது வெளிவேஷ அன்பில் அவள் ஏமாறத் தயாராகி விட்டதில் பெருமை பட்டுக் கொண்டு அவளிடம், பத்மாவின் திருமணம் நிச்சயமான கதையைக் கேட்க ஆவலுடன் இருப்பதைப்போல் நடிக்கிறான்.

ஷண்முகம் பிள்ளை, கோவிந்தம் பிள்ளையுடன் பேசிக் கொண்டிருக்க கணக்கப் பிள்ளையும் இருக்கிறார். ஷண்முகம் பிள்ளைக்கு இப்போது ஆனந்தம் தாங்க முடியவில்லை. பார்வதியும் பத்மாவும் அவரது இரு கண்கள். பார்வதிக்கு மணமாகி குழந்தையும் இருக்கிறது, ஊதாரியாகத் திரிந்த மாப்பிள்ளை சங்கரும் வந்து விட்டான். இப்போது பத்மாவுக்கும் திருமணம் நடக்கப் போகிறது. அவர் தன் மக்களுக்காக வாழ்ந்த குறிக்கோள் பூர்த்தியாகிவிடப் போகிறது. இனிமேல் அவர் நிம்மதியாக இருக்கலாம், இந்த மகிழ்ச்சியை அவர் வெளிப்படுத்துகிறார். அவரைவிட இதில் மகிழ்ச்சி கொள்பவர் கணக்கப் பிள்ளைதான். ஷண்முகம் பிள்ளையின் உப்பைத் தின்று, குழந்தைகளைத் தோளில் போட்டு வளர்த்தவர் அவர்தானே!

ஷண்: இன்னிக்கு எனக்கு பொன்னான நாள். பத்மாவுக்குக் கல்யாணமும் முடிவாச்சு. என் மாப்பிள்ளையும் வந்திட்டாரு.

கோவி: உங்க மனசுக்கு எல்லாம் மங்களமாய் நடக்குமுங்க. ஒரு விஷயம்....முகூர்த்தம் எப்ப வச்சிக்கிடலாம்னு உத்தேசங்க...? ஏன்னா நானும் காசு பணம் கொஞ்சம் சேக்கணும் பாருங்க.

ஷண்: காசு பணத்தைப்பத்தி நீங்க கவலைப்பட வேண்டாங்க. நான் பாத்துக்கறேன்.

கோவி: சரிங்க ... அப்ப நான் வரட்டுங்களா?

விடை பெறுகிறார்.

(105-ம் பக்கம் பார்க்க)

புள்ளிமானைப் போலத் துள்ளியாடும் இந்த இரு நடனமணிகளும் (கோபிகிருஷ்ணா-இ. வி. சரோஜா) எஸ். பி. எஸ். பிக்சர்ஸ் "தெய்வமே துணை" படத்திற்காக இப்படித் தோன்றுகிறார்கள்.

பொன்னலூரி பிரதர்ஸ்

தெய்வ பலம்

காட்சிகள்

PSR

பிரபு பிலிம்ஸ் தயா
ரிப்பான இச் சமூ
கச் சித்திரத்தில்
எம். ஆர். ராதா
பிரேம் நஸீர், சௌ
கார் ஜானகி முதலி
யோர் நடித்து வரு
கிறார்கள்.

பிரபு பிலிம்ஸ்
உலகம்
சிரிக்கிறது



சியாமளாவில், வஸந்தகுமார் டைரக்ஷனில் தயாராகும் இப்படம் ஒரு கிராமியக் கதையைச் சித்தரிக்கிறது. பல பிரபல நடிகர்களுடன், ஜெயஸ்ரீ என்ற புதுமுகம் இதில் கதாநாயகியாக நடித்து வருகிறார்

உங்கள் கேசத்திற்கு உரிய
பராமரிப்பை அளிக்கிறீர்களா ?

இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட்
ஹேர் ஆயில் உபயோகித்து அன்றுடம்
பராமரித்துவந்தால் உங்கள் கேசம்
அடர்த்தியாகவும், பளபளப்புடனும்
மிளிரும். சுத்தமான தேங்காயெண்
ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு
போஷாக்களித்து சம்ரட்சிக்கும்.
உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா
அல்லது மல்லிகை—நறு மணத்
துடன் கிடைக்கும் சீசா
ஒன்றை இன்றே வாங்கி
உபயோகித்துப் பாருங்கள்.



இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்

ECH. 3-50 TM

கேள்வி பதில்

பி. கணேஷ், ஜெம்ஷெட்பூர்

'நல்ல இடத்து சம்மந்தத்'தில் வரும் டி. ஆர். நடராஜனும், 'கள்ளபார்ட்' நடராஜன் என்பவரும் ஒருவரேதானு?

ஒருவரேதான்.

பாலாஜியின் விலாசம் என்ன? சினிமாவில் சேருவதற்கு முன்பு அவர் என்ன செய்து கொண்டிருந்தார்?

நரசு ஸ்டுடியோவில் புரொடக்ஷன் இலாக்காவில் பணியாற்றி மற்ற நடிகர்களை 'படத்திற்கு நடிக்க வரும்படி' அழைத்துக் கொண்டிருந்தார். 'பாந்தியன் ரோடு, எழும்பூர் சென்னை - 8' என்ற விலாசத்தில் அவர் இருக்கிறுர்.

ஒரு அடக்கமான குடும்ப ஸ்திரீ எப்படியிருக்க வேண்டுமென்பதை இந்த அம்மையாரின் (கண்ணும்பா) தோற்றமும் உடையும் விளக்குகின்றன அல்லவா? தினகரன் பிக்சர்ஸ் ''ஆஸ்திக்கொரு ஆணும் ஆசைக்கொரு பொண்ணும்'' படத்தில்.

எஸ். தனராஜ், சென்னை

தமிழ்நாட்டு நடிகர்களில் 'ஒரே சமயத்தில்' ஒரு லட்சம் ரூபாய் வாங்கும் நடிகர்களின் பெயரைச் சொல்ல முடியுமா?

'ஒரே சமயத்தில்' யாரும் அப்படி இங்கு வாங்கியதில்லை.

சவுந்தர நாயகம், இலுப்பைக்குளம்

மனிதன் ஏன் பிறந்தான்?

தன் சாதனைகளை விளக்கிட.

பி. எம். அமீர், பொள்ளாச்சி

சினிமா நடிகைகளுக்குத் திருமணம் தேவையா?

அவர்களெல்லோரும் 'திருமணத்தை விரும்பாத 'ஔவையார்'கள் என்று நினைத்து விட்டீரா என்ன?

கே. ராஜேந்திரன், அரக்கோணம்

'இல்லறமே நல்லற'த்தில் வரும் கேவாகலர் காட்சிகள் முழுதும் பம்பாயில் எடுக்கப்பட்டதா, அல்லது ஒரு சில காட்சிகள் மட்டும் ஜெமினியில் எடுக்கப்பட்டதா?

படத்தின் வண்ணக் காட்சிகள் ஜெமினியில் தான் பூராவும் சுடப்பட்டன; ஆனுல் அவை கழுவப்பட்டு, பிரதிகள் எடுக்கப்பட்டது பம்பாயில்.

இதுவரையில் வந்த சிறந்த படம் 'வ. வா'ஞ; 'நா. ம'ஞ; 'அ. ஆ'யா?

விளம்பரத்தால் சிறந்த படமாக்கப் பட்டது 'வ. வா'; வசூலில் சிறந்து விளங்குவது 'நா. ம.' நடிப்பில் முதலிடம் பெற்று சிறப்பானது 'அ. ஆ'.

என். ஜி. ராஜன், கரக்பூர்

நடிகை வைஜயந்திமாலா ஹிந்தி நடிகர் திலீப்குமாரை திருமணம் செய்து கொள்ளப் போகிருராமே, உண்மையா?

வைஜயந்தி அவருடன் நெருங்கிப் பழகி பல படங்களில் நடிப்பதால் ஏற்பட்டிருக்கும் ஆதாரமற்ற செய்தி இது.

தனம்-சந்திரா, இருமத்தூர்

சந்திரபாபு - ஷீலா ஜோடி படத்தில் நடித்தால்......?

'கிருஷ்ணன்—மதுரம்' ஜோடி விட்டுச் சென்ற 'காலி' இடம் ஜோடி என்ற அளவில்மட்டும் பூர்த்தி செய்யப்படலாம்.

அங்கமுத்து என்ன செய்து வருகிருர்?

அவரது மகளுக்கு கதாநாயகி சான்ஸ் வாங்கித்தர முயற்சித்து வருகிருர்.

ஜெமினி கணேஷ் இலட்சிய நடிகரா? புரட்சி நடிகரா? இல்லை...?

'பட்டதாரி' நடிகர்.

எம். தணிகாசலம், பாண்டிலிங்கபுரம்

திருமணம் செய்து கொண்ட ஹாஸ்ய நடிகை டி. பி. முத்துலக்ஷ்மி இனி தொடர்ந்து படங்களில் நடிப்பாரா?

நடித்து வருகிருர்; நடிப்பார்,

எம். ஆர். எம். அஷ்ரப், கப்புவத்தை

கதைகளைக் காப்பியடித்து, பாட்டுகளையும் காப்பியடித்து தயாரிக்கும் படங்களை எந்த முறையில் தடுக்கலாம்?

அவர்கள் காப்பியடிக்க முடியாத வகையில்-காப்பியடிக்கும் கதை, பாட்டு, தலைப்பு இவைகளை வெளியிடாமல்!

பானுமதி எத்தனை படங்களை டைரக்ட் செய்திருக்கிருர்?

பிரபு பிலிம்ஸாரின் 'உலகம் சிரிக்கிறது' படத்தில் சௌகார் ஜானகி.

'சண்டிராணி' என்ற ஒரே படம். 'இது போதும், போதும்! இனி நான் எந்தப் படத்தையும் டைரக்ட் செய்ய மாட்டேன். இது ஒரு ஆணின் வேலையே தவிர, பெண் ஏற்று செயலாற்றக்கூடிய வேலை அல்ல' என்று பானுமதி என்னிடம் கூறி யிருக்கிருர்.

உங்கள் வாழ்க்கையில் அதிகமான முறை பார்த்த தமிழ்ப்படம் எது?

சந்திரலேகா - இப்படத்தை மூன்று தடவைகள் பார்த்தேன்.

ஆர். ரங்கசாமி, ஈரோடு

சிவாஜி கணேசன் உலகின் சிறந்த நடிகர் என்பது என் அபிப்பிராயம். தங்கள் கருத்து என்ன?

ததாஸ்து.

எம். ஜி. ஆர்., சிவாஜி, ஜெமினி இவர்களின் 'குணம்' என்ன?

'ரசிகர்களை மதிப்பது' என்ற பொதுப்படையான குணத்தைக் கொண்டவர்கள்தான் இம்மூவரும்.

எம். ஆர். ராதா கும்பிடுவது நிச்சயமாக பிள்ளையாரை அல்ல! பிரபு பிலிம்ஸாரின் ''உலகம் சிரிக்கிறது'' படத்தில்.

வே. ப. தருமன், சத்திரக்குடி

'நாடோடி மன்னன்' முழுதுமே வர்ணத்தில் தயாரித்திருந்தால்?

தயாரிப்பின் காலம், செலவு இரண்டும் இன்னும் பல பங்கு கூடியிருக்கும்.

படவுலகம் அழிந்து விட்டால்...?

'உலகமே இல்லை' என்று அர்த்தம்.

ஐ. ஆர். சுப்பராயன், ஹைதராபாத்

முழு ஹாஸ்யப் படத்தைப் போல முழு சோகப் படம் வெற்றி பெறுமா?

ஏன், 'எதிர்பாராதது' மகத்தான வெற்றி அடைந்திருக்கிறதே.

நடிப்பிற்காக மாங்கல்யத்தை கட்டிக் கொள்ளும் மணமாகாத நடிகை அந்த நிமிஷத்தில் என்ன நினைத்துக் கொள்வார்?

தன் திருமணத்திற்கு ஒரு 'ஒத்திகை' என நினைக்கலாம்?

'நாடோடி மன்னன்' வெளியிட்ட அரசியல் சட்டத்தை இன்றைய அரசாங்கம் செயலாக்குமானால் அதன் விளைவு எப்படி இருக்கும்?

இந்தியாவின் ஜனத்தொகை பாதி குறைந்து விடும்...தண்டனையின் மூலம்!

வ. பாலகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை

கச்சா பிலிம் வெட்டுள்ள இப்போது ஒரு பட அதிபர் எத்தனை பிரதிகள் வரை எடுக்க அனுமதி உண்டு? முன்பு?

முன்பு அவரவர் பண வசதிக்கேற்ப எத்தனை பிரதிகள் வேண்டுமானாலும் எடுக்கலாம். தற்போது முப்பது பிரதிகளுக்கு மேல் ஒரு தயாரிப்பாளருக்கு அனுமதிக்கப் படுவதில்லை.

'பக்த ராவணு'வில் கடைசியில் விளக்கம் தருபவர் ஜாவர் சீதாராமன் தானே?

ஆமாம்.

கே. அண்ணாமலை, இலங்கை

சாவித்திரி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

பிறக்கப்போகும் தன் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்து வருகிறார்.

ராஜகோபாலன், சென்னை

'சபாஷ்-மீனா'படத்தில் சிவாஜிக்கு டூயட் (மழையில்) பாட்டின் போது பின்னணியில் பாடுவது யார்?

பின்னணிப் பாடகர் மோதி.

பி. எஸ். கோவிந்தராசன், திருச்சி

புதையல் படம் வெளியானது 1956 தீபாவளியிலா அல்லது 1957 மே யிலா?

1957-மே மாதத்தில் தான்.

என். எலியாஸ்,
கொச்சிக்கடை

'சிம்மக்குரலோன்' 'நடிகர் திலகம்' ஆனதன் மர்மம் என்ன?

'நடிப்பு' என்ற சொல்லுக்கு 'உறைகல்'லாக விளங்குவதால் தான்!

பூம்பொழில், கொழும்பு

தனி மனிதனின் அதிமுக்கிய முதல் தேவை எது?

பசியை விரட்டும் சக்தி!

ஒரு நாடு எழுச்சி பெற்று திகழ்வதற்கு மொழிதான் முக்கியமா?

அதன் வழி வழி வந்த பண்பு.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள கொள்கை குறுக்கே நின்ருல் இலட்சியவாதி என்ன செய்வான்?

தன் லட்சியம் காற்றில் பறந்து விடாமல் பார்த்துக் கொள்வான்!

வி. ந. பாக்கியலக்ஷ்மி,
மதுரை

'ஜிம்போ'வில் கதாநாயகியாக நடிக்கும் சித்ரா ஹிந்தி நடிகை ஷகிலாவின் தங்கையா?

அல்ல.

'மங்கையர் திலக'த்தில் பத்மினி, 'முதல் தேதி'யில் அஞ்சலிதேவி, 'எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி'யில் சாவித்திரி, 'ரங்கோன் ராதா'வில் பானுமதி இவர்களின் நடிப்புத் திறமையை வரிசைப்படுத்த முடியுமா?

பத்மினி, பானுமதி, அஞ்சலி தேவி, சாவித்திரி.

ஜே. கே. இப்ரஹீம்,
நாகபுரி

ஹிந்திப் படவுலகில் மிகவும் புகழ் பெற்ற நடிகர், நடிகை யார்?

திலீப்குமார்-நர்கீஸ்.

பாஸ்கரன்,
சென்னை

சந்திரபாபுவின் நடிப்பு 'சபாஷ் மீனு'வில் எப்படி?

'படா ஜோர்' நைனு!

வில்லாளன்,
பொள்ளாச்சி

நான் ஒரு லட்சாதிபதியாகப் போவதாகக் கனவு கண்டேன். அது பலிக்குமா?

இம்மாதிரி வீண் கனவு காணுமல் காரியத்தில் கண்ணுயிருந்தால் உமது கனவு பலிக்கலாம்!

இளம் நடிகர் பார்த்திபன், வி. கே. ராமசாமியை மிரட்டுவது பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் "வீரபாண்டிய கட்டபொம்மன்" வர்ணப் படத்திற்காக.

எம். அர்ஜுனன், இடப்பாடி

டைரக்ஷனில் சிறந்தவர் பிரசாதா, யோகானந்தா, ஸியெச். நாராயண மூர்த்தியா?

பிரசாத் தான்! மற்ற இருவரும் இன்னும் இத்துறையில் அனுபவம் பெறவேண்டியவர்களே.

என். கே. உமர்,
ராமகோணு (ம. பி.)

சிவாஜி கணேசன் முதன்முதலில் யாருடைய உதவியைக் கொண்டு திரையுலகுக்கு அறிமுகமானார்?

தன் திறமையைக் கொண்டு!

மு. கருணாநிதி வசனம் எழுதும் படங்கள் எவை?

மேகலா 'குறவஞ்சி', ஜூபிடர் 'அரசிளங்குமரி'. ஏவி. எம். 'பூம்புகார்' முதலியன.

கே. ஏ. ராம்நாத், ஈரோடு

'பேசும் படம்' தலையங்கம் எழுதுவதில்லையே ஏன்?

'பேசும் படம்' ரஸிகர்களின் பத்திரிகை. அதற்குத் தலையங்கம் தேவையில்லை என்பது என் கருத்து. ஆனால் அவசியம் ஏற்படும் போது ரசிகர்களுக்காக 'பேசும்-படம்' தலையங்கம் எழுதி வரத்தான் செய்கிறது.

தில்லை. சுப்பாராவ்,
திருவண்ணாமலை

'தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு லாபத்தில் பத்துசதவீதமும் மற்றுள்ளதை தொழிலாளர்களுக்கும் பிரித்துத் தரப்படும்' என்று நாடோடி மன்னனில் எம்.ஜி.ஆர். சட்டம் போடுகிறாரே நிஜ வாழ்க்கையில் அவர் அப்படி நடப்பாரா?

அவர் போட்ட மற்ற சட்டங்களையும் அமுல் செய்தால் அவர் இதைச் செய்ய தயங்கமாட்டாரே! எம். ஜி. ஆர். சட்டம் போடவில்லை. வீராங்கன் தான் மார்த்தாண்டன் வேஷத்தில் சட்டமியற்றினான்!

வோணிப்பஸ் திசேரா,
பலகத்துறை

ரஞ்சன் தற்போது நடிக்கும் தமிழ்ப்படங்கள் எது?

மின்னல் வீரன், ராஜா மலையசிம்மன், மோக்ஷேஸ்வர் சித்ராவின் தமிழ்ப்படம் முதலியவற்றில் நடித்து வருகிறார்.

ஸ்ரீநிவாஸன்,
சிவகாசி

நடிகை....... யின் வயதைக் கேட்டால் ஒரு பத்திரிகையும் வெளியிடுவதில்லையே. ஏன்?

'வாசகர்கள் மூர்ச்சித்து விழுந்து விடக்கூடாது' என்பதற்காக!

பப்பிக்கு ஏன் இன்னும் திருமணம் ஆகவில்லை?



ஆர். எஸ். ஆர். மூவிடோன் தயாரித்து வரும் 'தர்ம பத்தினி'யில் ஒரு ஸ்வாரஸ்யமான கட்டம்.

கவலைப்படாதீர்கள்; திருமணப் பேச்சு நடைபெற்று வருகிறது.

ந. அரங்கசாமி, விருதுநகர்

சமீபத்தில் எட்டையபுரத்தில் நடைபெற்ற 'பாரதி விழா'வுக்கு பற்பல கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டார்களே, தி. மு. கழகத்தினர் ஏன் கலந்துகொள்ள வில்லை? அழைக்கப்படவில்லையா அவர்கள்?

எல்லோருக்கும் அனுப்பப்பட்டது போல அவர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

நாகூர் சீனு, சென்னை

அக்டோபர்-58 'பேசும்-படம்' இதழில் 39-ம் பக்கத்தில் புத்தகத்தின் வலதுபுறம் இருக்கும் நடிகை யார்?

பி. சரோஜாதேவிதான்!

பிக்சர் கோயர், மதுரை

உடுமலை நாராயண கவிக்கு அடுத்தபடியாக படத்துக்கு பாடல் இயற்றுவதில் சிறந்து விளங்குபவர் யார் ஸார்?

பட்டுக்கோட்டை ஸார்!

'உத்தமபுத்திர'னில் சிவாஜியின் நடிப்பு, 'நாடோடி மன்ன'னில் எம். ஜி. ஆர். நடிப்பு-இவற்றில் சிறந்த நடிப்பு எது?

'உத்தம புத்திர'னில் சிவாஜியின் நடிப்புத்தான்.

வி. மயிலையன், உரத்தநாடு

நான் சினிமா உலகில் நுழைய 'நைன்த்-ரீல்' வேலையை ஆரம்பிக்கலா மென்று நினைக்கிறேன். பலன் தருமா?

நிச்சயம் பலன் தரும். படவுலகில் நுழைய சிறந்த வழி அதுதான்!

நமது சினிமா உலகம் முன்னேறுவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் யாவை?

கற்பனைக்குறைவு; தயாரிப்பாளர்களின் அசிரத்தை; ரஸிகர்களின் விழிப்பின்மை மூன்றும்தான்.

இந்தப் பார்வையே "பெண் குலத்தின் பொன் விளக்கு" இவர்தான் என்று கூறுகிறதே! அசோகா பிக்சர்ஸ் தயாரிப்பு இது.

ஆர். ஜி. ராஜ், ஈப்போ, மலாயா

கச்சாபிலிம் என்றால் என்ன?

காமிராவின் உணவு.

உலகிலேயே சிறந்த படங்களைத் தயாரிக்கும் மூன்று நாடுகள் எவை?

அமெரிக்கா, இந்தியா, இத்தாலி.

எஸ். என். ஜான், மேல்விஷாரம்

குணசித்திர நடிகர் பாலய்யாவின் திறமைமிக்க நடிப்பினால் தான் 'மதுரைவீரன்' வெற்றி பெற்றது என்கிறேன், சரிதானே?

'தான் திரைக்கதையை மாற்றி அமைத்ததால்தான் படம் வெற்றி பெற்றது' என்று எம். ஜி. ஆர். சொல்கிறார். இதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?



மழலைமொழி பேசும் பொற்சித்திரம் என்று வர்ணிக்கப்படும் குழந்தைகளை கிள்ளையுடன் ஒப்பிடுவது தமிழ்ப்பண்பு. இந்தத் தமிழ்ப் பெண்ணும் (எம். என். ராஜம்) அப்படித்தான் ஒப்பிடுகிறாள் என்பதை ஏவி. எம்.மின் "மாமியார் மெச்சிய மருமகள்" தமிழ்ப் படத்தில் பார்க்கலாம்.

"ஏங்க இப்ப நான் எப்படி யிருக்கேனுங்க?" என்று கூறும் பாவனையில் ஒயிலாக நிற்கும் இவள் (சந்தியா)தான் "மின்னல் வீரன்" கதாநாயகி. டி. என். ஆர். புரொடக்ஷன்ஸார் இப்படத்தைத் தயாரிக்கிறார்கள்.

தபால் பெட்டி

சர்க்கார் செய்யுமா?*

மக்கள் வாழ்க்கையின் ஒரு தனி அம்சமாக விளங்குகிறது சினிமா. ஆகவே இந்தியாவிலேயே கச்சா பிலிம் உற்பத்தியை ஆரம்பிக்க மத்திய சர்க்கார் யோசித்து வருவதாகச் செய்திகள் வருகின்றன. இந்தியாவில் கச்சா பிலிம் தயாரிப்பு தொழிற்சாலை நிறுவ வசதியான இடம் உதகமண்டலம் என வெளிநாட்டு நிபுணர்கள் கூறியிருக்கின்றனர். இதையெல்லாம் மனதில் கொண்டு—தென்னாட்டில் தொழில் வளம் அதிகம் இல்லை என்பதையும் மனதில் கொண்டு—சென்னை மந்திரிகள் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, தமிழகத்தில் கச்சா பிலிம் உற்பத்திசாலையை ஆரம்பிக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழகத்து ரசிகர்களின் வேண்டுகோள் இது.

ர. ரமணி,
சென்னை.

கண் திறக்கட்டும்*

தமிழ்ப் படவுலகிற்கேற்பட்ட பெருத்த அவமானத்தை தங்கள் மதிப்பிற்குரிய 'பேசும் படம்' மூலமாகத் தெரிவித்து அவமானத்தைத் துடைக்க வழி கிடைக்குமா என்றறிய விரும்புகிறேன். 24-10-'58 'பிலிம்பேர்' இதழில் வடநாட்டுப் படாதிபதி ஐ. எஸ். ஜோஹர் அளித்துள்ள பதிலைப் பார்த்தேன். "சர்வதேச பிலிம் விழாவுக்குத் தமிழ்ப் படங்கள் ஏன் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை?" என்ற கேள்விக்கு, "நாங்கள் பரிசு அடைய விரும்புகிறோமே அல்லாமல் தண்டனை அடைய விரும்பவில்லை" என்று அவர் பதில் கூறியிருக்கிறார். படவுலகிலிருக்கும் ஒரு நடிகர், படாதிபதி இப்படி அளவுக்கு மீறிய கர்வத்தோடு கூறியிருப்பது தமிழ் மக்களின் உள்ளத்தைப் புண்ணாக்கி விட்டிருக்கிறது. நம் படாதிபதிகளும் கூடியவரை பண வருவாயை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு படம் தயாரிப்பதோடு நில்லாது, நல்ல கதையைக் கொண்ட — நாட்டுக்கு நல்லது சொல்லும் படம் எடுக்க முன் வரவேண்டும். கலைஞர்களும் கூடியவரை படத்தின் தரத்தை உயர்த்தப் பாடுபடவேண்டும். படாதிபதிகளும் கலைஞர்களும் ஒத்துழைத்து, தரத்தில் உயர்ந்த படங்களைத் தயாரித்து, சர்வதேச பட விழாவில் தமிழ் ஒலி முழங்க வகை செய்யவேண்டும். இதை நாம் எதிர்பார்க்க கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது. ஏனெனில் நம் படாதிபதிகள், கலைஞர்களில் பெரும்பாலோர் தமிழரல்லவே!

எம். ஏ. வாசுதேவன்,
செங்கற்பட்டு.

[வடநாட்டார் இன, மொழி, நடை உடை பாவனை இவற்றால் தமிழரோடு என்றுமே இணைந்து வாழ விரும்பமாட்டார்கள் என்பதை, அரசியல், சமூக, கலாசார துறைகளில் எத்தனையோ தடவை பார்த்து விட்டோம். "இடம் கொடுத்தால் மடம் பிடுங்கும்" வர்க்கத்தைச் சேர்ந்த வடநாட்டுக் கலைஞர்களையும், "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப நம் பட உலகம் ஆதரித்திருக்கிறது. இதே ஜோஹரும் கூட நம் ஆதரவில் "கித்னா பதல் கயா இன்சான்" என்ற படத்தைத் திறமையோடுதான்(!) தயாரித்திருந்தார். நமக்குச் சிபாரிசு செய்ய ஆள் இல்லை. சத்தியம் வெல்லும் என்றாலும் அதற்கு கொஞ்ச நாட்களாகும். நம் படங்களில் சில சர்வதேச பட விழாவுக்கு அனுப்பப்பட சகல விதங்களிலும் தகுதி உடையனவே. நம் கலைஞர்கள் எல்லோரும் தமிழர்கள் அல்ல என்றாலும் தமிழர்

---

* இக்குறியிட்ட இரண்டு கடிதங்களுக்கு தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

களாகவே வாழ்பவர்கள். பிரிய விரும்பாதவர்கள். ஆகவே இந்தக் கட்டுப்பாடும் சத்தியமும் பொறுமையும் நம்மிடையே இருக்கும்போது நாம் கவலைப்படவே தேவையில்லை. மலை என்றுமே மலைதான்! — ஆ-ர்.]

பாத்திரமும் நடிகையும்

கதாசிரியர் ஸ்ரீதர் வசந்தி என்ற தனது கதாபாத்திரத்திற்கு ஏற்ற நடிகை என்பதற்காக சரோஜா தேவியை தேர்ந்தெடுத்திருப்பதாக 'பாத்திரம் பிறந்தது' கட்டுரை கூறுகிறது. வசந்தி ஒரு ஒப்பற்ற கற்பனைப் பாத்திரம். சரோஜா தேவி தமிழ் நன்றாகப் பேசத் தெரியாத கன்னட நடிகை. 'நாடோடி மன்னன்', 'மனமுள்ள மறுதாரம்' படங்களில் செந்தமிழ் அவர் வாயிலாகக் கொலை செய்யப்பட்டதை யாரும் மறுக்க முடியுமா? திறமை மிக்கவர்களை — கண்ணாம்பா, அஞ்சலி, பானுமதி, சாவித்திரி போன்ற வேறு மொழி பேசுவோரை—தமிழ்ப் படவுலகம் பாஷையைக் காட்டி வேற்றுமை பாராட்டியதில்லை. அதைப்போல சரோஜாதேவியும் திறமையுடன், மொழியையும் நன்கு உச்சரிக்கப் பழகட்டும்.

ராஜன்,
ஹைதராபாத்.

[வசந்தி என்கிற தனது அற்புதமான கற்பனைப் பாத்திரம் புகழ்பெறுவதற்காக, ஆர்வமுள்ள—ஆனால் பிரமாத புகழ் பெற்றவராக அல்லாத ஒரு நடிகையை நடிக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் ஸ்ரீதர், தனது தயாரிப்பு நண்பர்களைக் கலந்து சரோஜாதேவியை ஏற்பாடு செய்தார். குணசேகரன் பாத்திரம் சிவாஜி கணேசனுக்குப் புகழ் தந்ததுபோல, ஜாவர் பாத்திரம் சீதாராமனுக்குப் புகழ் தந்தது போல, வீராசாமி பாத்திரம எஸ். வி. சுப்பய்யாவுக்குப் புகழ் தந்ததுபோல, சுமதி பாத்திரம் பத்மினிக்கும். பார்வதி பாத்திரம் சாவித்திரிக்கும் புகழ் தந்தது போல, வசந்தி பாத்திரம் சரோஜா தேவிக்கு நக்ஷத்திர பதவியைத் தேடித்தரும் என்ற நோக்கத்தோடு செய்யப்படும் நல்ல முயற்சி இது. இதனால் ஸ்ரீதருக்கும் டைரக்டர் என்ற வகையில் பிரமாத புகழ் கிடைக்கும் என்பது நமது நம்பிக்கை.—ஆ-ர்.]

முன் வருவார்களா?

சமீபத்தில் எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் 'சம்பூர்ண ராமாயணம்' படம் பார்த்தேன். பூரிப்படைந்தேன். ஆனால் அன்னிய மொழிகளிலுள்ள ராமாயணக் கதைகளுக்கும் இதற்கு

''மிஸ்டர்! எட்டாம் நம்பர் ரூம் கிடைக்குமா, கிடைக்காதா?'' ராமன் புரொடக்ஷன்ஸ் ''அதிசயப் பெண்'' படத்தில் எஸ். ஜி. ஈஸ்வரும் மாதுரிதேவியும்.

மிடையே பல மாறுதல்களிருக்கின்றன. இவற்றில் சில சம்பவங்கள் மிகவும் ருசிகரமாக இருக்கின்றன. இந்த ராமாயணக் கதைகளையும் தமிழில் மொழி பெயர்த்துப் படமாக்க நம் படாதிபதிகள் முன் வர வேண்டும். ராமாயணக் கதையை பல கோணங்களில் பலர் பார்க்கிறார்கள். இதில் உள்ள ரசமான சம்பவங்களையும் படமாக்கினால் வரவேற்பு நிச்சயமாகக் கிடைக்கும். ராமாயணம், பாரதம் இவைகளை எத்தனை முறை கேட்டாலும், பார்த்தாலும் அலுக்காது. ஆகவே மலிவு படங்களைத் தயாரித்து மனமொடியும் படாதிபதிகள், ரசமான சம்பவங்களைக் கொண்ட ராமாயணக் கதையை பாகம் பாகமாக(ஸ்ரீராம பக்த ஹனுமான், இலங்கேஸ்வரன் போல) படமாக்கலாம். முன் வருவார்களா?

என். கலாவதி,
கல்கத்தா.

அவர்களும் நாமும்

தென்னகத்திலே ஒரு சாந்தாராமோ, ஒரு மெஹ்பூப்கானோ, ஒரு ராஜ்கபூரோ, ஒரு சத்யஜித்ராயோ இருக்கிறார்களா? கிடையாது. நீதியுள்ள கதைகளை மக்களுக்குத் திரைமூலம் போதிக்க வேண்டும் என்ற ஒரே கருத்தோடு படம் தயாரிக்கிறார்கள் அவர்கள். ஆனால் இங்கேயோ, பணம் திரட்டும் ஒரே குறிக்கோளுடன் படங்கள் தயாரிக்கப் படுகின்றன. ஆகவே ஆபாசக் காட்சிகள், கேலிக்கூத்துக்கள், அர்த்தமற்ற பேச்சுக்கள் முதலியன நம் படங்களில் முக்கிய இடம் பெறுவதில் ஆச்சரியமில்லை. நம் நிலைக்கு அவர்கள் வரமாட்டார்கள். அவர்கள் நிலையை நாம் எட்டிப்பிடிக்க முயலவேண்டும். இந்நிலையில் ''வடக்கு வளர்கிறது. தெற்கு தேய்கிறது'' என்று நாம் வாய்கிழியக் கத்துவதால் என்ன பயன்? நம் பலவீனத்தையே அது குறிக்கிறது. புதுமையே இன்னதென்றறியாத நம் சினிமாத் துறையின் இந்த அவல நிலை என்றுதான் மாறுமோ?

''காயத்ரி'',
சென்னை.

[தென்னகத்திலேதான் அறிவு முதிர்ச்சி பெற்றவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள் என்பது யாவருமறிந்த உண்மை. வடநாட்டின் மிகச் சிறந்த டைரக்டரான தேவகி குமார் போஸ், திரு. பி. என். ரெட்டியின் திறனைப் பாராட்டியதுடன் அவரது ''பங்காரு பாப்பா''வை படமாச்கப் போவதாகக் கூறியிருக்கிறார். தயாரிப்பு விஷயங்களில்—தயாரிப்பு முதல் விளம்பரம் வரை—வடநாட்டுக்கு வழி

இளம் நடிகர் கே. கண்ணன்
'படிதாண்டா பத்தினி'யில்
இப்படித் தோன்றுகிறார்

காட்டியவர் திரு. வாசன். புதுமை விரும்பிகளும் திறமைசாலிகளும் இங்குதான் அதிகம். பல திறமைசாலிகளுக்கு தகுந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றால் அதை நம்மால் ஏற்கமுடியும். ''வடக்கு வளர்கிறது. ஆனால் தெற்கு தேய்கிறது...'' இதை இங்க அம்சத்தில் போட்டுக் குழப்பாதீர்கள். அது நாடறிந்த உண்மை! பி.என். ரெட்டி, கே. வி. ரெட்டி, கிருஷ்ணன்-பஞ்சு, பாலசந்தர், காலஞ்சென்ற கே. ராம்னாத், ஆர்ட்

டைரக்டர் சேகர், பிரசாத், மார்க்கஸ் பார்ட்லே, இஞ்ஜினீயர் ஜி. கே. ராமு, எஸ். எஸ். வாசன், ஏவி.எம். முதலியோர் தென்னகத்திலேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள். உலக சினிமா அரங்கிலேயே இந்தியாவின் நிலையை உயர்த்தியது தென்னகத்து வாசன் தயாரித்த 'சந்திரலேகா' தான். அங்கே நூறு படத்திற்கு ஒரு நல்ல படம்தான் வருகிறது. ஔவையார், மனோகரா, எதிர்பாராதது, மிஸ். மாலினி, அந்த நாள் வாஹினியின் படங்கள், ஹம் பஞ்சி ஏக்

ரஞ்சன் இப்படித் தோன்றுவது 'டி. என். ஆரின் 'மின்னல் வீரன்' படத்திற்காக.

டால்கே. மங்கையர் திலகம் முதலியவை நமக்குப் பெருமை தருவனவாகும். ஆ-ர்.]

ஏன் இந்த விஷப்பரீட்சை?

தற்போது தமிழ்ப்படவுலகில் பலவித விஷப்பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. மேலைநாட்டு சினிமாக் கலையை அறிந்திருப்பவர்களில் சிலர், அதே முறையை இங்கு அனுஷ்டிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். சமீபத்தில் ஒரு புதிய படத்தயாரிப்பு நிலையத்தினர் புது நடிகர்களை மேக்-அப் இல்லாமல் சுயவுருவுடன் நடிக்கச் செய்து, படம் தயாரிப்பதாகச் செய்தியறிந்தேன். தமிழ்நாட்டின் முன்னணி டைரக்டர்களில் ஒருவரான பாலசந்தர் அதன் டைரக்டராம். மேல்நாட்டுப் படங்களில் நடிகர்களுக்கு மேக்-அப் கிடையாது என்றால் இங்கும் கூடாதா? நம்மிடம் வசதியான படப்பிடிப்புக் கருவிகள் கிடையாது. தற்போது நமக்குத் தேவையான புதுமையெல்லாம் நல்ல கதைதான்! பாலசந்தர் மேலைநாட்டு முறையைப் பின்பற்றுவதை ஆங்கிலப் பட மோகம் கொண்ட சென்னை தமிழர்களில் சிலர் விரும்பலாம்; எல்லோருமல்ல. "அந்த நாள்", "அவன் அமரன்" இந்த இரண்டு படங்களுக்குப் பிறகும் பாலசந்தருக்கு உரிய பெருமை ஏற்படவில்லையென்றால் குறைபாடு மக்கள் மீதல்ல; பாலசந்தர் மீதுதான். பாலசந்தர் படங்களை டைரக்ட் செய்வது அவருக்காக அல்ல; மக்களுக்காக. மக்களின் விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படாவிடில் வெற்றியேது? பாலசந்தரின் திறமையை யாரும் குறை கூற முடியாது. ஆனால் மக்கள் விருப்பத்தை அவர் எந்த அளவுக்குத் தெரிந்து வைத்திருக்கிறார் என்பதுதான் கேள்வி. இது தமிழ்நாடு; ஹாலிவுட் அல்ல. அவர் இதை உணர வேண்டும்.

துரைராசன்,
சென்னை.

தலையில்லா மனிதனா?

'பேசும் படம்' செப்டம்பர் இதழ் கண்டேன். தலையங்கத்தைத் தேடினேன்; இருந்தால்தானே கிடைப்பதற்கு? பத்திரிகை நடத்துவோரின் கருத்தை அறிவது பத்திரிகையின் தலையங்கத்தின் வாயிலாகத்தான். ஆனால் அது ஏனோ இதில் காணவில்லை. தலையில்லா மனிதனை முண்டம் என்று அழைக்கிறோமே அதே போலத்தான் தலையங்கம் இல்லாத மாத வெளியீட்டை 'படத் தொகுப்பு கொண்ட புத்தகப் பதிப்பு' என்று கூற முடியும்.

"வல்லந்துவனார்",
கடலூர்.

கே. சாரங்கபாணியும், வி.ஆர். ராஜகோபாலும் 'தெய்வ பல'த்தில்இப்படி வருகிறார்கள்.

''பேசும் படம்'' சினிமா அன்பர்களுக்காக மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது. சினிமா அன்பர்களின் சொந்தப் பத்திரிகையான இதிலே ரசிகர்களின் அபிப்பிராயம் பெரும் அளவிலே பிரதிபலிக்கிறது. தபால் பெட்டி, நான் ரசித்த காட்சி, வெட்டுங்கள் இவற்றில் ரசிகர்களின் அபிப்பிராயம் வெளியிடப் படுகிறது. மற்ற பகுதிகள் ரசிகர்களுக்காக வெளியிடப்படுகின்றன. 'பேசும் படம்' ஆரம்பிக்கும்போதே ஜனநாயகக் குரல் தான் எதிரொலித்தது. அதையே அது கடைசி வரை பின்பற்றும். அதன் வழியிலே என்றுமே சர்வாதிகாரம் குறுக்கிட முடியாது. ரசிகர்களுக்காக நடத்தப்படும் இதைப் போன்ற பத்திரிகைகளை ஆங்கிலத்தில் Fans' Magazines என்று குறிப்பிடுகிறார்கள். மேனாட்டிலும் இதைப் போன்ற பத்திரிகைகளுண்டு. ரசிகர்களுக்கு தேவையானது என்று கருதும் போது, அவசியமானால் 'பேசும் பட'த்தில் தலையங்கம் இடம் பெறும். -ஆ-ர்.

கச்சா பிலிம் தொழிற்சாலை

சென்ற மாதத்தில் சென்னையில் படவுலகினரின் கண்டன ஊர்வலம் நடைபெற்றதைப் பற்றிய செய்திகளைப் படித்தேன். ''கச்சா பிலிம் இறக்குமதி வெட்டு'' பிரச்னை இதனால் தீர்ந்து விடாது. இதை விட கலைஞர்களும், படாதிபதிகளும் கூட்டாகச் சேர்ந்து கச்சா பிலிம் தயாரிப்பு தொழிற்சாலையை தென்னாட்டில் ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும். சென்னை அரசாங்கமும் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி, தனியார் தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து கொஞ்சம் மானியம் பெற்றுத்தரும். இது பற்றி நன்கு விளம்பரம் செய்தால் அயல் நாட்டினரிடமிருந்து உதவி கிடைக்க வழியுண்டு. வெளிநாட்டு முதலாளிகளின் கூட்டு முதலும், சர்க்காரின் மானியமும் படவுலகினரின் மூலதனமும் சேர்ந்தால் தொழிற்சாலை ஆரம்பிப்பதில் கஷ்டமிருக்காதல்லவா?

பி. எம். பூபதி,
சென்னை.

[உங்கள் திட்டம் உணர்ச்சி வசப்பட்டதால் உருவானதாகும். வடநாட்டில் கொழுத்த பணம் இருக்கிறது. உங்கள் திட்டப்படி நடப்பதானால் நம்மைவிட பணக்காரர்களான அவர்கள் எப்போதோ அதைச் செய்திருப்பார்கள். வெளிநாட்டு கூட்டு மூலதனம் கூட அவர்களுக்குத் தேவையில்லை. தொழிற்சாலைக்கு உகந்த இடம் தென்னாடு என்பதையாரும் மறுக்கவில்லை. ஆனால் மத்திய சர்க்கார் மனது வைக்கவில்லையே இன்னும்! படவுலகினர் தங்கள் குறையை அரசினர்க்கு எடுத்துக் கூறுமுகமாகக் கண்டன ஊர்வலம் நடத்தினர். மக்கள் ஆதரவு இருக்கிறது. சென்னை மாநில சர்க்காரும் எழுதியிருக்கிறார்கள். கச்சாபிலிம் கட்டுப்பாடு பூரணமாக ரத்து செய்யப்படவில்லையே. இதுவே இந்த நிலையிலிருக்கும் போது தொழிற்சாலைக்கு என்ன அவசரம்? — ஆ-ர்.]

திரை மறைவில் கலை நிபுணர்

காமிரா
ஜி. கே. ராமு

"நாடோடி மன்னன்" திரைப் படம் வந்தது. தென்னகத் துத் திரைப்பட ரசிகர்களிடையே எம். ஜி. ராமச்சந்திரனுடன் ஜி. கே. ராமுவின் பெயரும் அடி பட ஆரம்பித்தது. "யார் இந்த ஜி. கே. ராமு?" என்ற கேள்விக் குறி எல்லோர் முகத்திலும் பிரதி பலித்தது.

எம். ஜி. ராமச்சந்திரன் இளைஞர் ஜி. கே. ராமுவை தன் தயாரிப் பான "நாடோடி மன்னன்" படத் திற்கு ஒளிப்பதிவாளராக ஒப்பந் தம் செய்தார். பரிபூரண சுதந்திரம் தந்தார். ராமுவுக்கு தன் திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைக் கொடுத்த எம். ஜி. ஆர்., அவரது திறமையைக் கண்டபின் தகுந்த விளம்பரமும் தந்தார்.

மந்திரி குமாரி படம் திரையிடப் பட்டபோது, "மாடர்ன் தியேட் டர்ஸ் 'மந்திரிகுமாரி'—கதை - வச னம் மு. கருணாநிதி" என்றுதான் விளம்பரப்படுத்தி னர் டி. ஆர். எஸ். மு. க. வின் வசன அமைப்பு படத்திற்கு உயிரூட்டியதால் அவருடைய திற மைபற்றி நன் கறிந்திருந்த டி. ஆர். எஸ். டைரக்ஷனுக் குக் கூட முதலிடம் தராது "கதை - வச னம் மு. கருணாநிதி" என்று விளம்பரப் படுத்தினர். அதன் பிறகு இன்று 'நாடோடி மன்னன்' பட விளம்பரத்தில் ஜி. கே. ராமுவுக்கு முக்கிய இடமளித் திருக்கிறார் எம். ஜி. ஆர். சமீபமாக இப்படி ஒரு புரட்சி செய்தவர் எம். ஜி. ஆர். தான் என்பது குறிம் பிடத்தக்கது.

ராமு நாடோடி மன்னனுக்கு முன் திரையிடப்பட்ட தங்கமலை ரகசியம், புதுமைப்பித்தன் போன்ற படங்களில் ஒளிப்பதி வாளராகத் திறமையுடன் பணி யாற்றியிருக்கிறார். ஆனால் அப் போது அவருக்கு தகுந்த விளம் பரம் கிடைக்கவில்லை.

ஜி. கே. ராமு மிகச் சிறு வயதி லிருந்து புகைப்படமெடுப்பதில் ஆர் வம் காட்டி வந்தார். சிறு வயதில் அவர் ஒரு பெட்டி காமிராவில் புகைப்படங்கள் எடுத்துக்கொண் டிருந்தார். சேலம் கொல்லப்பட்டி யைச் சேர்ந்த அவர், மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரத்தை சந்தித்து ஸ்டுடியோவில் ஸ்டில் போட்டோ கிராபராகச் சேர்ந்தார். அங்கேயே அவர் ஒளிப்பதிவு, எடிடிங் துறை



இவர்தான் ஜி. கே. ராமு.

களிலும் பயிற்சி பெற்றார். அவர் சம்பந்தப்பட்ட முதல் படம் ''அருந்ததி''யாகும்.

பிறகு ஜூபிடர் பிக்சர்ஸில் சேர்ந்தார் ராமு. கோவை சென்டிரல் ஸ்டுடியோ ஜூபிடர் பொறுப்பிலிருந்தது அப்போது. பிரதம ஒளிப்பதிவாளராக மஸ்தான் இருந்தார். அவரது உதவியாளராக ராமுவை அமர்த்தி ஊக்கமளித்தார் சோமு. 'ராஜகுமாரி'யில் ராமுவின் திறமை பளிச்சிட்டதைக் கவனித்தவர்களில், அதன் கதாநாயகன் எம். ஜி. ஆரும் ஒருவர். ராமுவின் திறமையை சந்தர்ப்பம் வரும்போது நன்கு பயன்படுத்திக்கொள்ள அவர் அப்போதே தீர்மானித்து விட்டார். பிறகு சென்னைக்கு ஜூபிடர் குழுவினரோடு வந்த ராமு, மனோகராவில் தன் திறனை வெளிப்படுத்தினார்.

பிறகு சோமுவிடம் பிரியாவிடை பெற்று, தனியாக தொழிலில் ஈடுபட்டார். அவரது திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவை புதுமைப்பித்தனும், தங்கமலை ரகசியமும். இப்போது அவரது திறமையை வெளிப்படுத்தி நன்கு அறிமுகப்படுத்தவும் செய்த படமான 'நாடோடி மன்னன்' படம் வெற்றிகரமாக நடைபெறுகிறது. வண்ணக்காட்சிகளும், பல நல்ல கோணங்களும், தந்திரக் காட்சிகளும் அதில் பிரமாதமாக இருந்தன. ராமு தற்போது அட்வகேட் அமரன், இன்பக்கனவு, நடேஷ் ஆர்ட்ஸின் படம், பாலநாகம்மா முதலிய படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றி வருகிறார். 'பொன்னியின் செல்வன்' படத்திற்கும் அவர்தான் ஒளிப்பதிவாளர்.

புகழ், பொருள் இவற்றினால் மாறி விடாமல் அவர் என்றுமே அடக்க ஒடுக்கத்துடன், 'நம்ம ராமு' என்று பாராட்டும்படியாகவே நடந்து கொள்ளுகிறார். வேலை எவ்வளவு கடினமானாலும் சிரித்தபடி பொறுமையுடன் செய்வார் அவர்.

''என் வாழ்வில் நான் மறக்க முடியாதவர்கள் டி. ஆர். எஸ், சோமு, எம். ஜி. ஆர். மூவரும்தான். தற்போது எம். ஜி. ஆர். எனக்களித்திருக்கும் சுதந்திரம், காட்டி வரும் அன்பு இவற்றுக்காக நான் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று நன்றி பிரதிபலிக்கக் கூறினார் ராமு. இளைஞர் ஜி. கே. ராமு ஒரு சிறந்த ஒளிப்பதிவாளர். அவருக்கு மகத்தான எதிர்காலமிருக்கிறது. என்பதில் சந்தேகமேயில்லை.

'சம்பத்து'

வாணி தமிழ்–இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான்: தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை: இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

நான் வளர்த்த தங்கை

(தொடர்ச்சி)

காட்சி 4

சங்கரின் சாகசம்!

முரளி கட்டிலில் படுத்திருக்கிறான். சிகரெட் குடித்தபடி நாற்காலியில் அமர்ந்திருக்கும் சங்கர், நயவஞ்சகமான திட்டத்துடன் பார்வதியிடம் சாகஸமாகப் பேசுகிறான்.

சங் : பார்வதி, நீ ரொம்ப மெலிஞ்சி போயிட்டே.

பார் : எப்பவும் போலதானே அத்தான் இருக்கேன்? நம்ம முரளி தான் உங்களை நினைத்து அரை உடம்பாயிட்டான்.

சங் : ஆமாமா, அவன் அரை உடம்பாத்தான் இருக்கான். தகப்பனுடை அரவணைப்பு இல்லாட்டி எந்தப் பிள்ளைதான் தெம்பா இருக்க முடியும்? நான்தான் முட்டாள்தனமா மனைவி, மகன், வீடு, வாசல்ன்னு இல்லாமெ ஊதாரியா சுத்திக்கிட்டு திரிஞ்சேனே. இப்பத்தானே எனக்குப் புத்தி வந்திருக்கு.

பார் : இனிமே எனக்கு நல்ல காலம்தான். கலியாண பத்திரிகையிலே முதல்லே உங்க பேரைத்தான் போட்டிருக்கு.

சங் : பாத்தேன், பாத்தேன். என்ன அன்பு, எவ்வளவு பிரியம்... ஆனால் என் விதி! அன்னைக்கி நான் இங்கேதான் இருக்கேனே இல்லே...

பார் : அத்தான், நீங்க கல்யாணத்துக்கு இருக்க மாட்டீங்களா?

சங் : கல்யாணத்துக்கு மட்டுமென்ன? இனிமே நான் எப்பவுமே இங்கேதான் இருக்கணும்னு. இப்பத்தான் என் கண்ணு தெறந்திச்சு. ஆனா எப்பவோ, நான் செய்த பாவமெல்லாம் இப்ப வந்து பழி வாங்குது. என் ஆசையெல்லாம் நிராசையாக்குது. பார்வதி, அந்தச் சிக்கல் தீராமே இந்தப் பக்கம் தலை காட்றது கூட பெரிய அவமானம்.

பார் : என்ன அத்தான் அந்தச் சிக்கல்?

சங் : பார்வதி, ஏற்கனவே புண்பட்ட நெஞ்சு. அதை இன்னும் நான் வதைக்கவா?

பார் : அப்படிச் சொல்லாதீர்கள், அத்தான். கணவரோட சுக துக்கங்களில் பங்கு கொள்ள வேண்டியவள் மனைவி... நான் மட்டும் விதிவிலக்கா? அந்தச் சிக்கல் என்ன? சொல்லுங்க அத்தான்.

சங் : அந்தச் சிக்கல் தீரணுமின்னு இப்ப என் கையில் ரூபா ஐயாயிரம் வேணுமே.

பார் : இன்னும் ஐயாயிரமா?

சங் : ஆமாம், பார்வதி. நான் எப்படியாவது பணத்தைத் தேடி அந்தச் சிக்கலைத் தீர்க்கப் பார்க்கிறேன். தீத்துட்டேன்னு எப்படியாவது பத்மா கல்யாணத்துக்கு வந்துடுறேன். இல்லே நீமட்டும் கவலைப்படாதே. எங்கே இருந்தாலும் மணமக்களை மனசார வாழ்த்திக்கிட்டுத்தான் இருப்பேன்.

பார் : நீங்க வரமாட்டீங்களா? இப்ப நீங்க வந்ததுக்கு அப்பா எவ்வளவு சந்தோஷமா இருக்காரு தெரியுங்களா?

சங் : நிஜந்தான் பார்வதி. எனக்குத் தெரியாமெ இல்லெ. ஆனா அந்தச் சிக்கலைத் தீக்காமே வந்தேன்னா, கல்யாண வீட்லே இருக்கறப்ப நாலு பேர் மத்தியிலே அந்தப் பயலுக வந்து அவமானப் படுத்திட்டா......என்னை விட்டுத் தள்ளு; உனக்கும், உங்கப்பாவுக்கும் ஏன் இந்த வீட்டுக்குமே எவ்வளவு பெரிய அவமானம்? நினைக்சுப் பார், பார்வதி, நீயே நினைச்சுப்பார்.

பார் : இன்னும் எனக்கு நல்ல காலம் வரலியா அத்தான்?

சங் : அழாதே பார்வதி. உன்னை அழ வைத்து வேடிக்கைப் பார்த்துதான் என் வாழ்வே

இப்படி அவலமாக்கி விட்டது. பணம் இல்லாமல் போனாலும் போகட்டும். கண்ணீரில் மிதந்து வற்றிச் சுண்டிய உன் கண்களை மேலும் சுரண்டி ரத்தம் கொட்ட வைக்க நான் விரும்பமாட்டேன். நான் வந்த சுவடு தெரியாம லேயே ஆண்டவன் மேலே பாரத்தைப் போட்டுவிட்டு எங்கே யாவது போய் விடுகிறேன்.

பார்: என்ன சொல்றீங்க அத்தான்? நீங்க ஆபத்திலே இருக்கும்போது உங்களை விட்டுப் பிரிந்து நான்மட்டும் நிம்மதியாக இருக்கவா? ஐயாயிரம் ரூபா இருந்தா அந்தச் சிக்கலைத் தீத்துடலாமா அத்தான்?

சங்: உடனே தீத்துடலாம். ஆனா பணம் வேணுமே. ஏற்கன வே இங்கே பணம் விரயம் பண்ணிட்டேன்னு உங்க அப்பா கிட்ட கெட்ட பேரு.

பார்: அப்பா கிட்டே கேட்க வேண்டாம். இந்த நகைகளை....

சங்: என்ன உன் நகைகளையா? வேண்டாம் பர்வதி வேண்டாம். ஏற்கனவே இந்தப் பாவிக்கு எவ்வளவோ தியாகம் பண்ணிட்டே. இதுதான் பாக்கி. இதையும் கொடுத்துட்டா நாளைக்கு கல்யாணத்துக்கு சொந்தக்காரங்களெல்லாம் வந்திருக்கப்ப, அவுங்க மத்தியிலே, வெறுங்கழுத்தோட நீ இருக்கிறதைப் பார்த்து நான் எப்படி சகிக்க முடியும்?

பார்: நான் நகை அணிஞ்சிருப்பதெல்லாம் உங்க புன்னகைக்காகத்தானே அத்தான். வேண்டாமுன்னு சொல்லாமே வாங்கிக்கிட்டு போங்க. சீக்கிரமா வந்திடுங்க. நீங்க இருந்து தான் இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்.

நகைகளைக் கழட்டிக் கொடுக்கிறாள். சங்கர் நகைகளை வாங்கிக் கொள்கிறான்.

சங்: உம்...நீயே இவ்வளவு தூரம் சொல்லும்போது நான் என்ன செய்ய முடியும்? இப்பவே போயி அவன் முகத்திலே வீசி எறிஞ்சிட்டு...நாளைக்கே வந்துடறேன். பார்வதி! வையகத்திலும் காணாத வைரக்குவியல் நீ. உன்னை மனைவியா அடைய நான் என்ன புண்ணியம் செய்தேனோ!

போகிறான்.

காட்சி 5

பார்வதியின் சோகம்

பத்மாவுக்கும் சுந்தரத்துக்கும் திருமணம்நடைபெறுகிறது. சங்கர் திருமணத்திற்கு வராததால் மனமுடைந்த பார்வதி முகச்சோபையிழந்து நடைப்பிணமாகிறாள். அதுபோதாதென்று சூதாட்டத்தின் போது ஏற்பட்ட சண்டையில் சங்கர் மாண்டு போகிறான். இந்தச் செய்தி பார்வதியை படுக்கையில் கிடத்தி விடுகிறது. யாவரும் கதறுகின்றனர்.

ஷண்: பார்வதி! விதி இப்படி சோதிக்கிறப்ப நாம என்னம்மா செய்ய முடியும்? எழுந்திரம்மா. சாப்பிடு. சாப்பிடாமெ இப்படி வங்கொலையா கிடந்தியானா என்னாலே தாங்க முடியுமா பார்வதி?

கண: அம்மா...அப்பா கண்ணுலே ஒரு சொட்டு கண்ணீர் உதிர சகிக்க மாட்டீங்களே அம்மா. இப்ப அழுது தவிக்கிறதைப் பாருங்கம்மா. கண்ணைத் திறந்து பாருங்கம்மா.

பத்: அக்கா! நிமிஷத்துக்கு நிமிஷம் என் நலத்திலே கண்ணுங் கருத்துமா இருப்பியே, அதெல்லாம் மறந்து ஏங்கா இப்படி படுத்திருக்கே? எழுந்திருக்கா, எழுந்திருக்கா.

முர: அம்மா...அம்மா...

கண: அம்மா! இதோ உங்க முரளி. நம்ம செல்வத்தைப் பாருங்கம்மா. இவனுக்காகவாவது நீங்க உயிரோட இருக்க வேண்டாமா? அம்மா கண்ணைத் திறந்து பாருங்கம்மா அம்மா.

முர: அம்மா...அம்மா.
பத்: அக்கா.
ஷண்: பார்வதி.

பார்வதி மெதுவாக முரளி பக்கம் திரும்புகிறாள்.

முர: அம்மா...அம்மா...அம்மா அம்மா!

பூவைப் போல...

உங்கள் மேனியை மலரச் செய்வது ரெக்ஸோனு

ஆம், நாள்தோறும் தவருமல் ரெக்ஸோனு உபயோகித்தால், உங்கள் மேனி அதிக் சோபையும், புதுமலர்ச்சியும் பெற்றுவரும்! ஏனெனில், நறுமணமுள்ள ரெக்ஸோனு ஒன்றுதான் கேடில் கலந்த சோப். சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்களின் விசேஷக் கலவையே கேடில். ரெக்ஸோனுவின் இணைபிரியா நறுமணமும், செழிப்புமிக்க, மென்மையான நுரையும் உங்களுக்கு இன்பமூட்டுபவை; அழகு தரும் இந்த சோப்பை தினந்தோறும் உபயோகியுங்கள். ரெக்ஸோனு உங்கள் இயற்கை அழகை வெளிக்கொணரத் துணைபுரியும்!

—கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

RP. 146-50 TM

கண : அம்மா! இதோ உங்க மகன் முரளி.

பத் : அக்கா.

பார்வதிக்கு நினைவு வருகிறது. மெதுவாகக் கண் திறக்கிருள். எதிரே முரளி இருக்கிருள்.

பார் : முரளி... முரளி....

முரளியை வாரி அணைத்துக் கொள்கிருள்.

முர : அம்மா!...அம்மா!...

பார் : முரளி!

பத் : அக்கா!

ஷண் : பார்வதி!

கண : அம்மா!

எல்லோரும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

காட்சி 6

பிள்ளையின் லட்சியம்

மாப்பிள்ளை சங்கர் இறந்த ஏக்கத்தில் படுத்த படுக்கையாகி விடுகிருர் ஷண்முகம் பிள்ளை. இது பற்றி கோவிந்த பிள்ளையும் கணக்குப்பிள்ளையும் பேசிக் கொள்ளுகிருர்கள்.

கோவி : ஷண்முகம் பிள்ளையைப் போன்ற தங்கமான மனுஷரை பார்க்க முடியாதுங்க. பாவம் படுத்த படுக்கையா யிட்டாரு.

கண : எல்லாம் மூத்த மருமகன் இறந்த கவலை தாங்க. பார்வதி அம்மாவோட எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கவலை வேறு அவருக்கு. இவைகளை நினைச்சு நினைச்சு தான்....

கோவி : பாவம்! ஆண்டவன் தான் அவரைக் காப்பாத்தணும். நான் வர்ரேங்க.

விடை பெறுகிருர். ஷண்முகம் பிள்ளை படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிருர். பார்வதி மருந்து கொடுக்கிருள்.

பார் : அப்பா, மருந்து சாப்பிடுங்க.

மருந்து கொடுத்து விட்டுப் போய் விடுகிருள்.

ஷண்முகம் பிள்ளை பார்வதியைப் பார்க்கிருர். சுந்தரமும் பத்மாவும் வருகின்றனர்.

ஷண் : வாங்க மாப்பிள்ளை.

பத் : அப்பா (கண் கலங்குகிருள்).

ஷண் : பத்மா! ஏம்மா கண் கலங்குரே? எங்கே அப்பாவுக்கு என்னமும் ஆயுடுமோன்னு?...அப்படி ஆனுத்தான் என்னம்மா? சாவை ஜெயிச்சுட்டு யார்தாம்மா வாழுருங்க?

தாத்தா தாத்தா என்று சொல்லியபடி முரளி ஓடி வருகிருன். முரளியைத் தூக்கி படுக்கையில் உட்கார வைக்கிருள் பத்மா.

ஷண் : என் கவலையெல்லாம் இந்தச் செல்வனைப் பற்றித்தான். இதக்காகத்தான் மாப்பிள்ளை உங்களை கூப்பிட்டனுப்பிச்சேன். மாப்பிள்ளை, என் வாழ்வின் லட்சியமெல்லாம் என் இரு கண்மணிகளான பார்வதி, பத்மா இவர்களுடைய வாழ்வைப் பற்றியது தான். பத்மாவைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் செய்த பாக்கியம் நீங்க கிடைச்சுட்டிங்க. ஆனு என் பார்வதி பூத்துக் குலுங்க வேண்டிய காலத்தில் அதனுடைய வாழ்வில் இருள் சூழ்ந்து விட்டதே. இதோ இந்த செல்வத்துக்கு இந்த வயதிலேயே தந்தையின் அரவணைப்புக் கிட்டாமல் போய்விட்டதே. அதை நினைத்தால்தான்...

சுந் : அந்தக் கவலை வேண்டாம் மாமா. அவர்கள்தான் இந்த வீட்டின் ஜீவன்களாக இருப்பார்கள். அவர்கள் சுகமே எங்கள் சுகம்.

பத் : அப்பா! என்னைத் தாயன்பு காட்டி வளர்த்த என் அருமை அக்காளுக்காகவும் என் செல்வத்துக்காகவும் தானப்பா எங்கள் வாழ்க்கையே இருக்கும்.

சுந் : மாமா, இந்த முரளி உங்கள் லட்சியம் மட்டுமல்ல. என் லட்சியமும் இவன்தான்.

ஷண் : மாப்பிள்ளை இது போதும்...இது போதும்.

ஷண்முகம் பிள்ளை மரணமடைகிறார்.

காட்சி 7

முரளியின் ரிக்ஷா!

சுந்தரம், முரளி, பத்மா மூவரும் எப்போதும் விளையாடிக் கொண்டிருக்க, பார்வதி குடும்பப் பொறுப்பைக் கவனித்துக் கொள்ளுகிறாள். பத்மாவுக்கு புதுக்கார் வாங்க வேண்டுமென்று கொள்ளை ஆசை. அக்காவிடம் கேட்கச் சொல்லுகிறான் சுந்தரம். அவள் பார்வதியிடம் சொல்லும்போது, உண்ணுமலை வந்து பேசிக் கொண்டிருக்கிறாள். பார்வதி தை மாதத்தில் புதுக்கார் வாங்கலாம் என்கிறாள். பத்மா ஏமாற்றத்துடன் திரும்புகிறாள்.

சுந்தரத்தின் கால்களைப் பிடித்துக் கொண்டு முரளி ரிக்ஷா இழுக்கிறான். பத்மா அங்கே வருகிறாள்.

முர : ரிக்ஷா ரிக்ஷா! ஓரமாப் போ, ஓரமாப் போ.

சுந் : டேய் முரளி!போதும்டா ரிக்ஷா. அதோ உங்க சின்னம்மா புதுக்காரு வாங்கிக்கிட்டு வருதுடா.

பத் : ஆமா, புதுக்காரு வாங்கிக்கிட்டு வர்ராங்க.

சுந் : அட, ஏன் இப்படி சீர்ரே? அக்கா என்ன சொன்னுங்க?

பத் : என்ன சொல்வாங்க? இப்ப இருக்கிற காரேபோதுமாம்.

சுந் : போதுமா? நியாயந்தானே!

பத் : என்ன நியாயம்? நீங்களும் சேர்ந்துகிட்டு.

முர : வா சின்னம்மா, ரிக்ஷா இழுப்போம்.

பத் : டேய் வாலு.

சுந் : சபாஷ்டா முரளி.

முரளியைத் தூக்கிக்கொள்கிறான்.

காட்சி 8

பத்மாவின் குழப்பம்

சாமியா பிள்ளையும் உண்ணுமலையும் ஷண்முகம் பிள்ளை குடும்பத்தைப் பழிவாங்கத் தீர்மானிக்கிறார்கள். சாமியாபிள்ளை, ஒருவனிடம் பணம் வாங்கிக் கொண்டு, ஷண்முகம் பிள்ளையின் மாந்தோப்பை குத்தகைக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறுகிறான். அது கணக்கப்பிள்ளையிடம் பலிக்காமல் போகவே உண்ணுமலையிடம் கெஞ்சுகிறான். அவள் பார்வதி இல்லாத சமயம் பார்த்து பத்மாவிடம் சம்மதம் பெற்று விடுகிறாள். பார்வதி வந்த பிறகு அதற்கு மறுக்கவே, பத்மாவிடம் சண்டை பிடிக்கிறாள் உண்ணுமலை. பத்மா அவளைச் சமாதானப்படுத்தி விட்டு பார்வதியிடம் வருகிறாள்.

தஞ்சாவூர் T. A. அப்துல் ரஹீம்

காஷ்மீர்-குஸூம்

சேவல் மார்க்

ஸான்டலக்ஸ்

நஞ்சன்கூடு பல்பொடி

54. குடும்ப மருந்துகள்

வைத்தியர் உதவி விரும்பதால் எழுதியும் சிகிச்சை பெறலாம்.

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு: **யுனைடெட் கன்ஸர்ன்,**

54, பந்தர் தெரு, சென்னை-1.

பார்வதியும் கணக்கப் பிள்ளையும் நிற்க, பத்மா அங்கு வருகிருள்.

பத் : அக்கா, நேற்று உண்ணுமலை சின்னம்மா வந்து நம்ம மாந் தோட்டத்தை குத்தகைக்குக் கேட்டிச்சு. நானும் தெரியாத் தனமா சரின்னு சொல்லிட்டேன்.

பார் : நீ ஏம்மா சரின்னு சொன்னே? நம்ம முத்தையா குடும்பம் என்ன இன்னைக்கு நேத்தா, பரம்பரையா நம்மகிட்ட எவ்வளவு நன்றியோட நடந்துக் கிருங்க? நம்ம தோட்டத்தை வச்சுத்தானே அவங்க பொழைக்கிற தெல்லாம். அப்பாகூட அவுங் களை கைவிட்டுடாதீங்கன்னு சொல்லி இருக்கிருரு. குருவிக் கூட்டைக் கலைக்கிற மாதிரி நம்மை நம்பி வாழுற குடும்பத்தை விரட் டிட்டு இன்னொருத்தருக்குகொடுக் கிறது ஞாயமில்லேம்மா. அதிலே யும் நம்ம உறவினரோட, முக்கி யமா உண்ணுமலை சின்னம்மாகூட தொடர்பு வச்சுக்கிறது அவ்வளவு நல்லதில்லேம்மா.

பத் : யோசிக்காமத் தான் சொல்லிட்டேன். அதுதான் சாக் குன்னு இப்ப வந்து என்னைக் கல்லு மாதிரி இருந்துகிட்டு போ வேனுன்னு பழி வாங்குது.

பார் : அதாம்மா, இந்த மாதிரி விஷயங்களிலே ரொம்ப எச்சரிக் கையா இருக்கணுங்கிறது. நீ போய் அவுங்களை இங்கே வரச் சொல்லு. எப்படியாவது நான் சமாதானம் சொல்லியனுப்பு றேன்.

பத் : சரிக்கா.

உண்ணுமலை பவுடரைத் திருடி மடியில் கட்டிக் கொள்கிருள். சத் தம் கேட்டு கட்டில் அருகில் போய் ஒன்றுமறியாதவள் போல் இருக்கி ருள், பத்மா அங்கு வருகிருள்.

பத் : சின்னம்மா! மாந்தோப்பை இப்ப இருக்கிறவங்களுக்குத்தான் எப்பவுமே விடணும்னு அப்பா வோட வாக்காம். நான் தான் தெரியாமெ சொல்லிட்டேன், கோவிச்சுக்காதீங்க.

உண் : உன்னை ஏம்மா நான் கோவிச்சுக்கணும்? இந்த வீட் டுக்கு நீதான் ராணின்னு நினைச்சு உன்னை வந்து கேட்டேன் பாரு, என்னை சொல்லணும். தன் பங்கு சொத்தையெல்லாம் புருஷனுக்கு அள்ளிக் கொடுத்துபுட்டு வெறும் ஆளானவ; அவகிட்ட அதிகா ரத்தை யெல்லாம் கொடுத்துப் பிட்டு வெறும் அலங்காரப் பது மையா நீ இருப்பேன்னு நான் என்னத்தை கண்டேன்?

பத் : சின்னம்மா...

உண் : இன்னும் என்னத்துக்கு சின்னம்மான்னு கூப்பிடுறே? அதான் அக்கா அக்கான்னு கிளிப் பிள்ளையாட்டம் கூப்பிட்டுக்கிட்டு அவுங்க போடுற தாளத்துக்கு நீ ஆடிக் காட்டிக்கிட்டு இருக்கியே! அவ இருக்கிற வரைக்கும் உன் ளுலே என்ன செய்ய முடியும்னு கேக்கிறேன்? அவ விரலை அசைக் காமெ ஒரு துரும்பையாவது உன் ளுலே நகத்த முடியுமான்னு கேக் கிறேன். ஐயோ, அப்பாவிப் பெண்ணே. உன்னைப் பாக்க பரி தாபமா இருக்கு. அப்படித்தான் கூட பிறந்தவளேன்னு அதிகாரம் அந்தஸ்தெல்லாம் நீ கொடுத்துத் தான் பாக்கிறியே. அவ உன்னைக் கொஞ்சமாவது சட்டை செய்ய றுளா? அன்னிக்குத்தான் கார் வாங்க முடியாதுன்னுட்டா. இன் னிக்கு உன் வார்த்தையை எடுத் தெறிஞ்சுட்டா. நாளைக்கு என்ன விபரீதம் செய்யக் காத்திருக் காளோ? இந்த வீட்லே உனக் கும் வேலைக்காரிக்கும் என்ன வித் தியாசம்னு கேக்குறேன்? அம்மா பத்மா, நல்லது கெட்டது தெரி யாத குழந்தை நீ. பெரியவ நான் சொல்றதைக் கேளம்மா. கூடப் பிறந்த வியாதிதான் ஆளைக் கொல்லும்னு சொல்லுவாங்க. அதிலேயும் சொத்து சுகம் விஷயம் கொஞ்சம் எச்சரிக்கையாகத் தானே இருந்துக்க. கூடப் பிறந்த வங்களா இருந்தாலும் அவுங்க அவுங்க இருக்க வேண்டிய இடத் திலே அவுங்க அவுங்க இருப்பது தான் நல்லது. இதுக்குமேலே

நான் சொல்ல மாட்டேன். நான் வரேண்டா கண்ணு.

பத்மாவின் மனதிலே விஷ வார்த்தைகளைத் தூவி விட்டு செல்கிருள் உண்ணுமலை. பத்மாவின் மனம் குழம்புகிறது.

காட்சி 9

நான் வளர்த்த தங்கை

பத்மா மனக்குழப்பத்தின் முடிவில், பார்வதி தன் சுகத்தைக் கெடுக்க வந்தவள் என்று தீர்மானித்து விடுகிருள். தன் சிநேகிதியைப் பார்க்க காஷ்மீருக்குப் போக வேண்டும் என்று பிடிவாதம்பிடித்து மூவாயிரம் ரூபாய் பணமும் பெற்றுக் கொள்ளுகிருள். சுந்தரம் அவளுடன் கிளம்ப மறுப்பதுடன், பார்வதியை மீறி எதுவும் செய்யக் கூடாதென்று கூறுகிருன். இதனல் சாப்பிடாமல் அடம் பிடிக்கும் பத்மாவிடம் போகிருள் பார்வதி.

பார் : என்ன பத்மா? வரவர சின்னப் பிள்ளையாவே போறே? என்னைக்கும் இல்லாமெ அதிசயமாயிருக்கே. சாப்பாட்டை இப்படித்தானு வீசி எரியுறது? அதுவும் அவர் முன்னுலே.

பத் : ஆமாம் வீசித்தான் எறிஞ்சேன்.

பார் : எங்கம்மா பழகினே இந்த மாதிரி பேச்செல்லாம்? உனக்கென்ன பயித்தியம் கியித்தியம் பிடிச்சிருக்கா? பேசாமெ எழுந்திரிச்சு வரமாட்டே?

பத் : முடியாது.

பார் : ஆ...ஏம்மா இப்படி அடம் பண்றே? கண்ணல்ல. வாம்மா, உன் காலை வேணு முன்னுலும் பிடிக்கிறேம்மா.

பத் : எங்காலை நீ என் பிடிக்கணும்? உன் காலைப் பிடிக்கத்தான் நான் இருக்கேனே.

பார் : என்ன பத்மா, இன்னிக்கின்னு உன் பேச்சு புதுசா இருக்கு? நான் உன்னைக் கூப்பிடத்தானே கூப்பிடுறேன்?

பத் : நான் சாப்பிடலேன்னு இங்கே ஒருத்தருக்கும் நஷ்டம் வந்திடாது.

பார் : ஆ...பத்மா, நீயா இப்படிப் பேசுறே? இந்த உலகத்தில் எனக்கு உன்னைத் தவிர, உன் வாழ்வைத் தவிர வேறு என்னம்மா இருக்கு? ஏன் என் மனசை இப்படிக் கலங்க வைக்கிறே?

பத் : அக்கா! என்னைக் கவனிச்சுக்க எனக்குத் தெரியும். உனக்கு அந்தக் கவலை வேண்டாம்.

பார் : என்ன, நான் வளர்த்த தங்கை. அவள் சுகத்தைப்பற்றி எனக்குக் கவலை வேண்டாமா? பத்மா! உன் சுகம்தானேம்மா என் லட்சியம்?

பத் : அக்கா! யாராவது சுகமா இருக்கணும்னு அவுங்க அவுங்க இருக்க வேண்டிய இடத்திலே அவுங்க அவுங்க இருப்பதுதான் நல்லது.

பத்மாவின் வார்த்தைகளால் புண்பட்ட பார்வதி பொங்கிவரும் கண்ணீருடன் பத்மாவின் அறையை விட்டு வெளியே வருகிருள். பார்வதி குழம்பிய மனதுடன் வருகிருள். பத்மா சொன்ன சொல் எதிரொலிக்கிறது.

தந்தையின் படத்தின் முன் கண்ணீர் விடுகிருள்.

பார் : இனிமே இங்கே எனக்கு இடமில்லையப்பா. என்னை மன்னிச்சிடுங்க.

பார்வதி தந்தையின் படத்தை தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு கண்ணீரைத் துடைத்தவாறு கீழே விழுகிருள்.

காட்சி 10

பார்வதியின் பிரிவு

பார்வதி தன் புக்ககத்திற்குக் கிளம்ப தீர்மானிக்கிருள். கணக்கப் பிள்ளையிடம் அதுபற்றிக் கூறுகிருள்.

பார் : நாளைக்கு காலையிலே எங்க கிராமத்துக்குப் போகணும். வண்டி ஏற்பாடு செய்யுங்க.

கண : அம்மா! இந்த மாதிரி நிலையிலேயா?

பார் : தயவு செய்து என்னைத் தடுக்காதீங்க.

பத்மா கட்டிலில்படுத்திருக்கிருள். பார்வதி சாவியை படுக்கையில் வைத்துவிட்டு பத்மாவிடம் விடை பெறுகிருள்.

பார் : பத்மா! நான் போயிட்டு வர்ரேம்மா! அக்கா உன்னை விட்டு பிரிஞ்சிருந்தாலும் உங்க சுகத்திற்காக ஆண்டவனை எப்பவுமே வேண்டிக் கொண்டேதாம்மா இருப்பா.

சுந்தரமும் கணக்கப் பிள்ளையும் வருத்தத்துடன் நிற்கிருர்கள்.

பார் : எங்க கிராமத்துக்கு போயிட்டு வர்ரேங்க.

சுந் : கிராமத்துக்கா? அங்கே ஏன் நீங்க போகணும்?

முர : அம்மா, அம்மா வண்டி வந்தாச்சும்மா.

பார் : சின்னம்மா கிட்டே சொல்லிகிட்டு வாடா கண்ணு.

முர : சின்னம்மா சின்னம்மா! நான் போயிட்டு வர்றேன். டாடா,

முர : டாடா! சித்தப்பா டாடா!

என்ன இருந்தாலும் சகோதர பாசம் விடுமா? பார்வதியின் பிரிவால் பத்மா மிகவும் வருந்துகிருள்.

வண்டி நிற்கிறது. கணக்கப் பிள்ளையிடம் விடை பெறுகிருள்.

பார் : நான்போயிட்டு வரேன்! நான் இங்கே இல்லையேன்னு நீங்களும் போயிடக் கூடாது. பத்மா சின்னப் பொண்ணு. அவளுக்கு எது எப்படின்னு ஒண்ணும் தெரியாது. நீங்கதான் எல்லாத்தையும் கவனிச்சுக்கணும். அதுதான் நீங்க எங்க அப்பாவுக்கு செய்கிற நன்றி.

முரளி ஓடி வர, சுந்தரம் பின்னுல் வந்து நிற்கிருன். முரளியைத் தூக்கி வண்டியில் வைத்துவிட்டு ஏறிக்கொண்டு போகிருள் பார்வதி.

சாமியின் துரோகம்

ஆகாவும் வில்லியும் நெருங்கிப் பழகுவதைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு, அவர்களுக்குத் தேவைப்படும் ஐயாயிரம் ரூபாயைக் கொடுத்து, சொத்து முழுவதிலும் ஆகாவுக்குள்ள உரிமையைப் பறிக்கும் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி உண்ணுமலையிடம் கொடுத்து விடுகிருன் சாமியா பிள்ளை. ஆகா ஊர்சுற்றக் கிளம்புகிருன்.

காட்சி 11

கிராமத்தில் சுந்தரம்

பார்வதியும் முரளியும் கிராமத்துக்குச் சென்ற பிறகு, சுந்தரம் பித்துப் பிடித்தவன் போலிருக்கிருன். முரளியை வளர்ப்புப் பிள்ளையாகக் கருதிய சுந்தரத்தால் அவனைப் பிரிந்திருக்க முடியவில்லை. பத்மாவிடமும் தினசரி பூசல்தான். இந்நிலையில் மனம் வெறுத்த சுந்தரம் கிராமத்திற்குப் போகிருன்.

முர : அம்மா...அம்மா....சித்தப்பா வந்திருக்காரு; சித்தப்பா வந்திருக்காரு.

சுப் : வாப்பா சுந்தரம். எங்கே பத்மா வரலே?

சுந் : இல்லீங்க.

வள் : வாங்க தம்பி. பத்மாவையும் ஏன் கூட்டியாரலே?

பார் : தங்கச்சி என்ன செய்ரு? அவளையும் அழைச்சிட்டு வந்திருக்கப்படாது?

சுந் : அவளுக்கு நேரம் இருந்தாத்தானே? பொறுப்பெல்லாம் இப்ப அவ தலைமேலே.

வள் : ஆமா....ஆமா....அவ ஒண்டி என்ன செய்வா? எல்லாத்தையும் கவனிச்சுக்கிறணுமே? தம்பி,குளிச்சிட்டு வாங்க. சாப்பிடலாம்.

பார் : கணக்கப்பிள்ளைய்யா எப்பவும்போல கவனிச்சுக்கிருரா?

சுந் : கவனிச்சுக்கிருருங்க.

பொம்மை விளையாட்டைப் பார்த்து பெருமைப் படுகிருன் முரளி.

முர : பலே சித்தப்பா பலே.

வள்ளி வருகிருள்.

வள் : என்ன பார்வதி! என்னம்மா பேசிக்கிட்டே இருக்கே? சாப்பிடலாம் வா தம்பி.

பார்: வாங்க.

எல்லோரும் உள்ளே போகின்றனர். சுந்தரம் ஊருக்கு புறப்படுகிறான். பார்வதியிடம் வருகிறான்.

சுந்: நீங்க சீக்கிரமா அங்கே வந்திட்டாத்தான் எல்லோருக்கும் நிம்மதியாயிருக்கும்.

வள்: இதுவும் யார் வீடு? அவுங்க வீடுதானே? எங்கே இருந்தாத்தான் என்ன தம்பி?

சுந்: முரளியை பாக்காமெ ஒருநாள்கூட என்னுலெ இருக்க முடியாதுங்க.

வள்: அப்படின்னு இன்னம் நாலு நாளைக்கு இருந்துட்டுப் போகலாமே தம்பி.

சுப்: ஆமாப்பா...நீதான் அவசரப் படுறியே.

சுந்: அதுக்கில்லேங்க. அங்கேயும் அவ தனியா இருப்பா.எல்லோருக்கும் வணக்கம். நான் வாரேனுங்க.

சுப்: போயிட்டு வாப்பா... பத்மாவை நாங்க ரொம்ப விசாரித்ததாகச் சொல்லு.

வள்: அடுத்த தடவை வர்ரப்ப பத்மாவை மறந்திடாம கூட்டியாங்க.

முரளி: டாடா ... சித்தப்பா ... டாடா.

சுந்தரம் போகிறான். அதைக் கண்டு ஊர்ப்பெண்கள் கேலி செய்கிறார்கள். பார்வதியையும் அவனையும் இணைத்துப் பேசுகிறார்கள்.

காட்சி 12

பத்மாவின் சீற்றம்

தீபாவளி தினம் முரளிக்கு கொடுப்பதற்காக தின்பண்டம், வாணங்களுடன் கிராமத்திற்குச் செல்கிறான் சுந்தரம். உண்மையை அதைத் திரித்துக்கூறி, அவர்கள் நடத்தையிலேயே பத்மாவுக்கு சந்தேகம் ஏற்படும்படிச் செய்து விட்டுப் போகிறாள். கிராமத்திலும் பார்வதியின் மாமியார் உள்ளத்திலே சந்தேகத்தீயை மூட்டி விடுகிறாள் ஒருத்தி. சுந்தரம் உடனடியாகத் திரும்பி விடுகிறான். பத்மா கோபத்தோடு வரவேற்கிறாள்.

பத்: என்ன, தீபாவளியெல்லாம் அமக்களமா முடிஞ்சுதா? எனக்கு துரோகம் செய்யறது தான் உங்களுக்கு கொண்டாட்டம்னு செய்யுங்க. உங்க ஆட்ட பாட்டம் எல்லாம் எவ்வளவு காலந்தான் செல்லும்னு பாக்கறேன்.

சுந்: பத்மா! உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா?

பத்: எனக்கு ஏன் பைத்தியம் பிடிக்குது? யாரு பைத்தியம் பிடிச்சு அலையறுங்கன்னு நீங்களே நினைச்சுப்பாருங்க. கை பிடித்தவளை கண் கலங்கி தவிக்க விடுவது ஞாயமில்லை.தெரிஞ்சுக்குங்க.

சுந்: நியாயம் அநியாயம் தெரிஞ்சுதான் பேசுறியா பத்மா?

பத்: அறியாத பசலை இல்லை நான். உங்க அக்ரமம் எனக்குத் தெரியாம இல்லே. அதுக்கு முடிவு காணுமல் விடப்போறதுமில்லே.

சுந்: உன்னைப் பார்க்க எனக்கு அனுதாபம்தான் உண்டாகிறது.

பத்: அறிஞரைப்போல நடித்துக் காட்டுறீங்களா? இதோ பாருங்க. ஏமாற்றத்திற்கும் ஓர் எல்லை யுண்டு. உங்க நயவஞ்சகத்திற்கு இனியும் நான் பலியாவேன்னு மட்டும் கனவு காணுதிங்க. ஆமா!

சுந்: பத்மா...

பத்: என் வாழ்வையே நாசமாக்கத் துணிந்தீர்களே!

பத்மா கதவை மூடிவிட்டு கட்டிலில் போய் படுத்து விசும்புகிறாள்.

பார்வதியின் பயணம்

பார்வதி வீட்டிலும் எரிமலை வெடிக்கிறது.

வள்: அவன் இங்கே வாரதும் உன்னை பாக்கிறதும் போறதுமா இருந்தா நீ இங்கே ஏன் வரணும்னு கேக்கிறேன்? உங்கப்பா வீட்டிலேயே இருந்துக்க வேண்டியது தானே?

பார் : என்னங்கத்தை அப்படி சொல்றீங்க? அவர் என் சொந்த தங்கச்சி மாப்பிள்ளை. முரளி மேலே இருக்கிற பிரியத்தினாலே தீபாவளி பரிசு கொடுத்திட்டுப் போகலாம்ன்னு தானே வந்தாரு? இது தவறு? உங்களுக்கு பிடிக்கலேன்னா இனிமே வந்தா வர வேண்டாம்ன்னு சொல்லிட்டேன் அத்தே.

சுப் : இனிமே அவன் வந்தா என்ன, வரலேன்னாத்தான் என்ன? விழுந்த பழி விழுந்தது தானே? உம். இதுவரை பூமிநாத பிள்ளை வம்சம்ன்னா ஒரு பய ஒரு சொல்சொல்லி யிருக்கமாட்டான். எங்காலத்திலே இந்த கெட்ட பேரை கேக்கணும்ன்னு எழுதி யிருக்கே.

வள் : இந்தா பாரு. அம்மா... உனக்கு கோடி புண்யம். இந்த கிராமத்திலே மானம் மரியாதையா வாழ்ந்தவங்க நாங்க. எங்களுக்கு உன்னாலே இந்த மட்டோட அடைஞ்ச பேரு போதும்மா.

நகருகிறாள் பார்வதி. பார்வதி தன் மனதுடன் போராடுகிறாள். முரளி கட்டிலில் படுத்திருக்கிறான்.

குரல் : கடைசியாக 'புகுந்த இடம் என்று வந்தால் இங்கு உன் கதி? உன் பெண்மைக்கே இழுக்குத் தேடி உன் கற்புக்கும் மாசு கற்பித்து விட்டார்களே, பாவிகள். இனியும் நீ உயிர்வாழ்வதா?

பார் : ஆம், சாவுதான் இனி மேல் எனக்கு சாந்தி தரமுடியும்.

அவள் வெளியே செல்கிறாள்.

குர : நில். என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? அதோ

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!



மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மண[illegible] அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்ஷம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

***Principal*, BENGAL MESMERISM HOUSE**
(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

களங்கமற்று தூங்கும் உன் குழந்தையையும் மறந்து விட்டாயா? கணவனுக்குப் பின் உயிர் வாழ விரும்பாத நீ, இந்த செல்வனுக்காகத்தானே நடமாடுகிறாய்? உன் அப்பா வடித்த கண்ணீர் எல்லாம் வீண்தானா? உலகம் உன்னை தூற்றலாம், பழி சொல்லலாம். ஆனால் நீ பரிசுத்தமான பத்தினி என்பதை நீ அறியாயா? இந்த வீண் பழிகளுக்குப் பயந்து ஒரு சிறுவனை தாயற்ற நிலைக்கு ஆளாக்க வேண்டுமா? அவன் கதியற்று நடு வீதியில் அலையத்தான் வேண்டுமா?

நீ தாய். மகனுக்காக மகத்தான தியாகங்கள் செய்ய வேண்டிய மாதா. உனக்காக இல்லாவிட்டாலும் உன் மகனுக்காக நீ வாழ கடமைப்பட்டவள். யார் எதிர்த்தாலும் சரி, போராடியாவது நீ பெற்ற மகனை வளர்த்து ஆளாக்கு. போ, புறப்படு.

இறங்கி வந்து முரளியை எடுத்து அணைத்துக் கொண்டு வெளியே செல்கிறாள்.

காட்சி 13

பார்வதியின் கேள்வி

பார்வதி வீட்டை விட்டுச் சென்றதை அறிந்த சுந்தரம், அவளையும் குழந்தை முரளியையும் தேடி, சுப்பையா பிள்ளை வீடு சென்று அவமானப்பட்டபின் ஊர் ஊராக அலைகிறான். ஒரு ஊரில் திருவிழாவில் முரளி பார்வதியை விட்டுப் பிரிந்து விடுகிறான். தேடியலுத்த பார்வதி ஒரு கோயில் விக்கிரகத்தின் முன் கதறுகிறாள்.

பார்: எங்கே என் முரளி?... எங்கே என் செல்வம்? என் கண்மணியை என்ன செய்தாய்? எங்கே அவனை மறைத்து வைத்திருக்கிறாய்? சொல் தெய்வமே, சொல்! உன் திருவிளையாடலுக்கு இழுபடும் சொக்கட்டான் காயாக இந்த அபலைதானா அகப்பட்டேன்? பெண்ணாகப் பிறந்தேன். மகளே என்று அன்பு காட்ட அம்மா, அப்பாவை இழந்தேன். மனைவி என பரிவுகாட்ட கணவனை இழந்தேன். உயிரிலும் மேலாக நான்

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வாகள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் செட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ.வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

வளர்த்த தங்கை: அவளின் அன்பை இழந்தேன். வாழ்விழந்தேன். வரிசை இழந்தேன். உற்றாரின் பாசம் இழந்து கடைசியாக என் மகனுக்கு தாயாகவாவது நடமாடலாம் என்று திரிந்தேனே, என் மகனையும் பிரிந்துவிட்டாயே? என் கண்ணின் திருமணியை, என் வாழ்வின் ஒளியை இழந்தபின் சாரமற்ற இந்த வாழ்வு எனக்கு எதற்கு? இனி நான் யாருக்காக வாழவேண்டும்? தெய்வமே, இனி நான் வாழ்ந்துதான் என்ன பயன்? ஏன் பேசாமல் நிற்கிறாய்? உன்னை காலமெல்லாம் நம்பிக் கிடக்கும் எங்களை ஏன் இப்படி துடிக்க வைத்து பனிபூத்த நெருப்புபோல் மௌனமாகி விட்டாய்? நாங்கள் உனக்கு செய்த பாவம்தான் என்ன? மனித பாசத்தின் அரவணைப்பு கிட்டாமல் உன் மலரடியே தஞ்சமென ஓடோடியும் வந்தேனே! நம்பினோர் கெடுவதில்லை, என்னும் நல்லோரின் வாக்கென்ன பொய்யாகி விட்டதா? இதுதானா உன் அன்பு? தாயிடமிருந்து மகனை பிரித்து வேடிக்கை பார்ப்பது தானா உன் கருணை? என் மகன்! ஐயோ அவன் எங்கெல்லாம் அலைகிறானோ? என்னைத் தேடித்தேடி 'அம்மா அம்மா' என்று எப்படியெல்லாம் துடிக்கிறானோ? எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் உனக்கு அவன் இருக்குமிடம் தெரியாதா? அவன் எழுப்பும் கூக்குரல் உன் செவிகளில் கேட்க வில்லையா? சொல். என் முரளி இருக்கு மிடத்தைச் சொல்! எதற்காக என்னை இருக்க வைத்தாயோ, யாருக்காக என்னை நடமாட விட்டாயோ அந்த செல்வனைக் கொடுத்துவிடு. என் மகனை நீ கொடுக்கா விட்டால், உன்னை விட்டு நான் நகரவே மாட்டேன். என் கடைசி ரத்தத் துளியையும் உன் திருவடிக்கே அபிஷேகமாக்கி உன் கருணைத் திறக்கும்வரை ஓய மாட்டேன். தெய்வமே, என் முரளியைக் கொடு! இல்லையேல் என் மூச்சை நிறுத்திவிடு. எங்கே என் முரளி?

விக்ரகத்தின் பாதத்தில் தன் தலையை முட்டிக்கொள்ளுகிறாள்.

பார். எங்கே என் கண்மணி... கொடு! என் முரளியை முரளி... முரளி...தெய்வமே.

அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது.

சிவாஜியின் சித்தப்பா

முரளி மகுடி ஊதி வேடிக்கை காட்டுகிறான். அப்போது, தாடி மீசையுடனிருக்கும் சுந்தரம் அவனைச் சந்திக்க, முரளியுடன் போகிறான் சுந்தரம். முரளியின் பெயர் இப்போது சிவாஜி. பிறகு ஆகாவையும் அவன் சந்திக்கிறான். ஆகா அவனுக்கு காபி கொண்டு வருமுன் விவரத்தைக் கூறி மறைந்து விடுகிறான். மந்திரவாதி ஆகா ஊர் திரும்புகிறான். தன்னை ஏமாற்றி சாமியா பிள்ளை தன்னிடம் கையெழுத்து வாங்கிய பத்திரத்தைக் கிழித்து விடுகிறான்.

காட்சி 14

ஆகாவின் பொறுப்பு

உண்ணாமலை கணக்கப்பிள்ளையிடம் வந்து, சுந்தரமும் பார்வதியும் சென்னையில் குடும்பம் நடத்துவதை ஆகா பார்த்ததாகக் கூறுகிறாள். கணக்கப்பிள்ளை அவளைத் திட்டும்போது பத்மா வந்து கேட்கிறாள்.

பத்: இப்ப நீங்க சொல்றதெல்லாம் நிஜந்தானா?

உண்: நல்ல கதி அடையணுமேன்னு சதா பகவானை வேண்டிகிட்டிருக்கிற இந்த வயதிலேயா நான் பொய்யெ வேறே...

பத்: பாத்தீங்களா, கணக்கப்பிள்ளையா. என் கூடப்பிறந்தவளே என் வாழ்க்கைக்கு வினையாயிட்டா.

கண: அம்மா. இந்த சதிகாரி பேச்சை நம்புறீங்களா? இவள் பேச்சைக்கேட்டு தாய்க்கு தாயாக அரவணைத்து வளர்த்த உங்கள் சகோதரியை சந்தேகிக்கிறீர்களா? உயிருக்கு மேலாக காதலித்து மலரும் மணமும்போல் இணைபிரியாமலிருந்த கணவரை சந்தேகிக்கிறீர்களா? இவளோடு சக

வாசம் செய்து நாம் அனுபவித்த பலன் போதாதா? அம்மா! உங்கள் வீட்டு வேலைக்காரன் சொல்வதாக நினைக்காதிர்கள். தத்தித் தவழ்ந்த மழலைப் பருவத்திலிருந்து இந்த தோளிலே உங்களை தூக்கி வளர்த்தேனே அந்த தந்தை பாசத்தின் ஓலமம்மா ... இந்த ஓலம். என்னை ஆளாக்கிய இடம். நான் பாடுபட்டு வளப்படுத்திய இடம். இந்த இடம் குட்டிச்சுவராக மாறிவிடக் கூடாதம்மா. உங்களை கெஞ்சுகிறேன். உதட்டில் தேனும். உள்ளத்தில் நஞ்சும் வைத்துத்திரியும் கொடுமைக்காரியம்மா இவள். இவளிடம் நீங்கள் பேசவே கூடாது. சீதையைப் போன்ற சிலவதியான உன் அக்காவையும், ஸ்ரீ ராமரைப் போன்ற உன் கணவரையும் சந்தேகிப்பது தர்மத்தையே பழிப்பது போலாகும்மா. இந்த நாசக்காரியை நம்பாதிங்க.

உண் : அந்தக் கட்டுக்கதைக் கும் புராணத்துக்கும் குறைச்சல் இல்லே. சிதா ராமரோ, தாரா அ[illegible]ரோ? மகா பெரிய உதார ண[illegible]தயில்லே அய்யா புட்டு வைக்கிறுரு. உம். யார் எப்படிப் போனுத்தான் எனக்கு என்ன? என் தம்பி சென்னையிலிருந்து இன்னைக்கு வந்தான். அங்கே பார்வதியும் சுந்தரமும் குஷாலா குடும்பம் நடத்துறதை பார்த்தானும். இப்படியும் அநியாயம் நடக்குமான்னு உன்னையும் உடனே சென்னைக்கு கூட்டிக்கிட்டு போகணும்னு வந்தேன்.

பத் : கணக்கப்பிள்ளையா! நீங்க என்ன சொன்னுலும் சரி...சின்னம்மா பொய் சொல்ல மாட்டாங்க. நான் இப்பப்போய் அவரை கூட்டியாரணும். வாங்க சின்னம்மா.

அப்போது ஆகா வருகிருன்.

ஆகா : அடடே .... அக்கா எங்கே இங்கே டேரா அடிச்சிருக்கே? திட்டமில்லாமே தான் உன் விஜயம் இருக்காதே.

உண் : சரிசரி. இப்பத்தான்வந்தேன். வாவா போகலாம்.

கண : காடுவெட்டி! இப்போ நீ எங்கிருந்து வர்றே?

ஆகா : சேலத்திலே மிஸ்டர் சுந்தரத்தைப் பார்த்தேன்.

கண : ஹா...

ஆகா : அதை சொல்றதுக்கு தான் வந்தேன்.

உண் : அட ஏண்டா......அதை சொல்லிகிட்டிருக்கே? நம்ம பேச்சை இவுங்க கேக்கவா போருங்க? வாடா நாம போகலாம்.

கண : ஹாங்— சின்னையாவை பார்த்தாயா? எங்கே பார்த்தே? யாரோடே?

ஆகா : யாரோடவா? பாவம். கிழிஞ்ச துணியை கட்டிக்கிட்டு தாடியை வளர்த்துகிட்டு பைத்தியம் பிடித்தவனுட்டம் ரோட்லே சுத்திகிட்டு திரியறதை பார்க்கும் போது நான் எவ்வளவு வேதனை பட்டேன் தெரியுமா? ஏனப்பா உனக்கு இந்த கதின்னு கேட்டேன். மாமனுருக்கு கொடுத்த வார்த்தையை காப்பாத்தறதுக் குன்னு சொன்னுரு....காப்பி கொண்டாறேன்னு போனேன். திரும்பி வர்ரதுக்குள்ளே மனுஷன் மாயமா மறைஞ்சுட்டாரு.

கன : உண்ணுமலே! எங்கே போறே? பார்வதியும் சுந்தரமும் சென்னையிலே குடும்பம் நடத்துறதை பார்த்ததாக உன் தம்பி சொன்னுன்னு சொன்னியே, பாவி, இப்ப என்ன சொல்றே?

ஆகா : ஆ ... நான் சொன்னேனு? பார்வதியை நான் பார்க்கவே இல்லையே! ஏங்கா இப்படி பொய்யும் புளுகும் சொல்லி பாவ மூட்டையை கட்டிக்கிறே?

கண : இது மட்டுமல்லப்பா. ஒரு கொத்துலே பூத்த ரெட்டை மலர்கள்போல் ஒண்ணுயிருந்த அக்கா தங்கையை முகத்திலே முழிக்க விடாம செஞ்சுட்டா. வாழவேண்டிய தம்பதிகளை சதி வேறே பதிவேறயா பிரிச்சுட்டாள்.

ஆகா : ஆ. நீதானா இவ்வளவும் செஞ்சே? பாவி உன்னாலே என் குடும்பத்துக்கே பெரிய பழியை உண்டாக்கிட்டியே. நீ என் முகத்திலே விழிக்காதே. போய்விடு.

பத்மா கீழே விழுந்து அலறி அழுகிறாள், ஆகாவும் கணக்கப் பிள்ளையும் அவளிடம் செல்கின்றனர்.

கண : அம்மா. பத்மாம்மா நடந்ததை நினைச்சு வருத்தப்படாதிங்க.

பத் : அன்புக் கோயிலை இடித்தெறிந்த பாவியாகிவிட்டேனே நான்.

கண : இந்த மட்டோட கண்ணைத் திறந்து விட்டாரே ஆண்டவன். நமக்கு இனிமே நல்ல காலந்தாம்மா. இனிமே நடக்க வேண்டியதை கவனிப்போம்.

ஆகா : மிஸ்டர் சுந்தரம் வர வேண்டும், அவ்வளவு தானே?

ரூபாய் 6/-க்கு ஒரு கடிகாரம்



சங்கிலித் தொடர்பு முறையில் ரூ. 6/-க்கு ஒரு கடிகாரத்தைப் பெறுங்கள். 15 ஜுவெல்கள் கொண்ட இக் கடிகாரம் 5 வருஷ உத்திரவாதமுள்ளது. தபால் செலவு ரூ. 1-25 நயா பைசே தனி. எங்களுடைய பாரடைஸ் சென்டைப் பிரபலப் படுத்தவே இதை ஆரம்பித்திருக்கிறோம். நீங்கள் விரும்பாவிட்டால் பணம் வாபஸ்.

American Trading Company,

(Watch Suppliers)

(PPM) JULLUNDER CITY.

பத் : என் அக்கா....அருமை முரளி.

ஆகா : அவ்வளவு பேரையும் கூட்டியாந்து சேக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. எங்கக்கா செஞ்ச துரோகத்துக்கு பிராயச்சித்தமா எல்லோரையும் கொண்டாந்து சேக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. கணக்கப் பிள்ளை! பத்மாவை ஜாக்கிரதையா பார்த்துக்குங்க. நான் வாரேன். பத்மா. குட் பை.

ஆகா செல்கிறான்.

பத்மாவும் கணக்கப் பிள்ளையும் அவர்களைத் தேடவும் மன ஆறுதலுக்காகவும் திருவிழாவுக்கு கிளம்பிப் போகிறார்கள்.

காட்சி 15

இதோ முரளி

ஆகா சாமியார் வேடத்தில் இருக்கும்போது, சுந்தரமும் முரளியும் வருகின்றனர். சுந்தரத்திடம் விவரம் கூறும் ஆகா, முரளியை விரட்டிவிட அவன் ஒரு சத்[illegible]திலே படுக்கிறான். அங்[illegible]ன் பத்மாவும் கணக்கப்பிள்ளையு[illegible]க்கின்றனர். அங்கிருந்து மானேஜரால் விரட்டப்பட்ட முரளி, பித்துப் பிடித்துத்திரியும் பார்வதியையும் பார்க்கிறான். அவளை சில சிறுவர்கள் கேலி செய்வதைத் தடுக்கப் போக அடிபட்டு விழுகிறான். கணக்கப்பிள்ளை ஓடி வருகிறார்.

பத் : ஹாங்...கணக்கப்பிள்ளை... பார்த்திங்களா மச்சம்.நம்ம முரளி.

முரளியின் முதுகிலுள்ள மச்சத்தைக் காட்டுகிறார்.

வேலை : நம்ம குழந்தையா?

கண : ஆமாம்மா...நம்ம முரளி தான்...முரளி.

பார்வதியும் அங்கு வருகிறாள். தனக்குத்தானே பேசுகிறாள்.

பார் : அப்படித்தான் வேணும். நல்லா வேணும் இன்னும். என் முரளியை திருடினா?

பத் : அக்கா!

கண : பெரியம்மா!

வேலை : அம்மா!

பார் : முரளி. என் முரளி.

பத் : அக்கா,

மானே : அம்மா!

கண : உன் முரளி இதோ இருக்கிறனம்மா.

முர : நான்தான் முரளியா?

கண : நீ தாண் டா.....ராஜா முரளி.

முர : சித்தப்பா...சித்தப்பா.

ஓடுகிறுன் சுந்தரத்தைத் தேடி.

கண : முரளி...முரளி.

அவரும் ஓடுகிருர்.

பத் : அக்கா...நில்லு..அக்கா... அக்கா!

மானே : பார்வதியம்மா....பார் வதியம்மா.

பின் தொடர்ந்து ஓடுகிருர்கள்.

பார்வதி ஒரு மலேச் சரிவில் விழுந்து மயக்க முறுகிருள்.

காட்சி 16

சுந்தரத்தின் கேள்வி

சுந்தர மிருக்குமிடம் நோக்கி ஒடுகிருன் முரளி. கணக்கப்பிள்ளை பின் தொடருகிருர்.

முர : நான் சிவாஜியில்லே சித்தப்பா; நான்தான் முரளி, நான் தான் முரளி.

ஆகா : யார்ரா இவன் எமப் பயஞ இருக்கான்! திடீர் திடீர்ன் னுல்ல முளைக்கிருன். அந்தப் பக்கம் போடா.

சுந் : சிவாஜி என்ன சொல்றே? நீ என் முரளியா! என் முரளி நீதானு?

முர : ஆமாம்.

ஆகா : சுந்தரம்! இந்த பிச்சைக்காரப்பய உளர்ரதை கேட்டுவிட்டு நீங்க! நம்ப முரளி எப்படி இருப்பான்? சேசே.

கண : முரளி முரளி! ஆ சின்ன எசமான்! நீங்களும் வந்துட்டீங் களா? இதோ நம் முரளி.

ஆகா : கணக்கப்பிள்ளை சார். உங்களுக்கும் மூளை கோளாரு யிடுச்சா. என்ன? இந்த தரித்திரமா நம்ம முரளி?

கண : அட. சும்மாருய்யா. நம்ம முரளியை பாருங்க. இந்த மாணிக்கம்தான் நம்ம முரளி... இதோ முதுகிலே மச்சம்!

சுந் : ஆங்...முரளி...முரளி!

ஆகா : நம்ம முரளியா இது?

கண : எசமான்! பத்மா அம்மா கூட உங்களை தேடி கதறிகிட்டு இருக்காங்க. புறப்படுங்க எஜ மான்...புறப்படுங்க.

ஆகா : பத்மாவும் வந்திக் காங்க.

கண : எசமான்! பெரியம்மாவும் வந்து இருக்காங்க.

சுந் : என்ன, அண்ணி இங்கே இருக்காங்களா?

கண : ஆமாம், எசமான் புத்தி மாருட்டமா இருக்காங்க புறப் படுங்க.

சுப் : ஆ......புத்திமாருட்டமா? எங்கே இருக்காங்க?

கண : வாங்க...வாங்க.

எல்லோரும் செல்கிருர்கள்.

காட்சி 17

பத்மாவின் கதறல்

மூர்ச்சித்த பார்வதியை விக்ரகத் தின் முன் கிடத்துகிருள் பத்மா. அவள் கதறுகிருள்.

பத் : அக்கா! என்னை பாரக்கா. கண்ணைத் திறந்து பாரக்கா. உன் அருமை பத்மாதான் நான். உன்னுல் ஆளானவள். நீ சீராட்டி தூக்கி வளர்த்த தங்கைதான் அக்கா. அக்கா நான் அக்கா—ஒரு வார்த்தை பேசு. உன்னை இக் கதிக்கு ஆளாக்கிய இந்த பாவி யை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல். அகங்கார வெறியில் உனக்கு நான் செய்த அக்ரமத்தை எல்லாம், அறியாசிறு மியின் தவறு, என்று என்னை மன் னித்துவிடு. மாட்டாயா அக்கா... சின்னஞ்சிறு வயதில் நான் செய்த

தவறுகளை நீ மறந்ததில்லையா? அன்று உன்னை கடிந்த போதெல்லாம் அன்புகாட்டி பொறுத்தாயே இப்போது மட்டும் ஏன் மௌனமாக இருக்கிறாய்? தாயற்றபோது தாயாக இருந்து தாங்கி வளர்த்த என் தங்கச்சிலேயே. அக்கா, அக்கா மன்னிக்க மாட்டாயா? ஆம்; நீ மன்னிக்க முடியாதுதான். உன் அன்பு நெஞ்சத்தை என் நஞ்சு வார்த்தைகளால் புண்படுத்தினேன். அன்புத் தெய்வமான உன்னை அவமானப்படுத்தி வீட்டை விட்டு வெளியேற்றினேன். உடன் பிறந்தே கொல்லும் வியாதியான இந்தக் கொடுமைக்காரியை நீ மன்னிக்க முடியாதுதான். அக்கா, மன்னிக்க வேண்டாம் அக்கா! ஒரு தரம் என்னைப்பார். உன் பார்வையால் என் பாவம் தீரட்டும் அக்கா! அக்கா பார்க்க மாட்டாயா? அக்கா அக்கா! தெய்வமே! உன் கோபம் இன்னும் தீரவில்லையா? உன் குமுறும் நெஞ்சிலே கருணை பிறக்கவில்லையா? மாசில்லாமணி, மாதரசி, என் அக்காள் உன் சன்னதியிலே அசைவற்றுக் கிடக்கிறாள். சத்தியத்தின் சாம்ராஜ்யம் சாய்ந்து கிடக்கிறது. சகித்துக் கொண்டு ஏன் மௌனமாக இருக்கிறாய்? அவள்தான் என் வாழ்வு. அவள் இல்லையேல் எனக்கு வாழ்வில்லை. அவள் சாகக்கூடாது. சத்தியம் பொய்யாகி விட்டதே என்று காட்டி விடாதே. சாமி தன் தங்கை செய்த தவறுக்காக தன்னையே தியாகம் செய்து கொண்டாள் அக்காள். அந்த தியாகத்திற்கு பரிசு மரணம்தான் என காட்டிவிடாதே. ஆண்டவா! உலகத்தில் உடன் பிறந்த பாசம் எல்லாம் நாசம் விளைவிக்கும் நஞ்சு தான் என மெய்ப்பித்து விடாதே. என் அக்காளை காப்பாற்று. காப்பாற்று.

முர: அம்மா...அம்மா...

பத்: முரளி, முரளி.

முர: அம்மா அம்மா! என்னை பாரம்மா. என்கூட பேசம்மா... அம்மா அம்மா.

பத்: நம்ம முரளியை பாரக்கா. நம்ம செல்வத்தை பாரக்கா, அக்கா.

முர: ஏம்மா கண்ணை மூடிக்கிட்டே? எங்கூட பேசம்மா.

பத்: தெய்வமே! என் உயிரை எடுத்துக் கொள். என் கூடப் பிறந்தவள் உயிரைக் கொடு. அக்கா. கண்ணை திறந்து பாரக்கா. இதோ உன் தங்கை. ஒருதரம் என்னைப் பாரக்கா. இதோ பார்...நம் முரளி...அக்கா அக்கா.

கண: தெய்வமே! இன்னும் மனம் இரங்கவில்லையா? இவர்களை காப்பாற்று.

பத்: அக்கா! நீ வாழத்தான் வேண்டும். காணாமல் கண்டெடுத்த நம் குலமணியை பாரக்கா. அவன் துடிக்கிற துடிப்பை பாரக்கா. ஒரு தரமாவது பாரக்கா.

முர: தெய்வமே! என் அம்மா உயிரைக்கொடு.

பத்: முரளி.

பார்வதி தலை சற்று அசைகிறது, சுந்தரம் ஆர்வத்துடன் பார்க்கிறான்

முர: அம்மா.

பத்: அக்கா! கண்ணைத்திறந்து பாரக்கா! நம்ம முரளியைப் பாரக்கா.

முர: அம்மா.

கண: கண்ணைத்திறந்து பாருங்கம்மா. செல்வத்தைப் பாருங்கம்மா பெரியம்மா.

பார்வதி கண்களை திறக்கிறாள் நிதானமாக.

முர: அம்மா...அம்மா...அம்மா

பார்: முரளி.

சுந்: பத்மா!

பத்: ஆ....நீங்களா....என்னை மன்னிச்சுடுங்க அத்தான்.

கணக்கப்பிள்ளையும் ஆகாவும் கடவுளை வணங்குகின்றனர். கை கூப்பி நமஸ்காரம் செய்கிறார்கள். பல கஷ்டங்களுக்குப் பின் அக் குடும்பத்தினர் ஒன்றுசேருகிறார்கள்.

டிசம்பர் வெளியீடு



கண்ணன் பிலிம்ஸ்

மனசுக்கேத்த மாப்பிள்ளை

Arts & Coy.

வசனம்: S.A.சுப்பராமன். டைரக்ஷன்: A.சுப்பாராவ்

தயாரிப்பு: S.K.வில்லியப்பன்

REGD. No. M 4523
பேசும் ப
டிஸம்பர் 1958 • 7
லலிதகலா பிலிம்ஸ்
உழவுக்கும் தொழிலுக்
வந்தனை செய்வோம்
தயாரிப்பு:
டைரக்ஷன்
M.A. திருமுகம்